◆ ரா.கி.ரங்கராஜன்

# திக் திக் கதைகள்



IL
TION
KARA

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கறுப்பு ராஜா | 13 |
| 2. | பெங்களூர் தக்காளி | 26 |
| 3. | பழுதை என்று மிதிக்க முடியாது | 35 |
| 4. | அலை - செருப்பு - அவள் | 46 |
| 5. | ஆணி | 60 |
| 6. | புதையலும் கட்டை விரலும் | 71 |
| 7. | வாடகைக் கள்வன் | 79 |
| 8. | ராஜி என் கூட்டாளி | 87 |
| 9. | தினமும் | 101 |
| 10. | படுகை | 106 |
| 11. | மோகனா எங்கே? | 117 |
| 12. | வினை | 132 |
| 13. | ஜானகிராம் தயாரித்த சப்பாத்தி | 144 |
| 14. | தாகம்தான் ஆனால்... | 163 |
| 15. | நடு ஸ்டேஷனில் | 178 |
| 16. | சாக்லெட் டப்பா | 188 |
| 17. | வெளவால் | 194 |
| 18. | கழுத்தை நெறித்து... | 202 |


# 1. கறுப்பு ராஜா

‘‘**நா**ன் நந்தினி இல்லை’’ என்றாள் நந்தினி.

''பின்னே?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் இளைய ஜமீந்தார் பூபதி. நந்தினி அப்படிச் சொன்னது மட்டுமல்ல அவன் ஆச்சரியப்பட்டதற்குக் காரணம். மணமான இந்த ஐந்து வருடத்

தில், அந்தரங்கமாக இருந்தபோதும் சரி... பொது வைபவங் களில் கலந்து கொண்ட சமயங்களிலும் சரி... குடும்பத்தா ருடன் சம்பாஷிக்கும் போதும் சரி, அவள் குரல் இந்த மாதிரி தொனித்தது கிடையாது. அது மனிதக்குரல் மாதிரி இல்லா மல், வேறே, வேறே... அது என்னவென்று ஊகிக்க அவனால் முடியவில்லை.

அவர்கள் ஜமீன் நந்தவனத்தில் தென்றலை அனுபவித்த வண்ணம் உலாவிக் கொண்டிருந்தார்கள்.

வண்ண மயிலொன்று ஒய்யார நடை போட்டு அருகில் வரவே... நந்தினி அதன் தோகையை வருடிக் கொடுத்து, ''இன்றைக்குக் கொய்யாப்பழம் சாப்பிட்டாயா? என் அப்பா தோட்டத்திலிருந்து வண்டி வண்டியாகப் பறித்து அனுப்பி யிருந்தாரே!'' என்று கொஞ்சினாள்.

மயில் தலையை ஆட்டியது. இப்போதும் பூபதி கவனித் தான். அவள் குரலின் வித்தியாசத்தைக் கவனித்துத் திடுக்கிட் டான்.

''நான் நந்தினி இல்லை என்று சொன்னாயே, பின்னே யார்?'' என்று கேட்டான்.

''ராஜா'' என்று அவளிடமிருந்து பதில் வந்தது.

''ராஜாவா? எந்த ஊர் ராஜா?''

''எந்த ஊர் ராஜாவும் இல்லை. நம் திருமணத்தின்போது என் அப்பா சீர்வரிசைகளில் ஒன்றாகக் கொடுத்தாரே, கறுப்பு ராஜா... அதைச் சொன்னேன். பத்து நாள் முன்பு நீங்கள் சுட்டுக் கொன்றீர்களே, அந்தக் குதிரையைச் சொல்கிறேன். அதுதான் இப்போது என் பெயர்.''

''உளறாதே!'' என்று கோபித்தான் பூபதி. அப்படி அதட்டிய விநாடியே அவனுக்குப் பொறிதட்டிய மாதிரி ஓர் உண்மை



புலனாயிற்று. நந்தினியின் குரலில் ஏதோ வித்தியாசம் தென் படுவதாகத் தோன்றியதே, அது என்னவென்ற பயங்கரம் தெரிந்தது.

ஆமாம்... அவளுடைய இனிமையான சாரீரத்தில் ஒரு குதிரையின் கனைப்பு கலந்திருந்தது.

''நந்தினி, என்ன ஆயிற்று உனக்கு?'' என்று அவள் முகத்தைத் தன் பக்கம் திருப்பிக் கடுமையாகக் கேட்டான்.

''என்ன ஆயிற்றென்று எனக்கே தெரியவில்லை. ஆனால், நீங்கள் சுட்டுக் கொன்ற ராஜா என் சின்ன வயது முதல் என் னுடனே வளர்ந்த பிரியமான குதிரை. அதை நீங்கள் கொலை செய்தது ரொம்பத் தப்பான காரியம். அது எனக்குள் புகுந்து கொண்டு, 'என் பெயர் ராஜா... என் பெயர் ராஜா' என்று மந்திரம் ஜபிக்கிற மாதிரி சொல்லிக் கொண்டேயிருக்கிறது'' என்றாள் நந்தினி.

'என்ன இவள், என்னவெல்லாமோ பேசுகிறாள்' என்று திகிலுடன் பார்த்தான் பூபதி. ''பைத்தியம் போலப் பேசாதே'' என்று சொல்லும்போது நிஜமாகவே இவளுக்குப் பைத்தியம் பிடித்திருக்குமோ என்ற பயமும் ஏற்பட்டது. ''நாலு மாசம் முன்பு, வல்லடம் கிராமத்தில், கங்கம்மன் திருவிழா நடக்கிற தென்று அந்தக் குதிரையின் மீதுதானே ஏறிக்கொண்டு போனேன்? சாலையில் ஒரு பள்ளத்தில் நொடித்து அதுவும் விழுந்து என்னையும் தள்ளிவிட்டது. அது முதல் காலை ஒரு தினுசாக இழுத்துக் கொண்டு நடந்தது. சவாரிக்கு லாயக்கில்லை. அதை வைத்துக்கொண்டிருப்பது அசிங்கம்.''

''அதற்காக? பெரிய பாட்டிகூடத்தான் பக்கவாதத்தால் இழுத்து இழுத்து நடக்கிறார். கல்யாணபாளையம் மாமாவுக்குக் கை உதறிக்கொண்டே இருக்கிறது. அவர்களைச் சுட்டுக் கொன்று விடுவோமா?''

''மனிதர்கள் சமாசாரம் வேறு. மிருகங்களின் சமாசாரம் வேறு. ஒப்பிட்டுக் குழப்பாதே. உன் செல்லக் குதிரை ராஜாவை என்ன செய்திருக்க வேண்டும் என்கிறாய்? தீனி போட்டுக் காப்பாற்றுவது தண்டச்செலவுதானே?''

''நம் ஜமீனில் பல பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்குக் குதிரையேற்றம் சொல்லித் தருகிறார்களே... அவர்களுக்கு உபயோகப்பட்டிருக்கும். அதோடு, அது ஒன்றும் காலை இழுத்து இழுத்து நடந்த மாதிரி எனக்குத் தெரியவில்லை. அது உங்கள் கற்பனை'' என்றாள் நந்தினி.

''நன்றாயிருக்கிற குதிரையைச் சுட்டுக் கொல்ல எனக்கு மூளைக்கோளாறா?'' என்றான் பூபதி கோபமாக. ''நடந்தது நடந்தாயிற்று. இப்போது என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?''

''ஒன்றும் செய்ய வேண்டாம். செத்துப்போன கறுப்பு ராஜா எனக்குள் புகுந்து கொண்டிருப்பதுபோல் ஒரு உணர்வு ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. என் குரலில் ஏற்பட்டிருக்கிற மாறுதல் எனக்குத் தெரிகிறது. உங்களுக்குத் தெரியவில்லையா?''

''நேற்று ஏதோ பூஜை, விரதம் என்று சொல்லிக் குளத்துத் தண்ணீரில் ஸ்நானம் செய்துவிட்டு வந்தாய். அதனால் தொண்டை கட்டிக் கொண்டிருக்கும். கொஞ்ச நேரம் வீணை வாசித்தபடி பாடு. சரியாகிவிடும். உள்ளே வா.''

நந்தினியின் இடையை அணைத்துக் கொண்டு அவளை மாளிகைக்கு அழைத்துச் சென்றான் பூபதி. படக்கூடாத ஸ்பரிசம் பட்டுவிட்டது போல அவள் லேசாக விலகிக் கொண்டு நடந்தாள். ஒட்டிப் பழகி இல்லறம் நடத்தி வரும் போது ஏன் அவளிடம் திடீரெனத் தனக்கு ஒட்டுதல் குறைகிறது என்று அவளுக்குப் புரியவில்லை. அதற்குக் காரணம் தன் பிரியத்துக்குரிய குதிரையை அவன் சுட்டுக் கொன்றது மட்டுமல்ல என்றும் தோன்றியது.



அன்று இரவு சயனத்தின் போது பூபதி அவளை அணைத்துக் கொண்டான்.

''வேண்டாம். கொஞ்ச நாளைக்கு என்னைத் தொடாதீர்கள்'' என்று முரட்டுத்தனமாகச் சொல்லிவிட்டு நந்தினி நகர்ந்து கொண்டாள்.

பூபதி ஒன்றைக் கவனித்தான். அவள் வேறு பக்கம் திரும்பி நிற்கும் சமயங்களில், 'நந்தினி' என்று கூப்பிட்டால் அவள் திரும்பிப் பார்ப்பதில்லை. வேறு யாரையோ கூப்பிட்ட மாதிரி பொருட்படுத்தாமல் இருப்பாள். 'ராஜா' என்று கூப்பிட்டால் உடனே திரும்பிப் பார்ப்பாள். அவள் குரலும் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது.

இந்த விசித்திர மாறுபாடுகளை அவன் தன் தந்தையிடமோ, தாயிடமோ சொல்லவில்லை. ஓர் அளவுக்கு அவனிடம் நெருக்கமான மாமனாரிடம் - நந்தினியின் தந்தையான - ஜெகவீரரிடம் மட்டும் சொன்னான்.

அவர் தனது சொந்த ஜமீனைச் சேர்ந்த ஒரு ஜோசியரை அழைத்து வந்து பூஜைகளை நடத்தினார். பூஜையின் முடிவில் ஜோசியர் சொன்னார் – ''ஏதோ தோஷம் நடந்திருக்கிறது. ராஜா என்கிற அந்தக் குதிரையைப் புதைத்த இடத்தில் ஒரு ஹோமம் செய்வோம். அதன்பின் வேறொரு உயர்ந்த ஜாதிக் குதிரையை வாங்கி உங்கள் மருமகன் வளர்க்கட்டும். செத்த குதிரையின் ஆவிக்குச் சந்தோஷம் ஏற்படும்.''

''அபத்தம்!'' என்று பூபதி கேலி செய்தபோதிலும், மனைவியின் விருப்பத்துக்கும் மாமனாரின் யோசனைக்கும் இணங்கி, பதினைந்து மைல் தொலைவில் இருந்த தோப்புப் பகுதிக்கு

அவர்களை அழைத்துக்கொண்டு போனான். குதிரையைப் புதைத்த இடத்தைப் பூபதி காட்ட, ஜோசியர் பூஜை போட்டார்.

அடுத்து, வேறொரு உயர்ந்த சாதி குதிரையை வாங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டது. கடுகத்தனை இடம்கூடக் கறுப்பாக இல்லாமல், முழுக்க முழுக்கப் பால்போல் வெள்ளையாக இருந்த ஒரு குதிரையைக் கோவாவிலிருந்து ஓர் அராபிய வியாபாரி கொண்டு வந்தான்.

ஆயிரம் பவுனுக்கு அதை விற்ற வியாபாரி, ''இது ரொம்ப ரோஷமுள்ள ஜாதிக் குதிரை. ஜாக்கிரதையாக நடத்துங்கள்'' என்று பூபதியிடமும் நந்தினியிடமும் சொன்னான்.

பூபதி சிரித்தான். ''அதென்ன ரோஷமுள்ள குதிரை? பிடிக்காதவர்கள் ஏறினால் முரண்டு பிடித்துக் கீழே தள்ளி விடுமோ?''

''அப்படியில்லை. மனிதர்களில் இரண்டு வகை உண்டு இல்லையா? அநீதியையோ, அக்கிரமத்தையோ கண்டால் வெளிப்படையாக உணர்ச்சிகளைக் காட்டிக் கொள்கிறவர்கள் ஒருவகை. அதுபோல் முரட்டுத்தனமான குதிரைகளும் உண்டு. எதுவும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் உள்ளுக்குள்ளேயே குமைந்து குமைந்து மறுகிப் போகிற மனிதர்கள் இன்னொரு வகை. இந்தக் குதிரை அந்த இரண்டாவது வகை மனிதர்கள் மாதிரி'' என்றான் அராபிய வியாபாரி.

''பஞ்சகல்யாணி குதிரை என்கிறார்களே, அது இது தானா?'' என்று நந்தினி கேட்டாள்.

''பஞ்சகல்யாணி என்று எந்தக் குதிரையும் கிடையாது. அது மிக உன்னதமான குதிரையைக் குறிப்பதற்காகக் கவிஞர்கள் செய்த கற்பனை'' என்றான் அந்த அராபிய வியாபாரி.



''நான் இதைப் பஞ்சகல்யாணி என்றே கூப்பிடப் போகிறேன்'' என்று சொன்ன நந்தினி, ஆசையுடன் அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

பூபதி அவள் பேசுவதைக் கேட்டுப் பிரமித்துப்போய் நின்றான். ஏனெனில், சிறிது காலமாக மாறிப்போயிருந்த அவளுடைய குரல் பழைய இனிமையைப் பெற்றிருந்தது. குதிரைக் கனைப்பின் அறிகுறி கொஞ்சமும் தென்படவில்லை.

மனைவியிடம் ஏற்பட்ட மாறுதலில் சந்தோஷப்பட்டவனாக பூபதி, ''நந்தினி, உள்ளே போகலாம், வா. இன்னும் ஏன் அதன் கழுத்தையே கட்டிக்கொண்டு இருக்கிறாய்?'' என்று சிரித்தான்.

''கொஞ்சம் இருங்கள்... பஞ்சகல்யாணி என்னுடன் பேசுகிறது'' என்றாள் நந்தினி. சற்று நேரம் கழித்து அதைப் பிரிய மனமில்லாதவளாகத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி பூபதியுடன் மாளிகைக்குள் போனாள்.

''என்ன நந்தினி, என்ன பேசிற்று உன் பஞ்சகல்யாணி?'' என்று பரிகாசம் செய்தபடி அவளைப் பார்த்த பூபதி பயந்து போனான். அவள் முகத்தில் அப்படியொரு குரோதமும் வெறுப்பும் நிறைந்து அவன் பார்த்தது கிடையாது அதுவரையில். நான்மாட தீபங்களின் வெளிச்சம் அவள் முகத்தின் உக்கிரத்தை அதிகப்படுத்திக் காட்டியது. எல்லாம் சரியாகிவிட்டது என்று எண்ணியிருந்தவனுக்கு அன்றிரவு படுக்கை அறையில் ஏமாற்றமே கிட்டியது. தூரத்து உறவாக ஒரு கிழவி மாளிகையில் தங்கியிருந்தாள். அவளுடைய அறையில் போய்ப் படுத்துக்கொண்டு விட்டாள் நந்தினி.

அடுத்த நாள் காலை அவன் பஞ்சகல்யாணி குதிரையில் ஏறிக்கொண்டு வெளியே புறப்பட்டான்.

தனியே செல்வதுதான் அவன் வழக்கம். என்றைக்குமே நந்தினி அவனுடன் சென்றது கிடையாது. முன்னெல்லாம் மாளிகை வாசல் வரை வந்து வழியனுப்புவாள். 'ராஜா' சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு வருவது இல்லை. அவன் இரவு வெகு நேரம் கழித்துத் திரும்பும்போது வரவேற்பதும் கிடையாது.

அதுபோல அன்றைக்கும் இரவு அவன் திரும்பியபோது அவள் கவனிக்கவில்லை. காலையில் மாளிகையிலிருந்து பார்த்தபோது, வாசலில் பஞ்சகல்யாணி நிறுத்தப்பட்டிருப்பது தெரிந்தது. அதைப் பார்த்தோமே என்ற மகிழ்ச்சி ஒரு விநாடிதான் அவளிடம் நீடித்தது. உற்றுப் பார்த்தாள். கலவ மடைந்தாள். கண்களைத் தேய்த்துக் கொண்டாள். பார்ப்பது உண்மையா, பிரமையா என்று புரியாதவளாக தடதட வென்று படிகளில் இறங்கி, வாசலுக்கு வந்தாள்.

சூரியவெளிச்சத்தில் வெகு நன்றாக, துளியும் சந்தே மின்றித் தெரிந்தது. பஞ்சகல்யாணியின் பின்னங்கால்கள் இரண்டும் கன்னங்கரேலென்று கறுத்திருந்தன. பஞ்சு வெள்ளையாக மற்ற பகுதிகள் இருந்ததால் அந்தக் கறுப்பு பயங்க மாகத் தனித்துத் தெரிந்தது.

'எப்படி... ஏன்...?' என்று நந்தினி திகைத்து நிற்கையில் பின்னாலேயே வந்து நின்ற பூபதியும் அப்போதுதான் அதை கண்டான். ஒன்றும் புரியாதவனாக அந்தப் பின்னங்கா களைக் கையாலும் உத்தரீயத்தாலும் துடைத்தான். கறுப் போகவில்லை.

''திரும்பி வரும்போது மழை தூறிக் கொண்டிருந்தது ஏதாவது சேறு ஒட்டிக் கொண்டிருக்குமோ?'' என் வண்ணம் மறுபடி துடைத்தான். கறுப்பு அகலவில்லை.

''என்னம்மா பஞ்சகல்யாணி, என்ன நேர்ந்தது உனக்கு?'' என்று நந்தினி அதன் முகத்தை வருடிக் கொடுத்தவாறு விம்



னாள். பஞ்சகல்யாணி வாய்விட்டு எதுவும் பேசவில்லை. நிலத்தை நோக்கியபடி அசைந்துகொண்டு இருந்தது.

''அந்தக் குதிரை வியாபாரி ஏதோ சொல்லி நம்மை ஏமாற்றியிருக்கிறான்'' என்று கோபமாக முணுமுணுத்த வண்ணம் பூபதி திரும்பிப் போய்விட்டான்.

இரண்டு நாள் சென்றபின், மறுபடியும் பஞ்சகல்யாணியின் மீது ஏறிக்கொண்டு வெளியே புறப்பட்டான் பூபதி.

அன்று அவன் திரும்பியபோது, பஞ்சகல்யாணியின் முன்னங்கால்கள் இரண்டும் கறுத்துப் போயிருந்தன.

''சந்தேகம் இல்லாமல் இது ஏதோ வியாதிதான்'' என்று கூறிய பூபதி, மெட்ராஸிலிருந்து வெள்ளைக்கார மிருக வைத்தியர் ஒருவரை வரவழைத்தான். அவருக்கும் இந்த நிறமாற்றம் புரியவில்லை. ஆனால், ''இந்த குதிரை மிக ஆரோக்கியமாக இருக்கிறது. இத்தனை ஆரோக்கியமான குதிரையை நான் பார்த்ததே இல்லை'' என்று நற்சாட்சி தெரிவித்து விட்டுப் போனார்.

அன்றைக்கும் நந்தினி பஞ்சகல்யாணியின் கழுத்தை அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

இதற்கு அடுத்த வாரம் பூபதி மீண்டும் புறப்பட்ட போது, ''தயவு செய்து எங்கும் போகாதீர்கள். அப்படியே போனாலும் வேறு குதிரையில் ஏறிப் போங்கள்'' என்று மன்றாடினாள். பூபதி கேட்கவில்லை.

மாலையில் அவன் திரும்பியபோது பஞ்சகல்யாணியின் வால், வயிறு, முதுகு ஆகிய பெரும்பகுதி கறுப்பாகி இருந்தது. முகம் மட்டுமே வெளுப்பாக இருந்ததால் அது குதிரை மாதிரியே இல்லாமல் கோரமாக, விசித்திரமாகக் காணப்

பட்டது. நந்தினிதான் அதைக் கண்ணீர் சிந்தத் தடவிக் கொடு தாள். பூபதி எதுவும் பேசவில்லை. நந்தினியின் கண்ணீர் சாதாரண சூடாக இல்லாமல் கொதித்துக் கொண்டு வெளிப்படுவதை அவன் அறியக் காணோம்.

சில தினங்கள் கழித்து, பஞ்சகல்யாணியுடன் பூபதி வெளியே போய்விட்டு வந்தபோது, லாயத்துக்கு வெளியே நந்தினி காத்திருந்தாள். அவள் எதிர்பார்த்தபடியே பஞ்ச கல் யாணியின் முகமும் கழுத்தும் கறுப்பாகி, முழுக்க முழுக்க கறுப்புக் குதிரையாக அது மாறிவிட்டிருந்தது.

ஆனால், நந்தினி இப்போது சீற்றத்துடன் இருக்கவில்லை அகன்ற வெள்ளிப் பாத்திரத்தில் பால் வைத்துக்கொண்டு கா திருந்தவள் அதை ஒரு கிண்ணத்தில் ஊற்றி, இனிய புன்னகை யுடன் பூபதியிடம் நீட்டினாள். குதிரையிலிருந்து இறங்கிய வன் அவளிடம் ஏற்பட்டிருந்த மாறுதலைக் கண்டு வியப்பு மகிழ்ச்சியும் ஒருங்கே அடைந்தவனாக அவளை அணைத் படி பளிங்கு மேடையில் உட்கார்ந்து பாலைக் குடித்தான்.

அவன் பருகி முடிக்கும்வரை காத்திருந்த நந்தினி, ''இன்று எந்த வேசி வீட்டுக்குப் போய் வந்தீர்கள்?'' என்று சாந்தமாக கேட்டாள்.

அவன் அதிர்ச்சியுடன் நிமிர்ந்து நோக்கினான் அவளை ''என்ன பிதற்றுகிறாய்?'' என்று அவன் அதட்டிய போதிலும் உண்மையை மறைக்க முயலுவது அவன் முகத்தில் வெளிப் பட்டது.

''பிதற்றவில்லை'' என்றாள் நந்தினி. ஆயினும் அவள் குரலிலும், முகத்திலும் சினம் தென்படவில்லை. புன்னகை தான் படர்ந்திருந்தது. ''தோப்புப் பகுதியில், செத்துப் போன ராஜாவுக்காகப் பூஜை போட்டோமே, அப்போதே ஒரு பெண் என்னிடம் சொன்னாள்'' என்றாள்.



''என்ன சொன்னாள்...?''

''அந்த வட்டாரத்தில் இருந்த ஒரு தாசியுடன் நீங்கள் கூத்தடித்ததைப் பற்றிச் சொன்னாள். ராஜாவின் மீது உங்களுடன் அவளையும் ஏற்றிக் கொள்ளப் பார்த்தீர்கள். கட்டிய மனைவிக்கு நீங்கள் துரோகம் செய்வது ராஜாவுக்குப் பிடிக்கவில்லை. அவளை ஏற்றிக் கொள்ளாமல் கீழே தள்ளிக் கொண்டிருந்தது. மறுபடி மறுபடி நீங்கள் பலநாள் முயன்றீர்கள். அது இடம் தரவில்லை. உங்களுக்குக் கடும் கோபம். காலை இழுத்து இழுத்து நடக்கிறது என்று சாக்குச் சொல்லி ராஜாவைச் சுட்டுக் கொன்றீர்கள்.''

''எல்லாம் கற்பனை...'' என்று சிரித்து மழுப்பினான் பூபதி.

அதை நந்தினி லட்சியம் செய்யவில்லை. தொடர்ந்து, ''அந்த அராபிய வியாபாரி சொன்னது தப்பில்லை. உணர்ச்சிகளை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளும் முரட்டுத்தனம் ராஜாவிடம் இருந்தது. பஞ்சகல்யாணி அதற்கு நேர் விரோதமான குதிரை. மறுபடி நீங்கள் வேறொரு வேசியிடம் போனீர்கள். நீங்கள் செய்யும் துரோகம் அதற்கும் பிடிக்கவில்லை. ஆனால், தன் உணர்ச்சிகளை உள்ளுக்குள் அடக்கிக்கொண்டு அவளைத் தன் முதுகில் சுமந்தது. உள்ளுக்குள் மறுகியதன் விளைவாக, அதன் உடம்பில் மாறுதல் ஏற்பட்டது. பின்னங்கால்கள் கறுத்துப்போயின'' என்றாள்.

''கட்டுக்கதை! கட்டுக்கதை!'' என்றான் பூபதி.

இந்த முறையும் அவன் குறுக்கீட்டை அலட்சியப்படுத்தினாள் நந்தினி. ''பஞ்சகல்யாணியிடம் 'என்னம்மா நேர்ந்தது?' என்று கேட்டது நானல்ல... என்னுள் இருந்த கறுப்பு ராஜாவின் ஆவிதான். பஞ்சகல்யாணியால் வாய்விட்டுப் பேச

முடியவில்லை. ஆகையால், காலினால் நிலத்தில் கீறிக் கோடு கிழித்தது. அந்தக் கோடு வடக்குத் திசையைக் காட்டவே, ரகசியமாக ஆள் அனுப்பி விசாரித்தேன். வடக்கே ஒரு கிராமத்தில் இன்னொரு வேசியுடன் நீங்கள் தொடர்பு வைத்திருக்கிறீர்கள் என்று தெரிந்தது. முன்னங்கால்கள் கறுப்பானபோது, தெற்குத் திசையைச் சுட்டிக்காட்டி நிலத்தில் கீறியது. அங்கேயும் ஒரு வேசி உங்களுக்கு இருக்கிறாள் என்று ஆள் அனுப்பி அறிந்துகொண்டேன். பிறகு கிழக்குத் திசை... இன்றைக்கு மேற்குத் திசை. பஞ்சகல்யாணி உயர் ஜாதி குதிரை. ஒழுக்கம் கெட்ட ஒருத்தியையும் துரோகம் செய்யும் ஒருவனையும் தன் மீது ஏற்றிக்கொள்கிறோமே என்கிற அவமானத்தில் குமைந்து குமைந்து உணர்ச்சிகளை உள்ளடக்கி உள்ளடக்கி, அதற்கு உடம்பே கறுத்துப் போய்விட்டது.''

பூபதி சிலைபோல உட்கார்ந்திருந்தான். பால் பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு நந்தினி தொடர்ந்தாள்.

''ஆனால், நான் இந்தப் பஞ்சகல்யாணியின் ஜாதியைச் சேர்ந்தவள் அல்ல. கறுப்பு ராஜாவின் ஜாதியைச் சேர்ந்தவள். என் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு உங்கள் துரோகத்தை மன்னிக்க மாட்டேன். உங்களுக்குத் தண்டனை கொடுக்கத் தவறமாட்டேன்'' என்று சிரித்தாள் நந்தினி. அந்தச் சிரிப்பில் காளியின் சீற்றம் நிறைந்திருந்தது.

''த... தண்டனையா...?'' என்று தடுமாறினான் பூபதி. பளிங்கு மேடையில் அவன் உடல் சிறிது சிறிதாகச் சரிந்தது.

''ஆமாம். நீங்கள் குடித்தது பால் அல்ல. விஷம்!'' என்றாள் நந்தினி.

பொத்தென்று பூபதி விழுந்த அதே விநாடி தடாலென்று இன்னொரு சத்தமும் கேட்டது. மீதிப் பாலைப் பருகிய பஞ்ச



கல்யாணி பூமியில் விழுந்து புரண்டு எழுந்து தள்ளாடுவதைக் கண்டாள் நந்தினி. வருத்தத்துடன் அதைப் பார்த்து, ''ஆமாம், பஞ்சகல்யாணி... நீ தற்கொலை செய்து கொண்டதும் சரியான காரியம்தான். பால் வெள்ளையான உன் பட்டுமேனி கறுத்துச் சிறுத்துக் கறைபட்ட பின்னர் உயிர் வைத்துக் கொண்டு இருப்பது உன் பிறவிப் பெருமைக்குப் பெரும் அவமானம்தான்'' என்று அவள் சொன்னதும்...

அந்தப் பஞ்சகல்யாணி குதிரை தன் முன்னிரு கால்களையும் தூக்கி நீளமாகக் கனைத்துவிட்டுச் சுருண்டு வீழ்ந்து மடிந்தது.

★

# 2. பெங்களூர் தக்காளி

சாயந்தரம் ஜி.எச்.சுக்குப் போய், ''தனபால் எப்படி இருக்கிறான்?'' என்று ட்யூட்டி கான்ஸ்டபிளை விசாரித்தேன். அன்று காலை பூந்தமல்லிக்கு அருகே ஒரு ரெய்டில் தனபாலை மடக்கியிருந்தேன். கள்ளக் கடத்தலுடன் காரில் ஓடிக் கொண்



டிருந்தவனைச் சுட்டுத்தான் மடக்க வேண்டியிருந்தது. காலில் நல்ல காயம் அவனுக்கு.

''பரவாயில்லை. ஆனால் பத்து நாள் படுத்திருக்கணும்னு டாக்டர் சொன்னார்.''

தோளிலும் தலையிலும் கட்டுப் போட்டிருந்தது தனபாலுக்கு. என்னைக் கண்டதும் எழுந்து உட்கார முயலுகிற மாதிரி பாவனை செய்தான்.

''ஸ்டேட்மெண்ட்டெல்லாம் வாங்கிப் போய் விட்டார்களா?'' என்றேன், பக்கத்தில் உட்கார்ந்து.

''ஊம்'' என்று தலையை அசைத்தான்.

''பார்த்தால் நல்லவன் மாதிரி இருக்கிறாயே? உனக்கேன் இந்தத் தொழில்?'' என்றேன்.

மௌனமாயிருந்தான். பிறகு, ''வயிற்றுப் பிழைப்பு'' என்றான்.

''வயிற்றுப் பிழைப்புக்குக் கள்ளக் கடத்தல்தான் அகப்பட்டதா? மனைவி, குழந்தைகள் உண்டா?'' என்று கேட்டேன்.

''மனைவி இல்லை. இரண்டு வருஷம் முன்பு இறந்து விட்டாள்.''

''குழந்தை?''

''இருக்கிறது'' என்று சொல்லி, முதன் முறையாக என்னை நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்கள் ஈரத்தால் பளபளப்பதைக் கண்டேன். நர்ஸ் அந்தண்டை போய் விட்டாளா என்று ஒரு முறை பார்த்துக் கொண்டான். ''எட்டு வயதாகிறது. கங்கான்னு பெயர். என்கிட்டே அதுக்கு உயிர், இன்ஸ்பெக்டர் சார்...''

அவனுடைய வீட்டு விலாசத்தை ஏற்கெனவே தெரிந்து வைத்திருந்தேன். ''ஆள் அனுப்பி, நாளைக்கு அதை அழைச்சிட்டு வரச் சொல்றேன்'' என்றேன்.

''வேண்டாம் சார், வேண்டாம்!'' என்று பரபரப்புடன் தடுத்தான் அவன். ''நான் இப்படிப் போலீஸ் காவலில் ஆஸ்பத்திரியில் கிடப்பதைக் கண்டால் அதுக்கு எதுவும் புரியாது. புரிஞ்சுதானால் தாங்காது.''

கொஞ்ச நேரம் மௌனமாயிருந்தோம். பிறகு நான் புறப்பட்டேன்.

''இன்ஸ்பெக்டர் சார்'' என்று கூப்பிட்டான்.

திரும்பி வந்தேன்.

''ஒரு உதவி செய்யணும் சார்.''

''சொல்லு.''

''நான் குணமாகித் திரும்புகிற வரையில் நீங்க தினம் எங்கள் வீட்டுக்குப் போய் ஒரு தக்காளிச் செடிக்குத் தண்ணி ஊத்திட்டு வரணும்.''

விசித்திரமாயிருந்தது அவன் கோரிக்கை. உட்கார்ந்தேன். ''தக்காளிச் செடிக்கா?''

அவனுக்குக் களைப்பினால் முகத்தில் வியர்வை துளித்தவாறு இருந்தது. குரல் நின்று நின்று, கிணற்றினடியிலிருந்து வருகிற மாதிரி கேட்டது.

''ஆமாம் சார்... என் பெண் கங்காவுக்கு அந்தச் செடி மேலே ரொம்பப் பிரியம். கேட்டைத் திறந்ததும், இடது பக்கம், ஜன்னலுக்கு நேர் கீழே இருக்கும்... போனீங்கன்னா சுலபமா கண்டுபிடிக்கலாம். பக்கத்திலே வேறு எந்தச் செடியும் கிடையாது. அந்தச் செடி எப்படி முளைச்சுதுன்னு கேட்டீங்கன்னா ...''



''மெதுவாச் சொல்லு. எனக்கு அவசரம் இல்லை.''

மெதுவாகவே அவன் சொன்னான். ''தாயில்லாப் பிள்ளைன்னு கங்கா மேலே எனக்கு ரொம்பப் பாசம், சார். எந்த ஊருக்குப் போனாலும் அதுக்காக ஏதாவது வாங்கிட்டு வருவேன். போன மாசம் பெங்களூர் போயிருந்தேன். அருமையான தக்காளிப் பழம் வாங்கிட்டு வந்தேன். கங்கா தோட்டத்தைப் பார்த்தாற்போல இருக்கிற அந்த ஜன்னலண்டை உட்கார்ந்திருந்தது. 'உடம்புக்கு நல்லது சாப்பிடு' ன்னு சொல்லி ஒரு பழத்தை நறுக்கிக் கொடுத்தேன். ஒரு துண்டம்தான் வாயில் போட்டுக்கிட்டது. உடனே, 'ஐய! எனக்குப் பிடிக்கலே'ன்னு சொல்லி உடனே வெளியே துப்பிட்டுது. ஆன மட்டும் கெஞ்சினேன். பிடிக்காதுன்னு பிடிவாதமாய்ச் சொல்லிட்டுது. நானும் விட்டுட்டேன். ஒரு வாரம் கழிச்சுத் தோட்டத்தில் பார்க்கிறேன்...''

''தக்காளிச் செடிதானே? சும்மா பிதுக்கிப் போட்டால் கூட முளைச்சிடுமே?'' என்றேன்.

''ஆமாம் சார். அதேதான்! தக்காளிச் செடி முளைச்சிருந்தது. கங்காவைக் கூப்பிட்டுக் காட்டினேன். அதுவே போட்ட தக்காளிச் செடின்னு சொன்னதும் அதுக்கு ஒரே சந்தோஷம். தினம் அதைப் பக்கத்திலே வைச்சுக்கிட்டுத் தண்ணி ஊத்துவேன். ஆடுமாடு நுழைஞ்சிடாமல் வாசல் கேட்டைத் தாள் போட்டே வைச்சிருப்பேன். இப்ப நான் பார்க்காமல், தண்ணி ஊத்தாமல் இருந்தால், செடி பாழாய்ப் போயிடும். என் குழந்தைக்கு மனசு வெடிச்சுப் போயிடும் சார்...''

''கவலைப்படாதே, நான் போய்ப் பார்த்துக்கறேன்'' என்று அவனுக்கு உறுதி கூறினேன்.

வீட்டில் அன்றிரவு சாப்பிடும்போது ராஜத்திடம் அந்த வேடிக்கையைச் சொன்னேன். ''ஐயோ பாவம், கட்டாயம் யாரையாவது அனுப்பித் தண்ணி ஊத்தச் சொல்லுங்க'' என்றாள். அவளுக்குக் கடவுள் புத்திர பாக்கியம் தரவில்லை, பாவம்.

''காயம் பட்டுப் படுக்கையில் கிடக்கிற கைதி என் கிட்டே கேட்ட கோரிக்கை அது. அதை நானே நிறைவேற்று கிறேன்'' என்று பதிலளித்தேன்.

மறுநாள் காலை என் மோட்டார் பைக்கில் புறப்பட்டு, தனபாலின் வீட்டை அடைந்தேன். சி.பி. ராமசாமி ஐயர் ரோடின் குறுக்கே முளைத்த ஒரு தெரு அது. சின்ன வீடு. ஆனால் தனியான வீடு. சின்ன கேட்.

வாசலுக்கு வந்த அந்த ஏழெட்டு வயதுக் குழந்தையைக் கண்டதுமே அவள்தான் கங்கா என்று தெரிந்து கொண்டேன். மூக்கும் முழியுமாக இருந்தாள். நல்ல தரமான கான்வென்ட் ஸ்கூலின் யூனிபாரத்தில் இருந்தாள். போகட்டும், தான் கெட்டாலும் குழந்தையாவது நல்ல படிப்புப் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்ற ஆதங்கம் இருக்கிறதே?

''அப்பா வரல்லே?'' என்றாள் அவள்.

''வருவார், வருவார். பம்பாய் போயிருக்கிறார்'' அவளைத் தட்டிக் கொடுத்தபடியே உள்ளே போனேன். ஒரு கிழவி எட்டிப் பார்த்தாள். கங்காவைப் பார்த்துக் கொள்வதற்காக அமர்த்தப்பட்டவள் என்று ஊகித்தேன். செடிக்குக் கிழவி தண்ணீர் ஊற்ற மாட்டாளோ?

தனபால் சொன்ன இடத்தில் அந்தத் தக்காளிச் செடி முழங்கால் உயரத்துக்கு வளர்ந்திருந்தது.

அருகே போரிங் பம்ப் இருந்தது. வாளியில் தண்ணீர் அடித்து எடுத்து வந்து ஊற்றினேன். கங்கா பக்கத்திலிருந்து



பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள். ''நான் தினம் வருவேன். இதுக்குத் தண்ணி ஊத்துவேன். இந்தச் செடி நல்லா இத்தனை உயரம் வளரும்'' என்றேன்.

கங்கா முகமலர்ந்து சிரித்தாள். சிரிக்கும்போது இன்னும் அழகாயிருந்தாள்.

அடுத்த இரண்டு மூன்று நாளும் நான் தினம் போய்த் தண்ணீர் ஊற்றி விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தேன். ராஜம் கூட ''என்ன இன்ஸ்பெக்டர் சார், தோட்ட ட்யூட்டி பார்த் தாச்சா?'' என்று பரிகாசம் செய்யலானாள்.

''அந்தக் குழந்தையை நீ பார்த்தால் உயிரை விட்டு விடுவாய்'' என்றேன்.

''அப்படியா? ஒருநாள் நம்ம வீட்டுக்கு அழைச்சிட்டு வாங்களேன். இங்கே நம்மோடு சாப்பிட்டு விட்டுத் திரும்பக் கொண்டு போய் விட்டு விடுங்கள். எனக்கு ரொம்ப ஆசையாயிருக்கிறது'' என்றாள் ராஜம்.

அவள் கண்களில் தெரிந்த ஏக்கம் என் மனசைப் பிழிந்தது. ''சரி அழைச்சிட்டு வர்றேன். நீ சமையல் பண்ணி வை'' என்றேன்.

சொன்னபடியே கங்காவை, அந்தக் கிழவியிடம் அனுமதி பெற்று அழைத்து வந்தேன். அருமையான சாப்பாடு.

இரவு எட்டு மணிக்கு அவளை அவள் வீட்டில் திரும்பிக் கொண்டு போய் விட்டேன். என் மனம் யோசனையில் ஆழ்ந் திருந்தது.

அன்றிரவு பன்னிரண்டு மணி இருக்கும். மோட்டார் பைக்கைத் தெருக்கோடியில் ஒரு ஜவுளிக்கடையின் இருட்டு வெராந்தாவில் நிறுத்திவிட்டு அடிமேலடி வைத்துத் தனபாலின்

வீட்டை நெருங்கினேன். காம்பவுண்டு சுவரோடு சுவராகப் பதுங்கிக் கொண்டு கவனித்த வண்ணம் இருந்தேன். மூச்சு விடும் ஓசை கூடக் கேட்கக் கூடாதென்று அடக்கிக் கொண்டு காத்திருந்தேன். கான்ஸ்டபிள்கள் அடுத்த வீட்டருகே தயாராக இருந்தார்கள்.

எங்கோ ஒரு மணி அடித்தது. தேய்பிறை நாள். காலடி ஓசை கேட்டது.

இரண்டு பேர் வருவது தெரிந்தது. ஓசைப்படாமல் தன பாலின் வீட்டுக்குள்ளே நுழைந்தார்கள்.

தக்காளிச் செடியினருகே நின்றார்கள். சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டார்கள்.

ஒருவன் அந்தச் செடியை வெடுக்கென்று பிடுங்கி எறிந் தான். பொத்தென்று பத்தடி தள்ளிப் போய் விழுந்தது. செடி இருந்த இடத்தில் மற்றவன் பரபரவென்று தோண்டினான்.

அவன் ஒரு சிறு பெட்டியை வெளியே எடுத்த அதே வினாடி நான் இருட்டிலிருந்து குபீரென்று வெளியே வந்து, இருவரையும் கழுத்தில் கை வைத்து ஒரே அமுக்காய் அமுக்கித் தள்ளினேன். காத்திருந்த கான்ஸ்டபிள்கள் ஓடிவந்து அவர் களை மடக்கிக் கொண்டார்கள்.

அவன் கையிலிருந்த சிறிய பெட்டியைத் திறந்து பார்த் தேன். அந்த அரையிருட்டில் ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்தன - வைரங்கள்!

ஆஸ்பத்திரியில் தனபாலைச் சந்திக்கச் சென்றேன். ஆனால் எல்லா விவரத்தையும் உடனே சொல்லிவிடவில்லை.

''தனபால், உன் குழந்தை கங்காவை எங்கள் வீட்டுக்குச் சாப்பாட்டுக்கு அழைத்துப் போயிருந்தேன்'' என்றேன்.



''ரொம்ப சந்தோஷம் சார்'' என்றான்.

''என் மனைவி பல ஐட்டங்கள் செய்திருந்தாள். அதிலும் பெங்களூர் தக்காளியை நறுக்கி உப்பு மிளகுத் தூள் கலந்து...''

அவன் முகத்தைப் பார்த்தேன். கறுத்திருந்தது.

''ஆனால் அதை கங்காவுக்குப் போடவில்லை. 'உனக்குத் தான் பிடிக்காதே! துப்பிவிடுவாயே!' என்று நான் சொன்ன தும், 'இல்லையே! எனக்குத் தக்காளி ரொம்பப் பிடிக்குமே!' என்று சொல்லிக் கேட்டுக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டாள்...''

தனபால் எழுந்து உட்கார்ந்தான். அவன் உடம்பில் பதட் டம் தெரிந்தது.

''ஆகையால் கங்காவுக்குத் தக்காளி பிடிக்காதென்றும் அவள் துப்பியதால் முளைத்த செடியென்றும் நீ சொன்னது சும்மா கதை என்று தெரிந்து கொண்டேன். அந்தச் செடிக்குத் தண்ணீர் ஊற்றச் சொன்னதற்கு வேறு காரணம் இருக்க வேண் டும் என்று நினைத்து, ஒளிந்திருந்து கவனித்தேன். தண்ணீர் ஊற்றுவது யாருக்கோ நீ கொடுக்கிற சைகை என்று புரிந்து கொண்டேன். உன் கூட்டாளிகளின் கடத்தல் வைரத்தை நீ அங்கேதான் புதைத்திருந்தாய். அதை அவர்களுக்குத் தெரி விக்க வேண்டும். ஆனால் யார் மூலமும் சொல்லியனுப்ப முடியாமல் கைதியாக இருக்கிறாய். ஆகவே என்னையே அடையாளம் காட்ட வைத்தாய்...''

அவன் என் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''சரி... என்ன செய்தீங்க அதற்காக?'' என்று பதறினான்.

''அவர்களை மடக்கி லாக்கப்பில் ஒப்படைத்தாயிற்று!'' பெருமையுடன் மார்தட்டிக் கொண்டேன்.

''ஐயோ! என் குழந்தை! என் கங்கா!'' என்று அவன் அலறினான்.

''ஏன்? என்ன அவளுக்கு?''

''அந்த வைரங்களைத் தங்களிடம் சேர்ப்பிக்காட்டி என் குழந்தையைத் தீர்த்திடுவேன்னு எங்க தலைவர் எச்சரிக்கை செய்திருந்தார் சார்! அதுக்காகத்தானே செடியின் கீழே அடையாளம் காட்டினேன். கங்கா! கங்கா!''

எனக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

★

# 3. பழுதை என்று மிதிக்க முடியாது

திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவிலுள்ள வீட்டிலிருந்து புறப்பட்டு, குளத்தங்கரைக்குப் பக்கமுள்ள ஒரு தெருவழியே கடற்கரைக்குச் சென்று, அந்த

வழக்கமான சிமெண்ட் பெஞ்சில் உட்காரும் வரையில், சுமார் இருபது இருபத்தைந்து பேராவது குசலம் விசாரித்திருப் பார்கள்.

''வணக்கம், அம்மா.''

''நமஸ்காரம், டீச்சர்.''

''குட் ஈவினிங், மேடம்.''

காதில் வைரக் கம்மலும், கையிலும் கழுத்திலும் அடுக் கடுக்கான பவுன் நகைகளும், மேனியில் பட்டுப்புடவையும், கையில் லாவகமாகப் பிடித்த குடையுமாக, மாஜி ஹெட் மிஸ்ட்ரஸான தனலக்ஷ்மி மெரினா பெஞ்சில் அமர்ந்திருக்கும் கம்பீரத்தைப் பார்க்கும்போது, அவளைத் தெரியாதவர்களுக் கும் கூட அவளுக்கு வணக்கம் சொல்லத் தோன்றும்.

''வேர்க்கடலை சூடாயிருக்குது அம்மா'' - ஒரு சிறுவன் வேண்டுமென்றே கேட்டான், கடலை கொறிக்கிற 'டைப்' அல்ல இந்த அம்மாள் என்று தெரிந்திருந்தும்.

''பள்ளிக்கூடம் போகிறாயா நீ?'' என்று அவனை விசாரித்தாள் தனலக்ஷ்மி.

''ஆறாங் கிளாஸ் படிக்கிறேனுங்க. சாயங்காலம் மட்டும் தான் இது'' என்றான் பையன்.

''எந்த ஸ்கூல்?''

''ஜி.வி. ஹைஸ்கூல்.''

''ஒழுங்காய்ப் படி'' என்று சொல்லி அவனை அனுப் பினாள் தனலக்ஷ்மி.

மெரினா சாலையோரமாக ஒரு நீள உடல் சொகுசுக் கா நிற்க, க்ளிக்கென்று கதவைத் திறந்து கொண்டு இறங்கும் ஒ



மங்கையிடம் தனலக்ஷ்மியின் கவனம் சென்றது. கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்த போதிலும், அடையாளம் தெரிந்து விட்டது - சுமித்ரா என்று. இருபுறமும் கண்ணாடியை ஏற்றி விட்டுக் கதவைப் பூட்டும் அந்த முன்னாள் மாணவியை, குடையின் வளைவில் மோவாயைப் பதித்தபடி கவனித்தாள் தனலக்ஷ்மி.

அந்தப் பத்து அல்லது இருபது வினாடிகளுக்குள் சுமித்ராவைப் பற்றிய அத்தனை விஷயங்களும் நினைவுக்கு வந்துவிட்டன.

ப்ரிபரேடரி பள்ளி என்ற ஆரம்பப் பள்ளியில், நர்சரி வகுப்புக்கு ஆசிரியையாக இருந்தபோது, குழந்தை சுமித்ரா வந்து சேர்ந்தாள்.

அந்த வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளில் பல, பாவாடை அல்லது ஃப்ராக் கட்டிக் கொண்டு வருமே தவிர உள் டிராயர் போட்டுக்கொண்டு வராது. வகுப்புக்கு வந்ததும், தனலக்ஷ்மி யின் முதல் வேலை, ஒவ்வொருவரையும், ''ஜட்டி போட்டுக் கொண்டு வந்தாயா?'' என்று கேட்பது தான். 'ஓ' என்று தலை ஆட்டும்போதே எது பொய் எது நிஜம் என்று கண்டுபிடித்து விடுவாள் தனலக்ஷ்மி. பொய்யென்று தோன்றினால், ''எங்கே, ஜட்டியைக் காட்டு?'' என்பாள். வெட்கத்துடன் ஒப்புக்கொள் ளும் குற்றவாளிக் குழந்தை.

இந்த சுமித்ராவை மட்டும் தனலக்ஷ்மியினால் ஒரு தடவை கூடச் சரியாகக் கண்டுபிடிக்க முடிந்ததில்லை. டிராயர் போட் டிருப்பாள் என்று பாராட்ட நினைத்திருக்கையில் போட் டிருக்க மாட்டாள். தண்டிக்க நேரிடும். போட்டிருக்க மாட் டாள் என்று பிரம்பைக் கையில் எடுக்கிறபோது கட்டாயம் போட்டுக் கொண்டிருப்பாள்.

சுமித்ரா, உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றபோது, தன லக்ஷ்மியும் அங்கே ஆசிரியையாகச் சென்றாள். பிறகு தலைமை ஆசிரியையாகப் பதவி உயர்வு பெற்ற சமயம், சுமித்ரா தன் கடைசி வருடத்தை முடித்துக் கொண்டிருந்தாள். வகுப்பில் ஒரு பெண்ணின் பாட புத்தகங்களை ஒளித்து வைத்து, அவளை அழ வைத்தாள் என்று ஓர் ஆசிரியையிடமிருந்து புகார் வந்திருக்கும். அதற்காக அவளைக் கூப்பிட்டு விசாரிக்கிற சமயத்தில், 'படிப்பில் எமகாதகி' என்று இன்னோர் ஆசிரியை அவளைப் பற்றி நற்சாட்சி தந்து, புகாரின் கூரை மழுக்கி விடுவாள். இன்னொரு சமயம் மார்க்குகள் மிகக் குறைவாக வாங்கியிருப்பாள். ஆனால் பிராக்ரஸ் ரிப்போர்ட்டை அம்மாவிடம் காட்டாமல், தானே திருட்டுக் கையெழுத்துப் போட்டுக் கொணர்ந்து விட்டாள் என்று தெரிய வரும். அவளைப் பள்ளிக்கூடத்திலிருந்தே நீக்க நினைத்தால் அந்த வருடம் 'ஸ்போர்ட்'ஸில் சுமித்ராதான் முதன்மையாக நின்று பள்ளியின் மானத்தைக் காத்தாள் என்று ஒரு செய்தி வந்துசேரும்.

சுமித்ரா தகப்பனார் இல்லாத பெண் என்றும், தாய் சமையற்காரியாக வேலை செய்து ஒரே மகளைக் காப்பாற்றுகிறாள் என்றும் தெரிந்தது. அந்த வருடம் - எட்டு ஆண்டுகளுக்கு முன்பு - எஸ்.எஸ்.எல்.சி.யில் சுமித்ரா தேறிவிட்டாள் என்று தெரிந்த பிறகு, இன்றுதான் அவளைப் பார்க்க நேரிடுகிறது.

''சௌக்கியமா சுமித்ரா?'' என்று கேட்டாள் தனலக்ஷ்மி, தன்னைக் கடந்து அவள் செல்கையில்.

அவள் திகைத்துத் திடுக்கிட்டுத் திரும்பினாள். ஒரு வினாடி அவள் முகம் இருளடைந்த மாதிரி இருந்தது. உடனே சுதாரித்துக் கொண்டு புன்னகையுடன், ''ஹெட்மிஸ்ட்ரஸ் இல்லை? நமஸ்காரம்'' என்றவாறு அவள் அருகில் அமர்ந்து கொண்டாள்.



''ரிடையராகி இரண்டு வருஷம் ஆகிறது'' என்றாள் தனலக்ஷ்மி, அந்த முன்னாள் மாணவியின் குதியுயர்ந்த ஜோடுகளையும், தாழ வெட்டப்பட்ட பிளௌஸையும் கணக்கெடுத்தபடி. ''இப்போது எங்கே இருக்கிறாய்?''

''நைஜீரியாவில்'' என்றாள் சுமித்ரா. ''யுனெஸ்கோவில் ஆசிரியையாகத் தேர்ந்தெடுத்தார்கள். வருஷத்துக்கு இரண்டு மாதம் பெய்ட் ஹாலிடே தருகிறார்கள். பெர்லின், பாரிஸ், ரோம் என்று வருஷா வருஷம் போய்விடுவேன். இந்த வருஷம்...''

''தாய்நாடு நினைவு வந்ததாக்கும்?'' என்றாள் தனலக்ஷ்மி. ''உன் அம்மா - ?''

''நோ மோர். ஐந்து வருஷமாகிறது.''

''கல்யாணம் பண்ணிக் கொண்டுவிட்டாயா?''

''பி.டி. படிக்கும்போதே ஆகிவிட்டது.''

''என்ன பண்ணுகிறார்?''

''இங்கேதான் இருக்கிறார். கமிஷன் ஏஜென்ஸி. வருடத்துக்கொருதரம் யு.கே.யிலாவது பிரான்ஸிலாவது சந்தித்துக் கொள்வதோடு சரி. கார்கூட அவருடையதுதான்.''

''நன்றாயிருக்கிறது'' என்று அந்த ஹெரால்ட் காரைப் பாராட்டுகிற மாதிரி தனலக்ஷ்மி பார்த்தவிதம், மாஜி மாணவியின் வாழ்க்கை முறை நன்றாயில்லை என்று சொல்வது போல் இருந்தது.

''உங்கள் வீட்டில்...'' என்று சுமித்ரா கேட்டாள்.

''இந்தியாவின் நாலு மூலையில் நாலு பெண்களும் பெரிய பெரிய பதவிகளில் இருக்கிறார்கள்'' என்று சிரித்தாள் தனலக்ஷ்மி. ''போன வாரம் கூட ஒருத்தியோடு இருந்து விட்டுத்தான் வந்தேன்.''

''அவர்... ஸார்...''

''இந்த வருஷம் ரிடையராகிறார். நாங்கள் இரண்டே பேர் தான். ஒருநாள் உன் கணவரை அழைத்துக் கொண்டு வாயேன்.''

''கட்டாயம் மேடம்'' என்று கூறிவிட்டு சுமித்ரா மௌன மாயிருந்தாள்.

எழும்பி வரும் முழு நிலவையும், பொங்கித் தாவும் அலைகளையும் பார்த்தவாறு இருவரும் இருந்தார்கள்.

''இன்று சித்ரா பௌர்ணமி, இல்லையா?'' என்று தன லக்ஷ்மி கேட்டாள்.

''ஆமாம், மேடம்.''

''சித்ரான்னங்களுடன் நாமெல்லாம் ஒரு தரம் இங்கே வந்தோம் இல்லை?''

''ஆமாம், மேடம். நான் ஐந்தாம் பாரம் படித்துக் கொண் டிருந்தபோது –'' என்று பதிலளித்த சுமித்ராவின் குரலில் ஒரு சோகமும் சுமையும் இருந்ததைக் கண்டாள் தனலக்ஷ்மி.

அந்தச் சித்ரா பௌர்ணமி, சுமித்ராவை மேலுமொரு புதி ராகக் காட்டியது நன்கு நினைவிருக்கிறது.

கணித ஆசிரியையான சின்னக் கண்ணம்மா, கழற்றி வைத்த கைக்கடியாரத்தைக் காணோமென்று அமளிசெய்து, நிலாச் சாப்பாட்டின் மகிழ்ச்சியையே கெடுத்து விட்டாள். பாதி நாட்கள் மூக்குக் கண்ணாடி கொண்டு வராமல் வகுப்பில் தடுமாறுகிறவள் அவள். ஒன்றுமில்லாததற்கெல்லாம் பதறு கிறவள். அவளை அழ வைப்பதற்காகவே இந்த சுமித்ரா குறும்பு செய்திருக்கிறாளென்று புலப்பட்டுவிட்டது. ஸ்தலத்திலேயே அவளுக்கு மூன்று ரூபாய் அபராதம் விதித்தாள் தனலக்ஷ்மி. பிறகு சாப்பாடு தொடர்ந்தது.



அரைமணி கழித்து, சுமித்ரா சொட்டச் சொட்ட நனைந்த உடைகளுடன், தலையிலிருந்து தண்ணீர் கொட்ட, இரண்டு கையாலும் ஒரு மூன்று வயதுக் குழந்தையைத் தூக்கி வந்த போது, பேச்சு மூச்சற்றுப் போய் விட்டார்கள் எல்லோரும்.

சின்னக் கண்ணம்மாவின் பெண் குழந்தைதான் அது. எல்லோரும் கேளிக்கையில் மூழ்கியிருந்த சமயம் அலை களை வேடிக்கை பார்க்கச் சென்று ஆபத்தில் இறங்கிவிட் டது. சுமித்ரா ஒருத்திதான் அதைக் கவனித்து, ஓடிச் சென்று காப்பாற்றியிருக்கிறாள். தகுந்த முதற் சிகிச்சை கொடுத்த சில நிமிடங்களில் குழந்தை உயிர் பிழைத்தது.

''மறக்க முடியாத நிலாச் சாப்பாடு தான் அது'' என்றாள் தனலக்ஷ்மி.

தண்ணென்று வெண்ணிலாவின் ஒளி ஏற ஏற, கூட்ட மும் அதிகரிக்கத் தொடங்கியது. சுமித்ரா தன் கைக்கடியாரத்தைப் பார்த்து, ''மணி எட்டாகிறதே?'' என்று எழுந்து கொண்டாள்.

''உன் ஜாகை எந்தப் பக்கம்?'' என்று தனலக்ஷ்மி கேட் டது, முதலில் அவள் காதில் விழவில்லை. இரண்டாம் தரம் கேட்ட பிறகு, ''ராயப்பேட்டையில்'' என்றாள்.

''எனக்கு அங்கே ஒரு காரியம் இருக்கிறது. டிராப் பண்ணி விடுகிறாயா?''

''இதிலென்ன சிரமம்? வாருங்கள்'' என்று அழைத்தாள் சுமித்ரா. தன் ஆசிரியை ஏறிக் கொண்ட பிறகு கதவைச் சாத்தி விட்டு, சுற்றிச் சென்று தானும் அமர்ந்து காரைச் செலுத்த லானாள்.

''வண்டியை நன்றாய் வைத்துக் கொண்டிருக்கிறாயே?'' என்று பாராட்டினாள் தனலக்ஷ்மி.

"நானில்லை. அவர்" என்ற சுமித்ரா மேற்கொண்டு எதுவும் பேசாமல் ராயப்பேட்டையை அடைந்தாள். ஆஸ்பத்திரிக்குப் பக்கமிருந்த ஒரு சந்தின் முனையில் காரை நிறுத்திவிட்டு, "கொஞ்சம் இங்கேயே இருங்கள். வீட்டில் ஒரு சின்ன வேலை இருக்கிறது. ஐந்து நிமிடத்தில் வந்து, உங்களுக்கு எங்கே போக வேண்டுமோ அங்கே கொண்டு போய் விடுகிறேன்" என்றாள்.

"இந்தச் சந்திலா வீடு?" தனலக்ஷ்மி திகைத்தாள்.

"ஆமாம். சந்து திரும்பியதும் மறுபுறத்தில் பெரிய பிளாட் இருக்கிறது. அங்கே மலிவாய்க் கிடைக்கிறதென்று வாங்கி, கட்டிவிட்டார்" என்று தெரிவித்துவிட்டு சுமித்ரா வேகமாகச் சென்றாள்.

வீட்டுக்கு வரும்படி ஒரு வார்த்தை கூட அழைக்கவில்லையே என்ற வியப்புடன், மெல்ல இறங்கினாள் தனலக்ஷ்மி. தன் மாணவி சென்ற திசை நோக்கி மெதுவே நடந்தாள்.

சந்தின் மறுபுறத்தில் பெரிய மனையோ, பங்களாவோ இருக்கக் காணோம். எல்லாம் சாதாரண, வெகு சாதாரண நபர்கள் வசிக்கக் கூடிய மூன்றாம் தர வீடுகள்தான்.

எந்த வீட்டினுள் சுமித்ரா சென்றிருப்பாள் என்று யோசித்தவாறே நடந்த தனலக்ஷ்மி திகைத்து நின்றாள். திகைப்பு மட்டுமல்ல; அதிர்ச்சி.

தெருப் பக்கமாய்த் திறந்திருந்த ஒரு ஜன்னலின் வழியே அந்த வீட்டினுள் நடைபெறும் காட்சியொன்று கண்ணில் பட்டது.

கட்டிலில் இருமிக் கொண்டும் துப்பிக் கொண்டும் உட்கார்ந்திருந்த ஒரு நடுத்தர வயது மனிதனைத் தன் மார்போடு



சாத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் சுமித்ரா. இருமலைத் தவிர வேறொரு பயங்கரமான வியாதியும் அவனைப் பீடித்திருப்பதாகத் தோன்றியது. ரணச் சிவப்பான அந்த முகத்தைப் புடவைத் தலைப்பால் ஒற்றிவிட்டு, அவன் உதட்டில் ஏதோ ஒரு பானம் கொடுக்க அவள் முயன்றவாறு இருந்தாள்.

அவர்களுடைய பின்புறம்தான் ஜன்னலை நோக்கி இருந்தபடியால், தனலக்ஷ்மியை இருவரும் கவனிக்கவில்லை.

மேலும் அங்கே நிற்க இருப்புக் கொள்ளாமல் காருக்குத் திரும்பினாள் தனலக்ஷ்மி. சிந்தனையுடன், குழப்பத்துடன், காரின் டாஷ் போர்டையும், ஸ்டீயரிங்குக்குப் பக்கமுள்ள சிறு அறையையும் திறந்து மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

அவள் எண்ணங்கள் மேலும் கலக்கமுற்றன.

"ஸாரி, நேரம் செய்துவிட்டேன்" என்றவாறு திரும்பினாள் சுமித்ரா.

"பரவாயில்லை... உன் கணவர் வீட்டில் இருக்கிறாரா?"

"ஆமாம். கொச்சிக்குப் புறப்படணுமாம், இன்று ராத்திரி. சூட்கேஸில் துணிகளை அடைத்துக் கொண்டிருக்கிறார்" என்றாள் சுமித்ரா.

தனலக்ஷ்மி மனதுக்குள் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு, "அப்படியானால் நீ போ. இதோ பக்கம்தான், நான் போய்க் கொள்கிறேன்" என்று இறங்கிக் கொண்டாள்.

சுமித்ரா தன் தலைமையாசிரியையை வற்புறுத்தவில்லை. கை குவித்து விடை கொடுத்துவிட்டாள்.

வீட்டுக்குத் திரும்பிய தனலக்ஷ்மி மாலை பேப்பர் படித்துக் கொண்டிருந்த கணவரிடம் சென்று, "கொஞ்சம் எழுந்திருங்கள். ஒரு முக்கியமான வேலை இருக்கிறது உங்களுக்கு" என்றாள்.

''என்ன வேலை?'' என்று கேட்டார் துரைசாமி மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கூட்டுக்குள் போட்டவாறு.

''ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் 'முத்தண்ணன் தெரு' என்று இருக்கிறது. அங்கே, 'எம்.எஸ்.டி. 8979' என்ற நம்பருடன் ஒரு கார் நின்று கொண்டிருக்கும். அதன் சொந்தக் காரியான சுமித்ரா என்ற பெண் வருவாள். காரை நான் கேட்டதாகக் கேட்டு நீங்களே ஓட்டிக் கொண்டு வந்து விடுங்கள்'' என்றாள்.

''அழகாயிருக்கிறதே! அதெப்படிக் கொடுப்பாள்?''

''சொல்ல வேண்டியதைச் சொன்னால் கொடுப்பாள். போன வாரம், பம்பாய் மெரீன் டிரைவில் நம் பெண் சகுந்தலா விட்டுவிட்டுப் போன காரை நான் கேட்டேன் என்று சொல்லுங்கள்.''

துள்ளியெழுந்தார் அவர். ''திருட்டுப்போன காரா? மதறாசுக்கா கொண்டு வந்திருக்கிறார்கள்? எப்படிக் கண்டு பிடித்தாய்?''

''அதில் அரைமணி நேரம் பிரயாணம் கூடச் செய்தேன்'' என்றாள் தனலக்ஷ்மி அமைதியாக. ''காரின் நம்பர் பிளேட்டை மாற்றிய கெட்டிக்காரி, ஸ்டீயரிங்குக்குப் பக்கத்தில் என் பேரக் குழந்தையின் இங்கிலீஷ் பாடப் புத்தகம் இருப்பதை எடுத்து எறிய மறந்துவிட்டாள். ரமேஷின் கிறுக்கலையும், புத்தகத்தையும் போன மாசம்தானே நான் நேரில் பார்த்தேன்!''

துரைசாமி புருவத்தைச் சுளித்துக் கொண்டு, ''ஆமாம்... திருடிய பெண்பிள்ளையைப் பார்த்துவிட்டுச் சும்மாவா வந்தாய்? போலீசில் ஒப்படைக்க வேண்டாமா?'' என்றார்.

''வேண்டாம். நான் சொன்னதை மட்டும் செய்யுங்கள். சகுந்தலாவுக்கு ஒரு போன் செய்து விடுங்கள். கார் தற்செய



லாக இங்கே கிடைத்து விட்டது, போலீஸ் கம்ப்ளெயிண்டை வாபஸ் வாங்கிவிடலாம் என்று.''

தனலக்ஷ்மி வேறு என்ன செய்வாள்?

அவளுடைய மாணவியான சுமித்ரா அன்று போலவே இன்றும் இன்னதென்று கணிக்க முடியாத இயல்பினளாக இருக்கிறாள். அவளை என்ன செய்ய முடியும்? தேசமெங்கும் சுற்றும் பக்காத் திருடியாக ஒருபுறமும், ரோகியான கணவனைக் காப்பாற்றும் பதிவிரதையாக மறுபுறமும் காட்சி தரும் ஒரு பெண்ணை என்னதான் செய்வது? அந்த மாஜி ஹெட்மிஸ்ட்ரஸுக்கு இப்போதும் தெரியவில்லை.

★

# 4. அலை - செருப்பு - அவள்

பெல்பாட்டம் நுனிகளை முழங்காலுக்குச் சற்றுக் கீழ்வரையில் சுருட்டி விட்டுக்கொண்டு அலையோரம் நின்றிருந்தாள் அவள். செக்கச்செவேலென்றிருந்த அந்தப் பாதங்களின் திரட்சியும் வாளிப்பும் பளபளப்பும் மென்மையும் என் மனத்தைச்



சுண்டி இழுத்த போதிலும், முந்தின முறை அவளைச் சந்தித்த சந்தர்ப்பத்தையே நினைத்தவாறு நான் படகின் மறைவில் உட்கார்ந்திருந்தேன்.

சென்னை நகரத்தின் அந்தண்டைக் கோடியிலுள்ள கடற்கரைப் பகுதி அது. சிலுசிலுவென்று குளிர் காற்று அடிக்கும் பருவம். ஆகவே நடமாட்டமே கிடையாது. அவள் தூரத்தில் சாலையில் காரை நிறுத்தி விட்டு வரும்போதே, இருதயம் படபடக்க எனக்கு அவளை அடையாளம் தெரிந்துவிட்டது.

அவள் அலையோரத்தில் வந்து நின்று கொண்டு கடலையே பார்த்தபடி இருந்தாள் சிறிது நேரம். பிறகு, தன் ஹவாய் செருப்புக்களை அலையில் எறிந்து எறிந்து விளையாடத் தொடங்கினாள்.

முதலில் ஒன்றை எறிவாள். சில நிமிடங்களில் அலை அதைக் கரைக்கு அடித்துக் கொண்டு வரும். அதற்குள் இன்னொரு செருப்பை எறிவாள். அது வருமுன் இதை எறிவாள். இப்படியே மாற்றி மாற்றிச் செருப்பை எறிவதும் அலைகள் அதை எடுத்து வருவதைக் கண்டு குதித்து மகிழ்வதுமாக, குழந்தை மாதிரி தனக்குத்தானே விளையாடிக் கொண்டிருந்தாள்.

குழந்தையைத் தூக்கி விளையாடுவதைப் போலவே அவளையும் இடுப்பில் இரு கை கொடுத்துத் தூக்கி, முகத்துக்கு அருகே உயர்த்திக் கொண்டு கொஞ்ச வேண்டும் போல எனக்கு ஆசையாக இருந்தது. யாரையுமே பைத்தியமாக்கக் கூடிய அழகு அவளுடையது. எட்டத்திலிருந்து பார்க்கும் போது அழகியாகத் தோன்றக்கூடிய எவரும், கிட்டத்தில் சென்று பார்க்கும்போது ஏதாவதொரு குறையுடன் இருப்பது தெரியும். ஆனால் இவளை நான் ரொம்பக் கிட்டத்திலும் பார்த்திருக்கிறேன். மாசுமறுவில்லாத இவளுடைய மேனியின் வனப்பில், இவள் சிரிப்பில், பேசிய விதத்தில், அவள் ஒரு

கண்ணசைவு காட்டியிருந்தால் போதும், ஏழேழு பிறவிக்கு மாகச் சேர்த்து அவளுக்கு அடிமைச் சீட்டு எழுதிக் கொடுத் திருப்பேன்.

மூன்று மாதங்களுக்கு முன்பு...

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. சாந்தோம் வட்டாரத்தில் உள்ள ஒரு புதிய சிறிய பங்களாவில் அன்று ஒருநாள் மட்டும் காலை எட்டு முதல் பதினொரு மணி வரையில் பிற்பகல் மூன்றிலிருந்து ஐந்து வரையிலும் நான் அங்கே இருக்க வேண்டி இருந்தது.

அது என் எஜமானர் கட்டியிருந்த புது வீடு. அவருக்கு அரசாங்கத்திலும் தனி குவார்ட்டர்ஸ் கொடுத்திருந்தார்கள். ஆகவே இதை வாடகைக்கு விடுவதற்காகவே கட்டியிருந்தார். அன்று காலை ஹிந்துவில், 'ரெண்ட்டல்ஸ்' பகுதியில் வீட்டைப் பற்றிய விவரங்கள் கொடுத்து, குறிப்பிட்ட நேரத்தில் வந்தால் வீட்டைப் பார்வையிடலாம் என்றும் விளம்பரம் கொடுத் திருந்தார்.

வருகிறவர்களுக்கு வீட்டைக் காட்டுவதற்காகவே என்னை அங்கே இருக்கும்படி சொல்லியிருந்தார். காலை வேளையில்தான் பல பேர் வந்தார்கள். வாடகை எத்தனை என்பதைத் தெரிவித்து, என் எஜமானரின் விலாசம், டெலி ஃபோன் நம்பர் முதலியவற்றைக் குறித்துக் கொடுத்து அனுப்பிக் கொண்டிருந்தேன். ஒரே சமயத்தில் இரண்டு மூன்று பார்ட்டி கள் வந்ததும் உண்டு. குழந்தைகள், மனைவிகள், நண்பர் களுடன் வந்தவர்களும் உண்டு. அவர்களுக்கு அறைகளைத் திறந்து காட்டி வசதிகளை விளக்குகையில் ஏதோ மகாபலி புரத்தில் கைடு வேலை பார்க்கிற மாதிரி இருந்தது.

பிற்பகல் கூட்டம் குறைந்து விட்டது. அரைமணி நேரத் துக்கு ஒருவர்தான் வந்தார்கள். பூட்டிக்கொண்டு போய் விட



லாம் என்றுகூட எண்ணினேன். ஆனால் விளம்பரத்தில் கொடுத்த நேரத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இருந்தேன்.

மணி நாலரை இருக்கும். அப்போதுதான் ஒரு கெச்ச லான மனிதர் நடுவகிடு எடுத்த நரைத்த தலையும் மெல்லிய மீசையும் கோட்டு பாண்ட்டுமாயிருந்தவர் வந்து பார்த்து விட்டுப் போயிருந்தார். இன்னும் அரை மணிதான். நாம் புறப் பட்டு விடலாம் என்றெண்ணியிருந்த சமயத்தில் அவள் வந்தாள்.

அன்று அவள் இன்று மாதிரி பெல்பாட்டம் அணிய வில்லை. புடவை கட்டியிருந்தாள்.

என்னதான் நான் பிரம்மசாரியானாலும், வாலிபன் என் றாலும் ஸாரிகளைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனால் அவள் அன்று கட்டியிருந்த புடவை, அவள் உடம்போடேயே பிறந்ததோ என்று நினைக்கும்படி ஒட்டித் தழுவிக் கொண் டிருந்த விதம் மட்டும் என்னால் மறக்க முடியாது. அதே சம யத்தில் எந்த நிமிடத்திலும் நழுவி விழும் போல் அவ்வளவு லூசாகவும் இருந்தது. அவள் கூந்தல் கருகருவென்றிருக்க வில்லை. ஆனால் அதைக் கையால் அளைய வேண்டுமென்ற வெறியை மூட்டக் கூடியதாக அவள் தோளில் விழுந்து கொஞ்சிக் கொண்டிருந்தது.

வீட்டைச் சுற்றி வந்தாள் முதலில். ''நன்றாய் தோட்டம் போடலாம்'' என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்து விட்டு, ரிசப்ஷன் அறைக்குள் நுழைந்தவள், ''புது வீடாயிருந்தும் மொஸைக் ஏன் இப்படி மங்கி விட்டது?'' என்று வினவிய வண்ணம் தரையைத் தன் காலால் தேய்த்தாள். குளியலறை யில் ஷவரைத் திருகினாள். அதன் நீர்த் திவலைகள் தன் மேல் தெறித்து விடாதபடி சட்டென ஒதுங்கியபோது, அவளுடைய பூப்பந்தான தேகம் என் மீது இடித்தது. ''ஸாரி'' என்றாள்.

''த ப்ளெஷர் இஸ் மைன்'' என்று நான் சொன்னதை தப்பாக எடுத்துக் கொண்டு கடுகடுக்காமல் புன்னகை செய்தாள். ''வாடகை எவ்வளவு?'' என்று கேட்டாள். சொன்னேன்.

''கொஞ்சம் குறைத்துக் கொடுத்தால் எடுத்துக் கொள்ளலாம்'' என்றாள்.

''வீடு என்னுடையதாயிருந்தால், இனாமாகவே கொடுத்து விடுவேன். என் பாஸினுடையது'' என்றேன்.

''உங்கள் பெயர்?''

''கேதார்நாத்'' என்றேன்.

''கேதார்நாத்'' என்று அவள் மெதுவே திரும்பச் சொன்னாள். அழகான இளம் பெண்ணொருத்தி நம் பெயரைச் சொல்வதைக் கேட்பது அலாதி இன்பமாக இருந்தது.

''உங்கள் பெயர்?'' என்றேன். ''காந்தி'' என்றாள். 'காந்தி' என்று திரும்பச் சொன்னேன். ''விலாசம் தருகிறீர்களா?'' என்று கேட்டதற்கு, ''நாளை நானே போன் செய்கிறேன்'' என்று கூறி என் பாஸின் விலாசமும், போன் நம்பரும் வாங்கிக் கொண்டு சென்றாள்.

அன்று இரவு எஜமானரிடம் விவரங்களைத் தெரிவித்த பிறகு, காந்தி என்ற பெண் வருவதாகச் சொன்னதையும் கூறினேன்.

''போன் பண்ணட்டும். நல்ல மனிதர்களாக இருந்தால் வாடகை குறைவானாலும் பரவாயில்லை'' என்றார்.

இரவு நான் தூங்கவேயில்லை. அவளே அந்தப் புது வீட்டுக்குக் குடி வர வேண்டுமென்று பிரார்த்தனைக்கு மேல் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். மாதாமாதம் வாடகை



வசூல் செய்கிற சாக்கிலோ, அல்லது ரிப்பேர்கள் கவனிக்கிற சாக்கிலோ அங்கே செல்லலாம், அவளைப் பார்க்கலாம் என்று மனோராஜ்யம் பண்ணிக் கொண்டிருந்தேன்.

ஆனால் என்ன ஏமாற்றம்! அந்தக் காந்தி மறுநாள் போன் பண்ணவேயில்லை. 'வாடகை குறைக்க மாட்டார்கள். எதற்கு அனாவசியமாய் கேட்க வேண்டும்?' என்று நினைத்து விட்டாள் போலிருக்கிறது. அவள் முகவரியை வற்புறுத்திக் கேட்டு வைத்துக் கொள்ளாமல் போனோமே என்ற என் மடத்தனத்தை நொந்து கொண்டேன். தெருத் தெருவாகக் 'காந்தி, காந்தி' என்று கூவிக் கொண்டே தேட வேண்டும் போல் இருந்தது.

சிறிது சிறிதாய் அந்த ஏக்கத்தை நீக்கிக் கொண்டேன். எப்படியும் அவள் பெரும் பணக்காரி. மேலிடத்துப் பெண். அவளைக் காதலித்து, நெஞ்சிலே தாபத்தை வளர்த்துக் கொண்டு மடிய வேண்டுமா? அதைக் காட்டிலும் அது முளையிலேயே கருகி விடட்டும்.

எனக்கும் அவளுக்கும் ஏதோ தெய்வீக உறவு இருந்திருக்க வேண்டும். இல்லா விட்டால் இவ்வளவு பெரிய சென்னை நகரத்தில் அதே காந்தியை இன்று ஏன் மறுபடியும் சந்திக்க நேரிட்டது?

நிமிர்ந்து பார்த்தேன். அவளைக் காணவில்லை.

திடுக்கிட்டவனாகப் படகு மறைவிலிருந்து எழுந்து, சாலையைப் பார்த்தேன். அவளுடைய கார் ஒரு வளைவு வளைந்து திரும்பி ஒயிலாக மறைந்து விட்டது.

ஏமாற்றம்தான் என்றாலும், மனம் வெறுத்துப் போகவில்லை நான். இங்கே அடிக்கடி வரக் கூடியவள்தான்

போலிருக்கிறது என்று யூகித்துக் கொண்டு, மறுநாள் அதே நேரத்துக்கு அதே இடத்துக்கு வந்து காத்திருந்தேன்.

யாரையும் காணோம். அதற்கு மறுநாள், அடுத்த நாள், நாலாவது நாள், ஐந்தாவது, ஆறாவது நாள் வரவில்லை.

சரியாய் அடுத்த சனிக்கிழமை என் தவம் பலித்தது. ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை மாலை அவள் இங்கே வரு கிறவள் என்பதை தெரிந்து கொண்டேன்.

ஒசிந்தாடி அவள் வந்த போது, படகின் மறைவில் இதயம் படபடக்க நான் உட்கார்ந்திருந்தேன். எழுந்தபடி அவள் எதிர்சென்று அவளுடைய பாதத்தின் முன்னே விழ வேண்டும் என்று மனம் பறந்தது. கன்னத்தோடு உறவாட வரும் கூந்தலை, தன் இரு மலர்க் கைகளால் ஒதுக்கி, தலையை அசைத்துப் பின்னே தள்ளிக்கொண்டு வந்தாள். அன்றைக்கும் கடற்கரையில் அந்த இடம் நடமாட்டமற்றே காணப்பட்டது.

முன்போலவே தண்ணீர்க் கரையோரம் வந்தாள். பெல் பாட்டம் நுனிகளை மடக்கிக் கொண்டாள். செருப்பை எறியப் போகிறாள் என்று தெரிந்தது. வயது இருபதாவது இருக்கும். ஆனால் 'என்ன குழந்தைத்தனமான விளையாட்டுப் புத்தி!' என்று செல்லமாக அவளைக் கோபித்துக் கொண்டேன்.

அவள் பலமாக ஒரு தும்மல் தும்மினாள். ஜலதோஷம்.

அவள் ஜாக்கெட்டின் பைகளில் எதையோ தேடினாள். கழுத்தின் பின்புறத்தையும் ஜாக்கெட்டின் உட்புறத்தையும் ஆராய்ந்தாள். கைக்குட்டை தேடுகிறாள் என்று புலப்பட்டது.

காரிலேயே கைக்குட்டையை வைத்திருந்தாள்போலும். அதை எடுத்து வருவதற்காகத் திரும்பிச் சென்றாள்.

ஆனால் கரையோரத்தில் தன் ஹவாய் செருப்புகளைக் கழற்றியவள் அதைத் திரும்ப மாட்டிக் கொள்ளாமலே சென்றாள்.



அந்த வினாடியில் எனக்குள் இருந்த சிறு பிள்ளைத்தனம் விரிந்து எழுந்து கொண்டது. ஒரு குறும்பு செய்தால் என்ன என்று எண்ணினேன்.

அவள் செருப்புக் கழற்றிப் போட்டிருந்த இடத்துக்குச் சமீபத்தில்தான், படகின் பின்னால் நான் இருந்தேன். அக்கம் பக்கம் யாருமில்லை. அடுத்தடுத்துப் பல படகுகள் இருந்ததால் நான் குனிந்தே நகர்ந்தால் யாரும் காண முடியாது.

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் பாய்ந்து, செருப்புக் களை எடுத்து வைத்துக் கொண்டேன்.

கரையினருகே திரும்பியவள் செருப்புக்களைக் காணா மல் என்னமாய்த் திகைத்தாள்! தான் கழற்றிப் போட்டது வேறு இடமாயிருக்குமோ என்று பக்கத்தில் கண்களைச் சுழற்றி னாள்.

பைத்தியக்காரி! இரண்டு எட்டு இந்தண்டைப் பக்க மாகத் திரும்பியிருந்தால், சிரித்துக் கொண்டிருந்த என்னைக் கண்டிருக்க முடியும். அதை விடுத்து, அந்தண்டைத் திசையில் நடந்தாள். நிற்பதும் பார்ப்பதும் தேடுவதுமாகத் தவித்தாள். கேவலம் ஒரு விளையாட்டு கெட்டுவிட்டதற்காக ஏன் இப்படி அலமந்து போகிறாள் என்று ஆச்சரியப்பட்டேன் நான்கூட.

செருப்பைத் தேடிக் கொண்டு சென்றவள் பழைய இடத் துக்குத் திரும்பி வரவில்லை. காருக்கு ஓடினாள், காரை ஸ்டார்ட் செய்தாள், கார் மறைந்து விட்டது. நான் அவள் செருப்புகளை கையில் வைத்துக்கொண்டு திகைத்தேன்.

மறைந்துவிட்டாலும் அவள் என் வாழ்க்கையிலிருந்து மறையவில்லை, ஆம். அடுத்த சனிக்கிழமை, அதற்கடுத்த சனிக்கிழமை, அதன் பிறகு இரண்டு மாதமும் ஓடிவிட்டது.

அவள் வரவேயில்லை.

ஜூன் மாதத்தில் ஒருநாள். அதாவது அவளை நான் சந்தித்து மூன்று மாதத்துக்கு மேல் ஆகிவிட்டபோது....

என்னை விட்டு இணைபிரியாத தோல் பையை, இடுக்கிக்கொண்டு எழும்பூர் ஸ்டேஷன் மேம்பாலத்தில் போய்க் கொண்டிருந்தவன்...

ஒரு வினாடி என் இதயத் துடிப்புக்கூட நின்று விட்டது... கீழே பார்த்தபோது....

ஓர் இரும்புப் பெஞ்சில் அவள் தனிமையில் உட்கார்ந்திருந்தாள். ஆனால் அவளிடம் வழக்கமாக இருக்கும் பொலிவு காணப்படவில்லை. உடைகளும் பழசாகிக் கசங்கியிருந்தன. அவள் ஏதோ துன்பத்தில் இருக்கிறாள் என்று உணர்ந்ததும் என் மனத்தில் வேதனை வெள்ளமெடுத்தது.

இந்த முறை முட்டாள்தனமாக ஏமாற நான் தயாராய் இல்லை. இறங்கி அவள் முன்னே போய் நின்றேன். ''வணக்கம் மிஸ் காந்தி'' என்றேன்.

சட்டென என்னை அவள் அடையாளம் கண்டுகொள்ளாதது எனக்கு வருத்தமாயிருந்தது. ஆனால் அப்படி எதிர்பார்ப்பது ரொம்ப அதிகம் என்று என்னை நானே தேற்றிக்கொண்டு, ''தெரியவில்லையா? சாந்தோமில் வீடு பார்க்க வந்தீர்களே?'' என்றேன்.

ஒரு சோகப் புன்னகையுடன் ''ஓ... ஆமாம்'' என்றாள்.

''வந்து... அதற்குப் பிறகு இரண்டு தடவை உங்களை நான் பார்த்து விட்டேன்... நீங்கள் என்னைப் பார்க்கவில்லை'' என்றேன்.

அவள் தலையை நன்கு உயர்த்தி, முழுக் கண்களால் என்னைப் பார்த்து, ''எங்கே?'' என்று கேட்டாள்.



''கடற்கரையில்'' என்றதும் அவள் பரபரப்பு அதிகரித்தது. ''எப்போது?'' என்றாள் அவசரமாக.

''அலைகளில் செருப்பை எறிந்து விளையாடிக் கொண்டிருந்தீர்களே, அப்போது. சனிக்கிழமை... ஒருநாள், நீங்கள் கைக்குட்டையை எடுப்பதற்காகப் போனபோது, செருப்பை ஒளித்து வைத்துக்கொண்டேன். அது நினைவிருக்கிறதா? நீங்கள் ரொம்ப நேரம் தேடினீர்கள்...''

''செருப்பை... நீங்கள்...'' அவள் குரல் அதிர்ச்சி நிறைந்ததாக ஒலித்தது.

''நீங்கள்தானா அது!... அதனால்தான் அது காணவில்லையா?... மிஸ்டர்...''

''கேதார்நாத்'' என்று பெயரை ஞாபகப்படுத்தினேன். (மறுபடியும் வருத்தம் ஏற்பட்டது.)

அவள் அவசரமாக எழுந்து கொண்டாள். ''கேதார்நாத், தயவு செய்து என்னுடன் வாருங்கள். இப்போதே'' என்று என் கையைப் பற்றினாள்.

''ஏன்? என்ன நேர்ந்தது?'' என்று திடுக்கிட்டேன்.

''தயவு பண்ணி என்னுடன் வாருங்கள். ப்ளீஸ்!'' என் கையை அவள் விடவேயில்லை.

அவள் இப்படி என்னிடம் உதவி கேட்டுக் கெஞ்சும் காலம் வருமென்று நான் கற்பனையும் செய்யவில்லை.

டவுனில் நாராயண முதலித் தெரு.

ஒரு பழைய பெரிய கட்டிடத்தின் முன் டாக்ஸியை நிறுத்தச் சொன்னாள். கட்டணத்தைத் தானே கொடுத்து விட்டு, குறுகலான மாடிப்படிகளில் தாவியோடினாள்.

மாடியறையில் நுழைந்ததும் எனக்குச் சிறிது திகைப்பு ஏற்பட்டது. மேஜையடியில் கடிதம் எழுதிக் கொண்டிருந்த நபர்...

முன்பு வீடு பார்க்க வந்த கெச்சலான நபர்தான். இவள் பார்க்க வருவதற்குச் சற்று முன்னதாக வந்தாரே அவரே.

''எஸ்?'' என்று காந்தியை பார்த்துச் சிடுசிடுத்தார் அவர்.

''சார். அன்று என் செருப்பு... காணாமற் போயிற்றென்று நான் சொன்னதை நம்பமாட்டேன் என்றீர்களே? இவர்தான் விளையாட்டாக ஒளித்து வைத்தாராம். இன்றுதான் தற்செயலாகச் சொன்னார். சார்... ப்ளீஸ்...''

''காந்தி!'' என்று சீற்றத்துடன் அதட்டினார் அவர். ''உன்னைச் சாட்சி அழைத்து வரச் சொன்னேனா நான்?''

எனக்கு எதுவுமே புரியவில்லை. என்றாலும் காந்தி சொன்னது உண்மைதானென்று அடித்துச் சொல்ல வேண்டும் என்று மட்டும் தோன்றியது. ''ஸாரி டு இன்டர்வீன், சார். ஆனால் மிஸ் காந்தி சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை'' என்றேன்.

''தட்ஸ் ஆல் ரைட்'' என்றார் அவர்.

''நிரூபிக்க வேண்டுமானாலும் நிரூபிக்கிறேன். மிஸ் காந்திக்கே தெரியாது, நான் இப்படி ஒரு எவிடன்ஸ் வைத்திருப்பது'' என்று கூறி என் தோல் பையின் ஜிப்பை இழுத்தேன்.

அவளுடைய ஹவாய் செருப்புக்களை வெளியே எடுத்துக் காட்டினேன்.

அப்போது காந்தி என்னைப் பார்த்த பார்வை, என்னை அமுதத்தில் குளிப்பாட்டிய மாதிரி இருந்தது. ஒரு பெண்ணி



னுடைய கால் செருப்புக்களை எடுத்துப் பையிலே வைத்திருக்கக் கூடியவன்... அதை எப்போதும் தன்னுடன் எடுத்துச் செல்கிறவன்... எத்தகையதொரு காதல் பைத்தியமாக இருக்க வேண்டும்! நான் நூறாயிரம் வார்த்தைகளில் வெளிப்படுத்தியிருக்க முடியாது. என் தாபத்தை அந்த ஒரே ஒரு செயல் பறைசாற்றிவிட்டது!

''சரி. இப்போது நீங்கள் போங்கள்... பிறகு நானே உங்களை வந்து பார்க்கிறேன்'' என்று காதல் ததும்பக் கூறி என்னை வழியனுப்பினாள்.

ஆனால் இரண்டு நாளாகியும் வரவில்லை. டெலிபோனில் கூப்பிடவும் இல்லை. நாலு நாள் பொறுத்துப் பார்த்து நாராயண முதலித் தெருவுக்குச் சென்றேன்.

அந்தச் சிறிய அறை பூட்டப்பட்டிருந்தது.

வேறெங்கோ போய்விட்டதாம் அந்த ஆபீஸ். யாருக்கும் விலாசம் தெரியவில்லை. இதெல்லாம் ரொம்ப மர்மமாக இருக்கவே...

என் எஜமானரிடம் எல்லாவற்றையும் ஒப்பிக்கத் தோன்றியது. கடகடவென்று சொல்லி முடித்தேன்... செருப்புச் சம்பவம் உள்பட.

அவர் கூர்ந்து கேட்டுவிட்டு, ''உள்ளே வந்து உட்கார்ந்து மறுபடி ஒருமுறை விவரமாகச் சொல்லு'' என்றார்.

ஒரு வாரம் சென்றிருக்கும்.

''உன் காதலியின் இருப்பிடம் தெரிந்துவிட்டது'' என்றார் எஜமானர் புன்னகையுடன்.

ஆச்சரியத்துடன் மகிழ்ந்தேன்.

''எப்படி?'' என்றேன்.

''செருப்பை அலையில் விட்டெறிவது ஒரு விளையாட்டில்லை. அது ஒரு சமிக்ஞை... ஸிக்னல். எட்டத்தில் இருக்கும் படகுக்காரன் பார்த்துக் கொள்வான். எத்தனை முறை எறிகிறாளோ அத்தனை எண்ணுக்குத் தக்கபடி ஒவ்வோர் இடம் இருக்கும். அங்கே போய்ச் சரக்கை வாங்கிக் கொண்டு, கப்பலில் ஏற்றி விடுவான். ஒவ்வொரு சனிக்கிழமை ஒவ்வோரிடத்தில் சரக்குக் காத்திருக்கும்... எங்கள் கண்ணில் மண் தூவுவதற்காக'' என்றார் போலீஸ் கமிஷனரான என் எஜமானர்.

''சரக்கா... என்ன சரக்கு?'' என்று விழித்தேன்.

''கிராம்பு. ஏகப்பட்ட காசு அதிலே.''

''அப்படியானால்... இவள்... காந்தி...''

''இவள் ஒருவிதத்தில் உடந்தைதான். செருப்பை எத்தனை தரம் அலையில் எறிய வேண்டும் என்பதை அவளிடம் தெரிவித்து அனுப்புவார்கள். அதற்காகவே அவளுக்குக் கார் முதலிய அந்தஸ்து. அதற்குமேல் அவளுக்குத் தெரியாது. மாதாந்தரச் சம்பளக்காரிதான். அன்று அவள் செருப்பை எறிய முடியாமலே போய்விட்டது. ஸிக்னல் கிடைக்காததால், சரக்கே வரவில்லை என்று ஆள் போய்விட்டான். அன்றைய வியாபாரத்தில் ஏதாவது ஐம்பதாயிரம் தேற வேண்டியது தவறியிருக்கும். அதனால் அவளை வேலையிலிருந்தே நீக்கி விட்டார்கள். அதைப் பற்றி உன் முன்னிலையில் அவர்கள் பேசத் தயாராயில்லாதது அதனால்தான். நீ சொன்ன தகவல் சந்தேகம் ஏற்படுத்தியது. இடத்தையும் அடையாளத்தையும் சொன்னதால் கண்ணி வைத்துப் பிடித்து விட்டோம். செருப்பு எறியும் ஸிக்னல் ராயபுரம் கடற்கரையில் நேற்று நடந்து கொண்டிருந்தது...''



என் உள்ளம் கூம்பியது. ''சார்... அவள்... மிஸ் காந்தி...''

''பக்கத்து அறையில் இருக்கிறாள். எப்படியும் சின்ன தண்டனையாவது இருக்கும். அதன் பிறகு அவள் திருந்தினால் சரி.''

நான் மெல்ல அடுத்த அறையை நோக்கி நடந்தேன். அன்று என் தோல் பையிலிருந்து செருப்பை எடுத்துக் காட்டிய போது அவள் கண்களில் பளபளத்த காதல் மெய்யானது. அதற்குப் பலன் கிட்டும். நிச்சயம்.

★

# 5. ஆணி

இந்த பந்த் வந்து தனக்கு இப்படிக் கை கொடுக்கும் என்று தாஸ் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

மாமா தணிகாசலம் ஊரில் இல்லையாம். திருச்சிக்குப் போனவர் சென்னை திரும்புவதற்கு வழியில்லாமல் சிக்கிக் கொண்டிருக்கிறாராம்.



அவர் வீட்டுக்குப் பக்கத்தில் வசிக்கும் சினேகிதன் நடராஜன் பேச்சோடு பேச்சாகச் சொல்லிவிட்டுப் போனான்.

அப்படியானால் மனோ தனியாக இருக்கிறாள்!

எத்தனை நாளாகக் காத்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பம்!

லாட்ஜ் அறையிலிருந்து உடனே புறப்பட்டான்.

மாமா! என்னிடம் பொய் சொல்லி ஏமாற்றினீர்களே! இன்றைக்குப் பாருங்கள்.

மாமாவின் வீட்டுக்குள் நுழையும்போது விசிலடிக்க வேண்டும் போல் அவன் மனதில் உற்சாகம் பொங்கிக் கொண்டிருந்தது.

கச்சிதமான திட்டம் வைத்திருந்தான். மனோவை எப்படியாவது சரிக்கட்டி வசப்படுத்திவிட வேண்டும். இச்சைக்கு இணங்கும்படி செய்துவிட வேண்டும். பிறகு மனோவே தன் அப்பாவிடம் சொல்லி விடுவாள்... வேறு எவரையும் மணக்க முடியாதென்று.

வீட்டில் ஒரு வேலைக்காரக் கிழவி இருப்பாள்... அவளைச் சமாளிக்க வேண்டும்...

---

''அடடே! வாங்க!'' என்று வரவேற்றாள் மனோ.

அவன் உள்ளே நுழைந்ததுமே, ''இப்பத்தான் நினைச்சேன்!''

''என்னையா?''

கொள்ளை கொள்ளும் வசீகரத்துடன் அவள் புன்னகை செய்து, ''அப்பா திருச்சியில் மாட்டிக் கொண்டு விட்டார். தெரியுமில்லே?'' என்றாள்.

அவன் சுற்றுமுற்றும் பார்த்து, ''வேலைக்காரி இல்லே?'' என்றான்.

''அவள் பொண்ணு சைதாப்பேட்டையில் உடம்பு சரியில்லாமல் படுத்திருக்கிறதாம். அப்புறம் பஸ் கிடைக் காதுன்னு இன்னிக்குக் காலையிலே நாலரை மணிக்கே எழுந்து போய்விட்டாள்.''

''மனோ! என் மெஸ்ஸிலே இன்னிக்குச் சாப்பாடு கிடை யாதுன்னு சொல்லிட்டாங்க...''

''நான் பிரமாதமாய்ச் சமையல் பண்ணிப் போடுகிறேன், கவலைப்படாதீங்க. நல்ல காலம் நேத்தே கறிகாயெல்லாம் வாங்கி வைத்து விட்டேன்.''

ஹ¨ம்! சாப்பாட்டுக்காகவா அவன் வந்திருக்கிறான்!

''வேண்டாம் மனோ'' என்று அவன் தடுத்தும் அவள் கேட்கவில்லை. சமையலறையில் புகுந்தாள்.

புடவையை இடுப்பில் தூக்கிச் செருகிக் கொண்டு அவன் எதிரே குறுக்கும் நெடுக்குமாய் அவள் போனபோது தாஸின் மனம் படபடத்தது. கறிகாய்களை நறுக்கிக் கொடுக் கும் சாக்கில் அவள் கைகளைத் தொட்டபோதெல்லாம் உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரை ஒரு பரவசமான வெறி அவனை ஆட்கொண்டது.

டைனிங் மேஜையில் எதிரெதிரில் உட்கார்ந்து உண வருந்தியபோது மேஜைக்கு அடியில் அவன் கால்கள் அவள் கால்களைத் 'தற்செயலாக' இடித்தன.

அந்தக் கணங்களில் மனோவின் முகம் சிவக்கும் சிவப்பு!

தட்டுக்களைக் கழுவி வைத்து விட்டு அவள், ''கார்ட்ஸ் விளையாடலாமா?'' என்றாள்.



''லாட்ஜில் இருப்பவனுக்கு வேறு என்ன வேலைன்னு நினைத்தாய்? சீட்டாடி ஆடி அலுத்து விட்டது'' என்றவன், ''ஏதாவது கேஸட் இருக்கிறதா? அதையாவது வீடியோ போட்டுப் பார்க்கலாமே?'' என்றான்.

டி.வி. செட் அவளுடைய படுக்கை அறையில் இருப்பது அவனுக்குத் தெரியும்.

''சரி வாருங்கள். ஆனால் ஐந்து நிமிடத்துக்கெல்லாம் கொட்டாவி விட ஆரம்பித்து விடுவீர்கள். உத்தரவாதம்'' என்று சிரித்தபடி சொல்லி, மாடிக்கு அவனை அழைத்துச் சென்றாள் மனோ.

அவளுடைய படுக்கையிலேயே உட்கார்ந்து கொண்டான்.

அவள் அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்து, டி.வி.யின் ஒயர்களை எடுத்துவிட்டு, வீடியோவின் ஒயர்களைப் பொருத் தினாள்.

தெருவெங்கும் ஹோவென்ற நிசப்தம். பரிபூரணமான பந்த்.

எப்படிப் பேச்சை ஆரம்பிப்பதென்று தெரியாமல் உட் கார்ந்திருந்தான்.

படம் ஓட ஆரம்பித்தது. கீறல்கள் நிறைந்த பழைய கேஸட்.

''ஒரே மழை!'' என்றாள் மனோ. ''குடை பிடித்துக் கொண்டுதான் படம் பார்க்க வேண்டும்.''

அவன் இன்னும் தயங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

''என்ன தாஸ் யோசனை? ஜோக் சொன்னால் கூடச் சிரிக்க மாட்டேங்கறீங்களே?''

"ஒன்றுமில்லை." அவன் திரையை நிமிர்ந்து பார்த்தான். பழைய படமானாலும் நெருக்கமான காதல் காட்சி.

அவளுடைய கை அவனுக்கு வெகு பக்கத்தில் இருந்தது. அங்குலம் அங்குலமாக நகர்த்தி அந்தப் பவுன் விரல்களை மெல்லத் தொட்டான்.

அவளுடைய உடம்புக்குள் ஒரு மின்னல் பாய்வதை அவனால் உணர முடிந்தது. கையை நகர்த்திக் கொள்ளாமல் இருந்ததையும் கவனித்தான்.

படத்தில் காதலர்கள் நூல் நுழைய இடமில்லாமல் இறுக்கிக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

அவன் அவள் மணிக்கட்டைப் பற்றினான்... கெட்டியாக, விண்விண்ணென்று தெறிக்கும் பரவசத்துடன்.

மனோ அவனை மெல்ல ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வையில் ஒரு தவிப்புத் தெரிந்தது. அவளுடைய சிவந்த உதடுகள் துடித்தன. முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அவளுடைய தங்கத் தகடான நெற்றியில் பொடித்து மின்னின.

அதற்குமேல் அவனுக்குத் தாங்கவில்லை. "மனோ!" என்று ஆவேசமாகக் கூவி அணைத்துக் கொண்டான். அவளும் வெறி பிடித்தவளாக அவனைத் தழுவ, இதழ்களும் இதழ்களும் கவ்வ....

பல நிமிடங்களுக்கு உலகமே மறந்து போய்விட்டது அவர்களுக்கு.

அவன் எழுந்து உட்கார்ந்தான். "மனோ... நாம் இப்படி..."

பாதி வாக்கியத்தில் திடுக்கிட்டான்.

ஏன் அவள் முகம் இப்படி இருக்கிறது? "மனோ... மனோ..." அவளை உலுக்கினான். பேச்சு மூச்சில்லை.



முகத்தில் தண்ணீர் அடிக்கலாம் என்று அலமாரிக்கு ஓடினான்.

தட்டுக்களில் வரிசை வரிசையாக மருந்துப் புட்டிகள் இருந்தன. மருந்துகளைப் பற்றி அவனுக்குக் கொஞ்சம் தெரியும். பார்த்தான்.

எல்லாம் இருதய நோயாளிக்கான மருந்துகள்.

அவனுக்கு மூச்சு நின்றது.

அப்படியானால்... மாமா சொன்னது உண்மைதானா?

ஆறு மாசத்துக்கு முன்னால் ஒருநாள் மனோவைத் தனக்குக் கல்யாணம் செய்து வைக்கும்படி அவரிடம் கேட்டபோது, "ஐந்து வருஷம் பொறுத்திரு, தாஸ். அவளுக்கு இருதய நோய் இருக்கிறது. இப்போது கல்யாணம் செய்யக் கூடாது என்று டாக்டர்கள் ரொம்பக் கண்டிப்பாய்ச் சொல்லியிருக்கிறார்கள்" என்று சொன்னாரே, அது நிஜம்தானா? தன் அந்தஸ்து எங்கே, இவனுடைய குமாஸ்தா வாழ்க்கை எங்கே, என்ற பணக்காரத் திமிரில் பொய்ச் சாக்குச் சொல்கிறார் என்று எண்ணினோமே, அது தப்பா?

கட்டிலுக்குத் திரும்ப ஓடி வந்து பார்த்தான்.

எதைக் கூடாதென்று டாக்டர் தடுத்திருந்தாரோ அதற்கு இடம் கொடுத்து விட்டதால் அவள் உயிர் பிரிந்திருந்தது.

தாஸுக்குக் குபீரென்று வியர்த்துக் கொட்டியது.

வந்த சுவடு தெரியாமல் திரும்பி விடுவதுதான் உடனடியாகச் செய்ய வேண்டிய காரியம்!

நோயாளியான அவளுக்குத் திடீரென்று மரணம் நேர்ந்து விட்டதென்று நினைத்துக் கொள்வார்கள்.

அவளுடைய சீர்குலைந்த ஆடைகளைச் சரிசெய்தான். அறைக்கு வெளியே வந்து கதவைச் சாத்தினான்.

படக்கென்ற சத்தம் கேட்டது.

இழுத்துச் சாத்தினால் உள்பக்கம் தாளிட்டுக் கொள்ளக் கூடிய பூட்டு அமைப்பு அந்தக் கதவுக்கு இருந்தது. உட்புறம் பூட்டிக் கொண்டு விட்டது.

ஒரு வினாடி கலங்கியவன், மறுவினாடி இதுவும் நல்ல துக்குத்தான் என்று எண்ணிக் கொண்டான்.

உள்பக்கம் தாளிட்டுக் கொண்டு அவள் தூங்குகையில் உயிர் பிரிந்து விட்டது என்று நினைப்பார்கள்.

வாசலுக்கு அருகே இரண்டு நிமிடம் மறைந்திருந்து ஆராய்ந்தான்.

தெரு வெறிச்சோடிக் கிடந்தது. எந்த நடமாட்டமும் இல்லை. அவனைக் கவனிப்பதற்கு எந்த ஈ காக்கையும் இல்லை.

பந்த்துக்கு இரண்டாம் முறையாக அவன் நன்றி சொல்லிக் கொண்டான்.

இரண்டு தெரு திரும்பிய பிறகே ஒழுங்காகச் சுவாசம் வந்தது. 'அப்பாடா!' என்று மார்பைத் தொட்டுக் கொண்டவன்...

மறுபடியும் மூச்சை அடைத்தது, கையிலிருந்த பேனாவைக் கை தொட்டவுடன்.

ஐயையோ! அவனைக் காட்டிக் கொடுக்கக் கூடிய ஒன்றாம் நம்பர் தடயம்!

மனோவை எப்படி வசப்படுத்துவது என்று அவன் தயங்கித் தயங்கி அந்தப் படுக்கையறையில் யோசனை செய்து கொண்டிருந்த சமயம்...



படுக்கைக்குப் பக்கத்திலிருந்த குட்டி மேஜையில் சில வெற்றுக் காகிதங்கள் இருக்க, இவன் வழக்கம் போலப் பேனாவினால் கிறுக்கிக் கொண்டிருந்தானே! வெறும் கிறுக்கல் இல்லை. ஆர்.தாஸ், ஆர்.தாஸ் என்று கையெழுத்துக்கு மேல் கையெழுத்தாக வரைந்து கொண்டிருந்தானே...

அந்தக் காகிதம் அங்கேயே இருக்குமே! இவன் வந்து போனதற்கு... படுக்கை அறையில் இருந்ததற்கு... அசைக்க முடியாத ஆதாரமாக!

திரும்பிப் போய் அவைகளை எடுத்துக் கொண்டு வந்து விட வேண்டும்.

ஆனால், கதவு உள்பக்கம் பூட்டிக் கொண்டு விட்டதே!

அவ்வளவு மூச்சுத் திணறலுக்கும் நடுவே அவன் மூளை வேலை செய்தது.

ஒரே ஓர் ஆணி! ஒரே ஓர் ஆணி இருந்தால் போதும்... ஓட்டைக்குள் நுழைத்து, ஒரு சின்னத் திருகல் திருகி, எப்படிப் பட்ட பூட்டையும் அவனால் திறந்துவிட முடியும். 'பூட்டு தாஸ்' என்று கூடப் பல நண்பர்கள் அவனைக் கேலி செய்வதுண்டு. யாருக்கு எந்தச் சாவி கெட்டுப் போனாலும் இவனைத் தான் கூப்பிடுவார்கள். பூட்டுக்கு ஏற்ற சைஸில் ஆணியைச் செலுத்தி, ஒரு சின்னத் திருகு... மனோவின் அறைக் கதவை மனக் கண்ணால் அளவிட்டான். ஒரு மூன்றங்குல ஆணி கிடைத்தால் போதும்.

பைத்தியம் பிடித்தவன் போல் கடைத் தெருவுக்கு ஓடினான்.

வரிசை வரிசையாகப் பூட்டுக்கள் தான் தொங்கிக் கொண்டிருந்தன. எந்தக் கடையும் திறந்திருக்கவில்லை.

இரண்டு முறை அவனுக்குக் கைகொடுத்து அவன் வாழ்த்தையும் நன்றியையும் பெற்றுக் கொண்ட அதே பந்த் இப்போது காலை வாரி விட்டது.

ரோந்து வரும் போலீஸ் ஜீப்கள்தான் அவன் கண்ணில் பட்டன. நடுங்கி மறைந்து கொண்டான்.

மணியைப் பார்த்தான்.

பிற்பகல் மூன்று.

ஆறு மணிக்குப் பந்த் முடியும். கடைகள் திறக்கும்.

யாராவது எங்காவது திறந்து வைத்திருக்க மாட்டார்களா? பிரதான சாலைகளில் இல்லாவிட்டாலும், சந்து பொந்துகளில் உள்ள கடைகள்?

அங்கேயும் அப்படித்தான்.

ஒன்றிரண்டு டீக்கடைகளில்தான் அரைக் கதவைத் திறந்து வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். ஜெனரல் ஷாப்கள் மூடியே கிடந்தன.

ஒரு டீக்கடையில் தலையை நீட்டி, ''ஆணி இருக்குமா?'' என்று கேட்டபோது, 'என்னது?' என்று கடைக்காரன் முறைத்தான். தாஸுக்கே தன் கேள்வி அபத்தமாகப் பட்டது.

மறுபடியும் தெருத் தெருவாகத் திரிய ஆரம்பித்தான்.

கீழேயே ஏதாவது கிடக்குமா என்று ஆராய்ந்தபடியே வேகமாய் நடந்தான். வழக்கமான குப்பை கூடத் தெருக்களில் இல்லை. சுத்தமாக இருந்தது.

மனோவின் வீட்டுக்குள்ளேயே ஏதாவது ஆணி கிடைத்தாலும் கிடைக்கும் என்று தோன்றியது. கதவை ஒரு தரம் உலுக்கிக் கிலுக்கிப் பார்க்கலாம்.



அந்த வீட்டுக்குள் நுழைவது ஆபத்து என்று அறிவு சொன்ன போதிலும், இனி அதுதான் வழி என்று தீர்மானித்து மாமாவின் வீட்டுக்கே விரைவாகத் திரும்பினான்.

யாரும் கவனித்து விடக் கூடாதென்று ஓரமாக ஓடிய போது காலில் சரேலென்று எதுவோ குத்தியது. தள்ளாடித் தடுமாறினான்.

எதிர் வீட்டுக்காரர் அவனைப் பார்த்துவிட்டு, ''அடடே! என்ன ஆச்சு?'' என்று விரைந்து வந்தார். இன்னும் இரண்டொரு பேரும் வந்தார்கள். பிடித்துக் கொண்டார்கள்.

''ஒன்றுமில்லை'' என்று அவன் திமிற முயன்றான்.

''இது உங்க மாமா வீடுதானே? உள்ளே வாங்க'' என்று ஒருவர் அவன் கையைப் பிடித்து இழுத்துச் செல்லாத குறையாக அழைத்துச் சென்றார்.

''மனோ எங்கே? மனோ! உங்க அத்தான் வந்திருக்கிறார் பார்!'' என்று யாரோ குரல் கொடுத்தார்கள்!

''இல்லை, நான் போகிறேன்.'' தாஸ் எழுந்து கொள்ள முயன்றான். எவரும் விடவில்லை.

படபடவென்ற சத்தத்துடன் ஒரு மோட்டார் பைக் வாசலில் வந்து நின்றது.

''என்ன கூட்டம் இங்கே?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார், தணிகாசலம்.

தாஸுக்குத் தலை சுற்றியது.

எதிர் வீட்டுக்காரர், ''என்ன சார்! பந்திலே நீங்க வெளியூரிலே மாட்டிக் கிட்டதாய்ச் சொன்னாங்களே?'' என்று விசாரித்தார்.

''இன்னிக்கு விடிகாலையிலே செங்கல்பட்டுக்கு வந்து விட்டேன். அங்கேயிருந்து மெட்ராஸ் வரத்தான் வழி கிடைக் கலே. கடைத் தெருவிலே அலைஞ்சிட்டிருந்தப்போ ஒரு பழைய சினேகிதரைப் பார்த்தேன். தன்னோட மோட்டார் பைக்கைக் கொடுத்தார்...'' என்று விளக்கியவர் தாஸைப் பார்த்தார். ''என்னப்பா தாஸ், என்ன ஆச்சு? காலிலே என்ன காயம்? ரத்தம் வருதே?''

''பாவம், தெருவிலே ஏதோ ஆணி குத்திட்டுது'' என்றார் ஒருவர்.

''அதோ பிடுங்கிப் போட்டிருக்கிறேன் பாருங்க! எவ் வளவு பெரிய ஆணி! மூணு அங்குலம் இருக்கும்!'' என்றார் இன்னொருவர்.

★

# 6. புதையலும் கட்டை விரலும்

திண்ணையில் படுத்திருந்த கிருஷ்ணன் விருட்டென்று எழுந்து உட்கார்ந்தான். ஆஷ் டிரேக்குப் பதிலாக அவன் தலை மாட்டில் வைத்துக் கொண்டிருந்த கொட்டாங்கச்சி அவன் எழுந்த

வேகத்தில் கவிழ்ந்தது. சிகரெட் காம்புகள் அவன் வேட்டி மீது தெறித்து விழுந்தன. ஓசைப்படாமல் அவைகளை உதறி விட்டுக் கொண்டான்.

உற்றுக் கேட்டான்.

தரையில் மண்வெட்டியால் வெட்டி மண்ணை அந் தண்டை எறியும் ஓசை என்று அவனால் ஊகிக்க முடிந்தது.

அண்ணன் வேலாயுதம்தான் ஏதோ ரகசியமாகச் செய் கிறார் என்று அவனுக்குப் புரிந்தது.

திண்ணையை விட்டு இறங்கினான்.

பத்து நாள் முந்தி அவனிடம் யாராவது, 'நீ உன் கிராமத்துக்குப் போகப் போகிறாய். உன் அண்ணனின் காலில் விழுந்து ஆசி கேட்கப் போகிறாய்' என்று சொல்லியிருந்தால் கிருஷ்ணன் சிரித்திருப்பான். கோபம் கூட வந்திருக்கும். 'அண்ணனா! அவன் மூஞ்சியில் விழிப்பேனா நான், சோற்றில் உப்புப் போட்டுத் தின்கிற வரையில்?!' என்று கசப்புச் சிரிப்புச் சிரித்திருப்பான்.

ஆனால் விதி அவனை இங்கே வரும்படி பண்ணி விட்டது. அழகான விதி. பதினெட்டு வயது விதி. புடவை கட்டிக் கொண்டு, கொடி போல் அசைந்து கொண்டு, சிரிப் பால் பதினாலு உலகங்களை மயக்கக் கூடிய, வீணா என்ற பெயருள்ள விதி. எட்டு மாதங்களுக்கு முன்னால் ஒருநாள் அவனுக்கு அறிமுகமான விதி.

அவன் வேலை பார்க்கும் பிரைவேட் லிமிடெட்டில் மற்ற குமாஸ்தாக்களும் சில்லறை மானேஜர்களும் டெபுடி ஜி.எம்.மின் வீட்டுக்குப் போய்ச் சலாம் போட்டுக் கொண் டிருந்த மாதிரி கிருஷ்ணன் போனது கிடையாது. அப்படியும்



ஒருநாள் ஒரு பைலைத் தூக்கிக் கொண்டு போகும்படி நேர்ந்து விட்டது.

அவனைக் கண்டதும் குரைக்க ஆரம்பித்த நாயை, 'சும்மா இரு மிம்மி' என்று அதட்டுவதற்காக அவள் உள்ளே யிருந்து வந்தாள். அப்போதே அந்த வனதேவதையிடம் கிறங்கிப் போய்விட்டான் அவன். புறங்கையால் அவள் தலையைக் கோதிவிட்டபடி சற்றுச் சாய்வாக நின்றவாறு, ''யாரைப் பார்க்க ணும்?'' என்று மூன்று முறை கேட்ட பிறகுதான் அவனுக்குச் சுயப்பிரக்ஞை வந்தது.

டெபுடி ஜி.எம்.மின் பர்சனல் கிளார்க் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். உள்ளே போனான். டெபுடி ஜி.எம். ஒரு கையில் சிகரெட்டை ஊதியபடியே இன்னொரு கையால் கையெழுத்துப் போட முயன்றார். பேனாவில் இங்க் வரவில்லை, உதறினார். அவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்த நாய்க் குட்டி நீலப் புள்ளிகளுடன் குரைத்துக் கொண்டு ஓடியது!

கிருஷ்ணன் சிரித்தான். அவள் சிரித்தாள்.

ஒரு வாலிபனும் ஒரு யுவதியும் சேர்ந்து சிரிக்கும்போது என்ன முளைக்குமோ அது முளைத்து விட்டது.

டெபுடி ஜி.எம்.மின் காதில் விஷயம் விழுந்தது. ஒரு பக்கம் மாடர்ன் ஆள். இன்னொரு பக்கம் பழைய பஞ்சாங்கம். ''உனக்கு என் பெண்ணைக் கொடுப்பதில் ஆட்சேபமில்லை. ஆனால் நீ யாரோ, என்னவோ தெரியவில்லை. குலம் கோத்தி ரம், உன் அப்பா, அம்மா சமாசாரம் எல்லாம் தெரிந்தாக வேண்டும்'' என்றார்.

''இவ்வளவுதானே? இதோ என் அண்ணனை அழைத்து வருகிறேன். அவரையே உங்களிடம் பெண் கேட்கச் சொல் கிறேன்'' என்று உற்சாகமாகச் சொல்லி விட்டுக் கிராமத்

துக்குப் புறப்பட்டு வந்தான். ஆனால் அண்ணன் வேலாயுதம் அவன் நினைத்திருந்த மாதிரி இருக்கவில்லை.

சின்ன வயதிலிருந்தே அவருக்கு அடங்காத தம்பியாக வளர்ந்தவன் கிருஷ்ணன். மெட்ராசுக்கு ஓடியபின் அண்ணனுக்கு ஒரு கார்டுகூடப் போட்டதில்லை.

அதெல்லாம் சேர்ந்து வேலாயுதத்துக்கு ஏகப்பட்ட ஆத்திரம். ''உனக்குக் கல்யாணமானால் என்ன, கருமாதியானால் எனக்கென்ன? நான் மெட்ராசுக்கு வரவும் முடியாது. அந்த ஆளைப் பார்க்கவும் முடியாது. எக்கேடோ கெட்டுப் போ!'' என்று கூறிவிட்டார்.

அண்ணிதான் – நோயாளி, பாவம் – இரண்டு நாள் அவனைத் தங்கியிருக்கச் சொன்னாள். மறுபடியும் மறுபடியும் இரண்டு மூன்று தடவை கேட்டால் அண்ணன் மனம் மாறக் கூடும் என்று கிருஷ்ணன் காத்திருந்தான்.

அப்போதுதான் இரவில் இந்த ஓசை கேட்டது. திண்ணையை விட்டு இறங்கினான் கிருஷ்ணன். வீட்டைச் சுற்றிக் கொண்டு போய்ப் பார்த்தபோது...

வேலாயுதம் சூடம் கொளுத்திக் கும்பிட்டுக் கொண்டிருந்தார். பள்ளத்துக்குள் இறங்கினார். தலை மறைந்து விட்டது.

அப்படியானால்... கிருஷ்ணனுக்கு வியர்த்தது.

புதையல் எடுக்கிறார் அண்ணன்!

அடிமேலடி வைத்து முன்னேறினான் அவன். பள்ளத்தினருகே ஓசைப்படாமல் போய் நின்று கொண்டான். ஓர் ஆள் ஆழத்துக்கு வெட்டியிருந்தது. அண்ணன் எத்தனை காலமாக வெட்டிக் கொண்டிருக்கிறாரோ இப்படி தனியாக! அண்டை அயலில் வீடு இல்லாதது சௌகரியம்தான்!



வேலாயுதம் மேலேறி வந்தார், கையில் ஒரு பழைய தவலையுடன். பள்ளத்துக்கு வெளியே வந்தாரோ இல்லையோ, தம்பியைக் கண்டதும் அவர் முகம் பேயறைந்த மாதிரி ஆயிற்று. அதே வினாடி, அவர் கையிலிருந்த பித்தளைத் தவலையைக் கண்டதும் கிருஷ்ணனின் முகத்தில் பிரமிப்பு கூத்தாடிற்று. அந்த அரையிருட்டில்கூட அந்தத் தவலைக்குள் நிறைந்திருந்த தங்க வெள்ளி நகைகளும் காசுகளும் அவன் கண்களைப் பிதுங்க வைத்தன.

''அண்ணே... வணக்கம் அண்ணே!'' என்றான் கிண்டலான குரலில்.

அவர் முகத்தில் பயமும் அதைக் காட்டிலும் அதிகமாகக் கோபமும் உதித்தன. ''என்ன... எதுக்கு இந்த நேரத்தில் இங்கே வந்தே?'' என்று கடுகடுத்தார்.

கிருஷ்ணன் சிரித்தான். ''இந்த நேரத்திலே இங்கே நீங்க என்ன பண்ணறீங்கன்னு பார்க்கத்தான்'' என்றவன், அவர் கையிலிருந்த தவலையைப் பற்றினான். ''அடடே! என்னமோ புதையல் மாதிரில்ல இருக்கு?'' என்றான்.

வேலாயுதம் புத்திசாலியாக இருந்திருந்தால் தம்பியை நைச்சியம் செய்து கொண்டு சரி செய்திருக்கலாம். ஆனால் ஆசை இருந்த அளவுக்கு அறிவு இல்லாததால், ''விடுடா அதை! தொட்டேன்னா தெரியும் சேதி! நான் படாத பாடுபட்டு எடுத்திருக்கிறேன். பங்குக்கா வர்றே!'' என்று திமிறினார்.

அவ்வளவுதான். கிருஷ்ணனுக்குக் கடும் கோபம் பீறிட்டது. ''என்ன நீ, போனால் போகுதுன்னு பார்த்தால்... என் காதலுக்குத்தான் உதவ மாட்டேன்னு சொன்னே! இதிலுமா பங்கு இல்லை?'' என்று அவரைக் கீழே தள்ளினான். அவரும் விடவில்லை. மண்வெட்டியை எடுத்தார். அவனை வெட்டுகிற

மாதிரி வீசினார். நெருப்பு மாதிரி கையில் பட்ட காயத்தில் அவனுக்கு வெறி பிடித்தது. மண்வெட்டியைத் திருப்பி ஒரு போடு போட்டான். மண்டையில் சரியான அடி. வேலாயுதம் பொக்கென்று விழுந்தார். மறுவினாடி அவருடைய உயிர் பிரிந்து விட்டது.

கிருஷ்ணன் இதை எதிர்பார்க்கவில்லை. ஆனால் இத்தனை தூரம் ஆனபின் என்ன செய்ய முடியும். அண்ணனின் உடலைக் குழிக்குள் தள்ளினான். தாராளமான பெரிய குழி. பழையபடி சருகுகளைப் போட்டு மூடினான். ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருந்த இடமாகையால் எவனும் எதையும் கண்டுபிடிக்க மாட்டான் என்கிற தைரியம் வந்தது.

அப்புறம்தான் கையின் வலி அவனைக் கவனிக்க வைத்தது. பார்த்தான், திடுக்கிட்டான். வலது கையில் கட்டை விரலை அடியோடு வெட்டியிருந்தது மண் வெட்டி. வெறும் மொக்கையாக இருந்தது வெட்டுப் பட்ட இடம். ரத்தம் பெருகிக் காய்ந்து போயிருந்தது. சுற்றும் முற்றும் பார்த்தான். கட்டை விரல் எங்கே விழுந்தது என்று தெரியவில்லை. அதைத் தேடி எடுத்துத்தான் என்ன ஆக வேண்டும்?

கையைச் சுத்தம் செய்து கொண்டான்.

ராவோடு ராவாகக் கிளம்பிவிட்டான்.

சென்னை வந்து வீட்டை அடைந்தபோது இருட்டி விட்டது. வீட்டுக்குச் சொந்தக்காரர் கூடப் பார்க்காதபடி பின் புறமாகவே மாடியறையை அடைந்து, தவலையை அலமாரியில் வைத்தான். சாத்தினான். ஒரு டாக்டரிடம் சென்று, ஏதோ பொய் சொல்லிக் கைக்காயத்துக்குக் கட்டுப் போட்டுக்கொண்டான். அவன் மனம் உல்லாசச் சிறகடித்துப் பறந்தது.

புதையல் பொருள்களை ரூபாயாக மாற்றுவதுதான் இனி முக்கியமான வேலை. அது ஒரு கூட்டாளி இல்லாமல்



முடியாது. மதுரையில் அவனுடைய பால்ய சினேகிதன் கார் வண்ணன் இருந்தான். அவனைக் கேட்கலாம் என்று புறப் பட்டான். கார்வண்ணன் பிஸினஸ் விஷயமாகக் கல்கத்தா போயிருப்பதாகத் தெரிந்தது. இரண்டு நாள் தங்கிப் பார்த்து விட்டுப் பலனில்லாமல் திரும்பினான்.

என்ன இது மாடிப்படியில் கூட்டம்? அவனுடைய வீட் டுக்குச் சொந்தக்காரரும் இன்னும் நாலைந்து பேரும் அவ னுடைய அறைக் கதவை மடார் மடாரென்று இடித்துக் கொண் டிருந்தார்கள்.

''என்ன... என்ன?'' என்று நாலு படிக்கு ஒரு காலாகத் தாவினான்.

''ஏம்பா, நீ வெளியிலா போயிருந்தாய்? சொல்ல வேண் டாம்? நாலு நாளாய் உன்னை ஆளையே காணோம். ரூமுக் குள்ளே என்னடான்னா சகிக்க முடியாமல் நாற்றம் வருது...'' என்றார் வீட்டுக்காரர். எல்லாருமே துண்டினால் மூக்கைப் பொத்திக் கொண்டிருப்பதைக் கண்டான் கிருஷ்ணன். அவன் அடிவயிற்றில் என்னமோ புரண்டது.

''ரூமைத் திற முதலில்'' என்றார் வீட்டுக்காரர். கிருஷ்ணன் திறந்தான். அதே சமயம், யார் சொன்னார்களோ, ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் வந்து சேர்ந்தார்.

''அதோ... அந்த அலமாரிக்குள்ளிருந்துதான் நாற்றம்'' கிருஷ்ணன் தடுக்குமுன் வீட்டுக்காரர் கதவைத் திறந்தார்.

தவலை...

''என்ன இது...'' கவிழ்த்தார்.

பவுனும் வெள்ளியுமாய்க் காசுகளும் வளையல்களும் செயின்களும் தரையெங்கும் உருண்டோட, அவற்றுடன் கூடவே...

அழுகி வீங்கிப் போன ஒரு கட்டை விரல்!

இன்ஸ்பெக்டர் உள்ளே பிரவேசித்தார்.

கிருஷ்ணனுக்கு ஒரே ஒரு விஷயம்தான் முக்கியமாகத் தோன்றியது. புதையல் போனால் போகட்டும். அவன் ஒரு கொலையைப் பண்ணிவிட்டு வந்திருப்பதுதான் முக்கியமாக வெளியே தெரியக் கூடாது.

''ஹி...ஹி... இந்தத் தவலை நேற்று பார்க்கிலே ஒரு பெஞ்சில் கிடந்தது... யார் வைத்தார்களோ தெரியவில்லை'' என்றான்.

''அது சரி... இந்த விரல்?'' இன்ஸ்பெக்டர் அவனுடைய மொக்கைக் கையைப் பார்த்தார்.

அதே சமயம் மாடிப்படியில் ஒரு குரல் கேட்டது. பெண் குரல்.

''தம்பி... அண்ணனும் நீயுமா ஏன் திடீர்னு மெட்ராஸ் புறப்பட்டுட்டீங்க? ஒரு தகவலும் இல்லாமல் எனக்குக் கவலையாய்ப் போச்சு.''

அவனுடைய கிராமத்து அண்ணி படியேறி வந்து கொண்டிருந்தாள், இன்ஸ்பெக்டருக்கு விளங்காதவைகளை விளங்க வைக்க.

★

# 7. வாடகைக் கள்வன்

ஒரு செவ்வாய்க் கிழமையன்று மாலை டவுன் கிளப்பில் சீட்டாட்டம் நடந்து கொண்டிருந்தது.

''என்ன சிதம்பரம் சார், கையிலே முப்பத்திரண்டு ரூபாய் ரெடியாய் இருக்கிறதா? குற்றாலத்திலே ஒரு பங்களா வந்தால்

சொல்லச் சொன்னீர்களே? வந்திருக்கிறது'' என்றார் சுகாதார ஆபீசரான ஸ்ரீபாஷ்யம்.

''இன்சல்ட், இன்சல்ட்!'' என்று புகையை விட்டார் சர்க்கிள் சாரங்கன். ''மிட்டாதாரைப் பார்த்துக் கேட்கிற கேள்வியா இது? முப்பத்திரண்டு என்ன ஐயா, ஐம்பது வேண்டுமா? நாளைக்கே!''

மிட்டா சிதம்பரம் திருச்சிராப்பள்ளி சுருட்டின் நுனியை மென்றவாறு முறுவலித்தார். ''என்றைக்கு வேண்டும்?'' என்றார் மிடுக்காக.

''நாலைந்து கிராக்கி இருக்கிறதாம். இன்றைக்குச் செவ்வாய்க்கிழமையா? வியாழக்கிழமை சாயந்தரத்துக்குள் தயார் பண்ணி வைத்துக் கொண்டால் போதும்.''

''பூ!'' என்றார் சிதம்பரம். அந்த மூச்சோடேயே கவலையும் பிறந்தது. முப்பத்திரண்டு லட்சம் ரூபாய்! அறுபது மணி நேரத்துக்குள் சேகரித்தாக வேண்டும்...

அதே செவ்வாய்க் கிழமை மாலை. எக்ஸ்டென்ஷன் வரிசையில் பட்டும்படாமலும் இருந்த புதிய பங்களாவின் முதல் மாடி படுக்கை அறையில், மென்மையான மெத்தையின் நுனியில் ஒய்யாரமாக அமர்ந்தபடி, நிலைக் கண்ணாடியின் மூலம் தன் வனப்பைத் தானே பருகிக் கொண்டிருந்தாள் நாகம்மாள். கழுத்தண்டையில் சுருண்டு விழும் கேசத்தை மெதுவாக வருடி விட்டுக் கொண்டிருந்தபோதுதான் கவனித்தாள்... வைர நெக்லஸை அணிந்து கொள்ளாமல் இருக்கிறோமே என்று.

பீரோவைத் திறந்து அவசரமாக எடுத்துப் பூட்டிக் கொண்டாள். சங்கு போன்ற கழுத்தில் வைரம் பூச்சொரிந்தது.



'இளையாளாய் வாழ்க்கைப்படுகிறாயே என்று கேலி பண்ணிய திமிர்க் கழுதைகளெல்லாம் இப்போது வந்து பார்க்கட்டுமே!' என்று எண்ணிக் கொண்டாள். ஆயிரம்தான் பணக்காரனானாலும், இளைஞனுக்கு இவ்வளவு ஆசை வருமா பெண்டாட்டி மீது?

அப்படி அவருக்கு வயதும் அதிகம் ஆகவில்லை.

'மிட்டா சிதம்பரம், தளதளவென்று, ஐம்பது வயதிலும் முப்பது மாதிரியே இருக்கிறார்' என்று எவ்வளவோ பேர் சொல்லிக் காதில் விழுந்திருக்கிறது.

இந்த மாதிரி ஒரு விலையுயர்ந்த நகை அவர் வாங்கித் தந்து ரொம்ப நாளாகிறது. வந்ததும் கேட்கவேண்டும்...

அதே செவ்வாய்க்கிழமை மாலை. சிறைக் கதவுகள் கிரீச்சிட்டுச் சாத்திக்கொள்ள, 'அம்மாடி!' என்ற ஆறுதலுடன் வெளியே வந்து சுதந்திரக் காற்றை அனுபவித்தான் வேலப்பன்.

ஆறு வருடம்! உள்ளே இருந்த ஒவ்வொரு கணமும் நீண்டு நீண்டு தோன்றிய அந்தக் காலம், இப்போது' நினைத்துப் பார்த்தால் எவ்வளவு வேகமாக ஓடிவிட்டதாகத் தோன்றுகிறது!

வேலப்பன் முதுகை நிமிர்த்திச் சோம்பல் முறித்துக் கொண்டான். சிறையில் சம்பாதித்த பதினைந்து ரூபாய் சில்லறை ஜேபியில் குலுங்கிற்று.

சிதம்பரம் கற்பனையில் மிதந்தவாறு காரை ஓட்டிக் கொண்டு வந்தார். முப்பத்திரண்டு லட்சத்துக்கு எங்கே போவது? அசட்டுத்தனமாக ஏன் அங்கே ஜம்பம் பேசித் தொலைத்தோம்?

சரக்...

பழக்கம் காரணமாக, கையும் காலும் கண்ணும் ஒரே சமயத்தில் இயங்கி, சரேலென்று பிரேக்கைப் போட்டன.

''எவனடா மடையன் இப்படி...''

''நீங்களா எஜமான்! உங்களைப் பார்க்கத்தான் போயிட்டிருந்தேன்'' என்று ஓடிவந்து, கார் ஜன்னலண்டை நின்று இளித்தான் வேலப்பன்.

''அட பாவி! விடுதலையாகி விட்டாயா?''

''ஆமாங்க...''

''பொய்யை ஒழுங்காய்ச் சொல்லத் தெரியாமல் மாட்டிக் கொண்டாய். போகட்டும். இனிமேலாவது ஒழுங்காய்ப் பிழை!''

''எஜமானை எப்போ வந்து பார்க்கட்டும்?''

''என்னையா?... எதற்காக?... சரி, காலையிலே வா.''

**''வ**ரவர ரொம்ப நேரம் கழித்துத் திரும்புகிறீர்கள் வீட்டுக்கு. இந்தப் பொட்டல் காட்டில் நான் தனியாயிருக்கிறேனே என்று கொஞ்சமேனும் கவலையில்லையே உங்களுக்கு?'' என்று சிணுங்கினாள் நாகம்மாள்.

''சீ,சீ, அசடு! உன் நினைவு இருப்பதனால்தான்... இவ்வளவு சீக்கிரம் வருகிறேன்'' என்று இளம் மனைவியை லேசாக அணைத்துக் கொண்டார் சிதம்பரம்.

அவளது கழுத்தில் மின்னிய நெக்லஸ் அவரது சிந்தனையைக் கிளறிற்று.

**பு**தன்கிழமை விடிந்தது.



''என்ன, எல்லாம் புரிந்ததா? ஒன்று கிடக்க ஒன்று செய்து விடாதே!'' என்றார் சிதம்பரம்.

''புரிஞ்சுதுங்க எஜமான், ராத்திரி பன்னிரண்டு மணிக்கு உங்கள் படுக்கை அறையில் நுழைய வேண்டியது. கத்தியைக் காட்டி ரகளை பண்ணி, நெக்லஸை அடித்துக் கொண்டு போக வேண்டியது... அப்புறம் உங்களை ரகசியமாய்ச் சந்தித்து, நகையைச் சேர்ப்பித்து, ஆயிரம் ரூபாய் பெற்றுக் கொள்ள வேண்டியது...''

''ரைட், ரைட்!''

''வேலைக்காரங்க யாராவது வந்திட்டால்...'' வேலப்பன் இழுத்தான்.

''மடையா! அவங்களை விட்டு வைப்பேனா? இரண்டு பேர்தான் இருக்கிறார்கள். எங்காவது வெளியூருக்கு அனுப்பி வைக்கிறேன்!''

**பு**தன்கிழமை இரவு, சீட்டாட்ட மேஜையிலிருந்து சீக்கிரமாகவே எழுந்து விட்டார் மிட்டாதார்.

''மணி பத்துதானே ஆகிறது'' என்று சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தடுத்துப் பார்த்தார்.

''வீட்டிலே ரொம்ப முணுமுணுக்கிறாள். அத்தோடு ஒரு பெரிய வேலை வேறே பாக்கி இருக்கிறதே? ஆனானப்பட்ட மிட்டாதாரரானாலும் முப்பத்திரண்டு லட்சம் புரட்டுவது அவ்வளவு சுலபமா? பொழுது விடிந்ததும் ஒரு இடத்துக்குப் போய் ஏற்பாடு பண்ண வேண்டும்'' என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டுப் போய்விட்டார் சிதம்பரம்.

**''தி**ருடன்! திருடன்! ஐயையோ!'' என்று வீரிட்டுத் துள்ளி எழுந்தாள் நாகம்மாள்.

''டேய்!'' என்று பாய்ந்தார் சிதம்பரம்.

வந்தவனின் கையிலிருந்த கத்தி இருவரையும் வாய் அடைக்க வைத்தது.

''பலே, பலே! அருமையான நெக்லஸ்!'' என்று ஆர்ப்பாட்டமாகப் பேசியபடி கிட்டே வந்தான் வேலப்பன்.

அவன் கைகள், தளிர்போல் நடுங்கும் அந்த இளமங்கையின் கழுத்தைத் தடவின... தடவிக் கொண்டேயிருந்தன.

''டேய், டேய்!'' என்று பீதிக் கூச்சல் விடுத்தார் சிதம்பரம்.

பயந்து நடுங்கிக் கண்ணை மூடிக் கொண்டாள் நாகம்மாள்.

வேலப்பன், வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்தான்.

இளமை கொழித்துக் குலுங்கும் அந்தத் தளதளப்பான மேனி, அவன் தலையைக் கிறுகிறுக்க வைத்தது. படுத்தெழுந்த நிலையிலிருந்த ஆடைகளின் அலங்கோலம், இல்லாத கிளர்ச்சிகளையெல்லாம் அவன் உடம்பில் ஏற்றிற்று.

டவுன் கிளப் கடியாரம் மணி இரண்டடித்தது.

''எழுந்திருக்கலாமா?'' என்றார் சர்க்கிள் சாரங்கன்.

''ஒரு முட்டாள்தனம் பண்ணிவிட்டேன், சார்'' என்று வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டார் ஸ்ரீபாஷ்யம். ''அதுதான் கொஞ்ச நேரமாய் மனசை உறுத்துகிறது.''

''என்ன சாமி புதிர் போடுகிறீர்?''

''ஒன்றுமில்லை... அந்த குற்றாலம் பங்களா சமாசாரம்... அது வெறும் கப்ஸா!''



''என்னது!''

''ஆமாமையா'' என்று தலையைக் குனிந்து கொண்டு பேசினார் ஸ்ரீபாஷ்யம். ''மிட்டாதார் கொஞ்ச நாளாய்க் கடன் உடனில் திணறிக் கொண்டிருக்கிறார் என்று காதிலே விழுந்தது. ஆசாமியைக் கொஞ்சம் ஆழம் பார்க்கலாமே என்று ஆரம்பித்தேன். மனுஷன் நிஜமாகவே பணம் ஏற்பாடு பண்ணிக் கொண்டு வந்து விடுவான் போலிருக்கிறதே? 'எங்கே ஐயா பங்களா' என்ற கேட்டால் என்ன சொல்லுவது?''

பலமாகத் தலையை ஆட்டினார் சர்க்கிள். ''சே, சே! மிட்டாதார் சுபாவம் உமக்குத் தெரியாது. விஷயத்தை ரொம்பத் தூரம் வளர விட்டோமானால் இரண்டு பேருக்குமே தீம்பு...''

ரத்தக் காயத்தில் கிடந்தார் சிதம்பரம், அரை நினைவுடன். பீதியினால் மூர்ச்சையாகி விட்ட நாகம்மாளை முரட்டுத்தனமாகத் தூக்கிக் கொண்டு அவரிடம் வந்தான் வேலப்பன்.

''பொய் ஒழுங்காய்ச் சொல்லத் தெரியாமல் மாட்டிக் கொண்டேன் என்று இரக்கமில்லாமல் எவ்வளவு திமிராய்ப் பேசினாய்! ஏண்டா டேய், அதனாலா நான் மாட்டிக் கொண்டேன்? சோற்றுக்கில்லாமல் நானும் என் குடும்பமும் தவியாய்த் தவித்தபோது நீ பணத்தைக் காட்டி என்னை மயக்கித் தப்பு வழிக்கு இழுத்தாய். உனக்காக உன் விரோதி ஒருவனை அடித்து உதைத்தேன். சிக்கினேன். நீ பெரிய மனுஷனாய் லட்சணமாய் ஒதுங்கிக் கொண்டாய்!''

சிதம்பரம் விழிவிழியென்று விழித்தார்.

''ஐம்பது லட்சம் பெறுமான நெக்லஸை உன்னிடம் கொடுத்து விட்டுப் போக நான் முட்டாள் இல்லை. அதைத் தட்டிக் கொண்டு போய்விடத்தான் வந்தேன். தூ! உன் லட்

சத்தைக் குப்பையிலே போடு! கோடி பெறுமானமுள்ள உன் சம்சாரம்... முட்டாள்!''

''ராத்திரி இவ்வளவு நேரமாயிற்றே என்று பார்க்க வேண்டாம். காலையில் அவர் பணத்துக்காக வெளியே புறப் படுவதற்கு முன்னால் தடுத்துவிட வேண்டும். என்ன?'' என்றார் சர்க்கிள்.

''ஆமாம், ஆமாம்'' என்று கதவைத் தட்டப் போனார் ஸ்ரீபாஷ்யம்.

அதற்குள் கதவு படீலென்று திறந்து கொள்ள, தோளில் சாத்திய நாகம்மாளுடன் வேகமாக ஓடிவந்த வேலப்பன்...

சர்க்கிளின் திறந்த கையிலே வந்து விழுந்தான் வசமாக.

★

# 8. ராஜி என் கூட்டாளி

''அட!'' என்று ஆச்சரியப்பட்டுப் போனேன் பேப்பரில் அவளுடைய பெயரையும் புகைப்படத்தையும் கண்டவுடன்.

ஹைகோர்ட்டிலுள்ள எனது 'சேம்பரில்' என் எதிரில், மேலக்கரை மிட்டாதார் உட்கார்ந்திருந்தார். சாமியப்பா பிரை

வேட் லிமிடெட்டின் மானேஜிங் டைரக்டர் ஒரு வழக்கு சம்பந்த
மாகக் காத்துக் கொண்டிருந்தார். சின்னவர்களும் பெரியவர்
களுமான பல கட்சிக்காரர்கள் வெராந்தாவில் வழிய வழிய
நின்று கொண்டிருந்தார்கள். குமாஸ்தா ஒரு ரெவின்யூ ஸ்டாம்பை
நீட்டிக் கொண்டிருந்தார்.

ஆனால் இவ்வளவு உருவங்களும், அவ்வளவு பிரச்னை
களும் என் பார்வையிலிருந்து விலகிப் போயின.

ராஜி ஒருத்திதான் நின்று கொண்டிருந்தாள். பள்ளிப் பிரா
யத்தில் என் ஆருயிர்த் தோழியாகத் திகழ்ந்த ராஜியையே நான்
கண்கொட்டாது நோக்கினேன்.

எவ்வளவு காலம் ஆகிவிட்டது அவளைச் சந்தித்து! எட்
டாம் கிளாஸ் படிக்கும் போதல்லவா அதெல்லாம்! ஆனாலும்
அந்த நீண்ட முகம், விளக்குப் போட்ட மாதிரி பிரகாசிக்கும்
கண்கள், கழுத்தில் மச்சம் முதலியன அப்படியே போட்டோ
வில் இருந்தன. ''டேய் பாலு!'' என்று பியானோக் குரலில்
அவள் கூப்பிடுவதுகூட இப்போதுதான்போல என் காதில்
ஒலித்தது.

எனக்கும் அவளுக்கும் அப்படியொரு சினேகம்.

''சீ! வெட்கமாயில்லை சேர்ந்து விளையாட?'' என்று
பெரியவர்கள் கண்டிப்பார்களே, அந்த இரண்டும் கெட்டான்
பிராயம் எங்களுக்கு. நான் ஆண், அவள் பெண் என்கிற
வேற்றுமையுணர்ச்சி எங்கள் இருவருக்குமே ஏற்படவில்லை.

ராஜியை முதன் முதல் நான் பார்த்தது ஒரு நட்ட நடு
ராத்திரியில்.

எங்கள் வீட்டுக்கு மேலண்டை வீட்டில் குடியிருந்தவர்
கள் காலி செய்து கொண்டு போயிருந்தார்கள். எங்கள் திண்ணை



யைக் காட்டிலும் அந்த வீட்டுத் திண்ணை அதிக அகலமாயும்
தலைக்குச் சாய்வுடனும் இருந்ததால் அங்கேதான் இரவு
வேளையில் நான் படுத்துத் தூங்குவது வழக்கம். வாசல் குளத்தி
லிருந்து வரும் காற்று, தென்னங்கீற்றின் இனிய மணத்தைத்
தாங்கி வந்து சுகமான நித்திரையில் என்னை ஆழ்த்தி விடும்.
என் அப்பா மகா கண்டிப்புக்காரரானாலும் நித்திரை விஷயத்
தில் மட்டும் என் இஷ்டப்படியே விட்டுவிட்டார்.

ஒருநாள் நள்ளிரவு வேளை இருக்கும். ஜல் ஜல் என்று
நாலைந்து வண்டிகள் வந்து நின்றன வாசலில். அரிக்கன்
விளக்குகள் குறுக்கும் நெடுக்குமாய் நிழல்களைத் தூவிக்
கொண்டு நடமாடின. ஒரு பெண்மணி, ''யாரோ பிள்ளை தூங்கு
கிறதே இங்கே?'' என்று கேட்டுக் கொண்டே செல்லும் குரல்
காதில் விழுந்தது.

கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தேன்.

மசமசவென்ற வெளிச்சத்தில் முதன் முறையாக ராஜியைக்
கண்டேன். பார்த்தவுடனேயே, அவள் முகத்தில் இருந்த ஒரு
குறுகுறுப்பு என்னைக் கவர்ந்து விட்டது. அவளைக் காட்டி
லும் பெரிதாக இருந்த ஒரு கிருஷ்ணன் படத்தை வண்டியி
லிருந்து இறக்கிக் கொண்டிருந்தாள் அவள். எங்காவது கீழே
போட்டு உடைத்துவிடப் போகிறாளே என்று என்னையறியா
மலே சட்டென்று எழுந்து அவளுக்குக் கை கொடுக்க ஓடி
னேன். ரொம்பப் பழகியவள் போல், 'உன்னால் முடியாது' என்று
வெடுக்கெனச் சொல்லிவிட்டு அனாயாசமாய் அதை ஒற்றைக்
கையில் எடுத்துக் கொண்டு உள்ளே போய்விட்டாள் அவள்.

அதன் பிறகு நான் தூங்கவே இல்லை. அந்தக் குடும்பத்
தாரும்தான். ராஜியின் அப்பா ஒரு ஹெல்த் ஆபீசராம். சிதம்
பரத்திலிருந்து மாற்றலாகி வந்திருந்தார். ரயில் மிகவும்
லேட்டானதால் அந்த அகால வேளையில் குடிபுக நேர்ந்ததாம்.

ராஜிக்கு ஒரே ஓர் அண்ணன் மட்டுமே உண்டு. ஸ்டைலாகக் கிராப் வாரிக் கொண்டு சைக்கிளில் காலேஜுக்குப் போகிறவன். ராஜியின் அப்பா, அம்மா. ஆக நாலே பேர்தான் மொத்தக் குடும்பமும். வந்திறங்கிய இரவிலேயே தெரிந்து விட்டது அந்தக் குடும்பம் எவ்வளவு வித்தியாசமானதென்று. ஒரே சிரிப்புதான், கும்மாளம்தான். ராஜியின் அண்ணன் இருட்டில் ஒளிந்து கொண்டு அம்மாவுக்கு 'பே' காட்டிப் பய முறுத்துவதும், 'உன்னை என்ன செய்கிறேன் பார் இப்போ!' என்று அம்மா அவனை விளையாட்டாகத் துரத்திப் பிடிப்பதும் ஒரு பக்கம். இன்னொருபுறம், ''அப்பா! உங்கள் படத்தை இங்கேதான் ஜம்மென்று மாட்டணும் அப்பா!'' என்று ராஜி சொல்வதும், ''ஏண்டி, அதிலே மீசை இல்லாமல் இருக்கிறேனே, பரவாயில்லையா?'' என்று மகளை அப்பா அபிப்பிராயம் கேட்பதும் நடந்து கொண்டிருந்தது.

எனக்கு வெகு பொறாமையாயிருந்தது அவர்களைப் பார்க்க. எங்கள் குடும்பம் அவர்களுடையதைப் போல் சின்னதல்ல. பிள்ளைகளும் மருமகள்களும் அத்தைகளும் மாமாக்களும் நிறைந்து நித்திய மகாமகம்தான் என் வீட்டில். என் அப்பா இங்கிலீஷ் பக்கம் தலைவைத்துப் படுத்திராத பழங்கால மனிதர். நிலபுலன்கள் வைத்து ஜீவனம் நடத்தும் கிராமத்துப் பேர்வழி.

புல்கட்டுக் கொண்டுவரும் பெண்மணிக்கு ஓரணா தர வேண்டுமென்று அப்பா எதிரில் நின்று கேட்பதற்குள் என் அம்மாவுக்குப் பாதி உயிர் போய்விடும். அப்பாவுக்குக் கோபம் வந்ததானால் நரசிம்மாவதாரம்தான். தெருவே கிடுகிடுக்கும். என்னை அடித்துவிட்டு, நாலுநாளைக்குத் தன் உள்ளங்கை எரிச்சலுக்கு எண்ணெய் தடவிக் கொள்வார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் பன்னிரண்டு ஆண்டுகளைப் பார்த்திருந்த நான், ராஜியின் குடும்பத்திலே மனம் பறிகொடுத்ததில் ஆச்சரியம் இல்லை.



ராஜி என் பள்ளிக்கூடத்தில், என் வகுப்பில், என் செக்ஷனிலேயே சேர்ந்தாள். எட்டு மாணவிகளில் ஒருத்தியாக, தனி பெஞ்சில் அவள் இருப்பதைத் தவிர, எனக்கும் அவளுக்கும் வேறு பிளவு கிடையாது.

படிப்பில் அவள் சுமார்தான். ஆனால் அதை அவளும் லட்சியம் செய்யவில்லை, அவள் அப்பாவும் பெரிதாய் நினைக்கவில்லை. பாட்டு, பெண்களுக்கான விளையாட்டுப் போட்டி முதலியவைகளில் அவள் பரிசுகள் வாங்குவாள். நானோ அந்தத் திசைக்கே போக மாட்டேன்.

அந்த வருடம் கால்வருடப் பரீட்சையில் நான் குறைவாகவே மார்க் வாங்கியிருந்தேன். பிராக்ரஸ் ரிப்போர்ட் என் பூகோளப் புத்தகத்துக்குள்ளேயே புதைந்து கிடந்தது. அப்பாவுக்குக் காட்டப் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தேன்.

ராஜி?

கொஞ்சமும் கவலைப்படாமல் தன் தகப்பனாரிடம் எடுத்துச் சென்று நீட்டினாள் பிராக்ரஸ் ரிப்போர்ட்டை. நான் பார்த்துக் கொண்டேதான் இருந்தேன். முதலில் கையெழுத்தைப் போட்டுவிட்டு, பிறகுதான் மார்க்குகளைக் கவனித்தார் ராஜியின் அப்பா.

''அம்புஜம்!'' என்று ராஜியின் அம்மாவை அழைத்தார். அவள் வந்ததும், ''உன் பெண் என்னைப்போல் பெரிய பதவிக்கு வர மாட்டாள். வேலம்மாவைப் போல்தான் வருவாள்'' என்றார். வேலம்மா அவருடைய வீட்டு வேலைக்காரி. எல்லோரும் சிரித்தார்கள்.

பரீட்சையில் கம்மியாக மார்க் வாங்குவது ஏதோ வேடிக்கை பண்ண வேண்டிய விஷயம் என்பது போல அவர்கள் நினைப்பதும், பேசுவதும் எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அந்த மன

நிலையினால் என்ன தைரியம் வந்து தொலைந்ததோ, குடுகுடு என்று வீட்டுக்கு ஓடி என் ரிப்போர்ட் கார்டை எடுத்து, சிரித்துக் கொண்டே என் அப்பாவிடம் தந்தேன். (எதற்காகச் சிரித்தேனோ, இன்று வரை எனக்குப் புரியவில்லை.)

மார்க்குகளைப் பார்த்ததும் அப்பா ருத்ர மூர்த்தியானார். ''துளியாவது கவலைப்படுகிறானா பார்த்தாயா, மார்க் குறைந்த தற்கு! கொண்டாட்டமாயல்லவா நீட்டுகிறான்! என்ன திமிர்!'' என்று கோபத்துடன் குதித்தவர், விசிறிக் கட்டையால் என்னை விளாசித் தீர்த்து விட்டார்.

அதற்கு அடுத்தபடியாக எனக்கு அவர் அளித்த தண்டனை மிகமிகக் கேவலம். கட்டியிருந்த அரை டிராயரையும் சொக்காயையும் கழற்றிக் கொண்டு, வெறும் கோவணத் துடன் வாசலில் தள்ளி விட்டார். ''போ படவா! வீட்டுக்குள் ளேயே வர வேண்டாம்!'' என்று உறுமிக் கதவைத் தாழிட்டு விட்டார்.

அப்பாவின் கூச்சலைக் கேட்டதுமே ராஜி வாசலுக்கு வந்தாள். அந்த நிமிடமே நான் எரிந்து சாம்பலாகி விடக் கூடாதா என்று எண்ணும் அளவுக்கு நான் அவமானப்பட்டேன். ஆனால் ராஜி எதுவும் பேசாமல், தன் அண்ணனின் வேட்டியொன்றை எடுத்து வந்து என் பக்கம் எறிந்தாள். நான் கட்டிக் கொண் டேன். அவமானமும் துயரமும் தாளாமல் கண்ணீர் வழிந்தது.

ராஜி என்னைத் தேற்றினாள்.

''பாலு, என் வீட்டுக்கு வாயேன். உனக்கு ஒரு ரகசியம் காட்டுகிறேன்'' என்று என்னை அழைத்தாள். நானும் கண் ணைத் துடைத்துக் கொண்டு அவளைப் பின்தொடர்ந்தேன்.

கொல்லைப் பக்கத்தில் வரட்டி, விறகு முதலியவை அடைத்து வைத்திருக்கிற இடத்தினருகே ராஜிக்கு ஒரு ரகசிய



அறை உண்டு. அதை நோக்கிப் புறப்பட்டோம். முற்றத்தில், ராஜியின் அம்மா கறிவடகம் தயாரித்துக் கொண்டிருந்தவர் எங்களுக்குக் கொஞ்சம் கொடுத்தார். பிசுக்பிசுக்கென்ற மாவை வழித்து வழித்துத் தின்ற ஜோரில் என் வருத்தம் மறைந்து விட்டது.

''என் ரகசியத்தை இன்னொரு நாள் காட்டுகிறேன்'' என்று ராஜி சொல்லி விட்டாள். சாயந்தரம், புளியஞ்சேரியி லிருந்து வந்த என் தாத்தா எனக்காகப் பரிந்து பேசியதன் பேரில்தான் நான் வீட்டுக்குள் அனுமதிக்கப்பட்டேன்.

ராஜியின் ரகசியத்தைத் தெரிந்து கொள்ள முயன்று கொண்டேயிருந்தேன். ஒரு வாரம் ஓடிவிட்டது. மறு வாரத்தில் ஒருநாள்...

வி.எஸ்.ஸின் கணக்கு வகுப்பு ஆரம்பமாயிருந்தது. (அவர் பெயர் வி. சாமிநாதனா, வி. சுப்பிரமணியமா என் பது நினைவில்லை. ஆனால், அவருடைய கரிய பெரிய பய முறுத்தலான உருவம் இப்போது நினைத்தாலும் அச்சம் ஏற் படுத்துகிறது.)

''வீட்டுக் கணக்குப் போட்டு வராத பாய்ஸ்ஸெல்லாம் மரியாதையாய் முதலிலேயே பெஞ்சி மேல் ஏறி விடுங்கள். பெண்கள் தங்கள் இடத்திலேயே நிற்க வேண்டும்'' என்று அவர் அறிவித்ததும், பெண்கள் வரிசையில் ராஜியும் எழுந்து நின்றாள்.

எனக்கு ஆச்சரியமாயிருந்தது. முதல் நாள் மாலை அவர்கள் வீட்டு மாடிப்படியில் (அதுதான் ராஜியின் சிம்மா தனம்) வீட்டுக் கணக்குகளைப் போட்டுக் கொண்டு உட்கார்ந் திருந்தாள்...

வி.எஸ்., நின்று கொண்டிருந்த் பையன் ஒவ்வொரு வனுக்கும் ஸ்கேலினால் உள்ளங்கையில் மும்மூன்று அடிகளை

வழங்கினார். பெண்களுக்கு, நோட்டில் புகார் எழுதி அப்பா விடம் காட்டுமாறு சொன்னார்.

பள்ளி முடிந்து வீடு திரும்புகையில் ராஜியிடம் கேட்டேன். ''உன் நோட்டைக் காட்டுவதற்கென்ன?'' என்று.

சாலையின் ஓரத்துக்கு அழைத்துப் போய்த் தன் நோட்டைப் பிரித்துக் காட்டினாள் ராஜி. ''ஞாபக மறதியாய் இதிலே வரைந்து விட்டேன். எப்படிக் காட்டுவது?'' என்றாள்.

எனக்குக் குபீரென்று சிரிப்பு வந்தது. அளவற்ற ஆச்சரியமும் ஏற்பட்டது.

கணக்கு நோட்டின் ரூல் போடாத பகுதியில் வி.எஸ். ஸின் கேலிச் சித்திரம் வெகு தத்ரூபமாக வரையப்பட்டிருந்தது.

அன்று மாலையில்தான் தன் பொக்கிஷத்தை எனக்குக் காட்டினாள் ராஜி, வீட்டை அடைந்ததும்.

நோட்டு நோட்டாக உருவப் படங்கள்! பார்த்தவர்களை, பார்த்தவைகளை, பார்த்த மாத்திரத்தில் வரைந்திருந்தாள்! கேலிச் சித்திரங்கள் மட்டுமல்ல, அழகிய வண்ண ஓவியங்கள், கோலங்கள், சுவாமி படங்கள், இயற்கைக் காட்சிகள், பூம் பூம்காரன், மாடு, கிளி, யானை – இப்படி நூற்றுக்கணக்கான சித்திரங்கள் அவளுடைய பெட்டியை அடைத்திருந்தன.

''இதெல்லாம் நான் யாரண்டையும் காட்டியதும் இல்லை. சொன்னதும் இல்லை. நீயும் சொல்லாதே'' என்றாள்.

எனக்குப் பேச்சே வரவில்லை, பிரமிப்பில். ஒரு பெரிய சித்திரக்காரியை என் சினேகிதியாய்ப் பெற்றேன் என்ற பெருமை எனக்குப் பிடிபடவில்லை.

அடுத்த இரண்டு மாதங்களுக்கு அவளுடைய ரகசியத்தைப் பகிர்ந்து கொள்ளும் அந்தரங்கத் தோழனாக நான் விளங்கினேன்.



இந்த நிலையில் அரை வருடப் பரீட்சை முடிந்தது. விடுமுறைக்கு ராஜி தன் அப்பாவுடன் மதறாஸ் போய்விட்டுத் திரும்பினாள். சென்னைப் பட்டணத்தில் தான் கண்ட கலைக் காட்சிகளைச் சித்திர வடிவமாக அவள் காட்டியபோது எனக்கு ஏற்பட்ட குதூகலம், பள்ளிக்கூடம் சென்று விடைத் தாள்களைப் பெற்றுக் கொண்ட போது பறந்தே போய் விட்டது.

கால் வருட மார்க்குகளை விடக் குறைவு, அரை வருடப் பரீட்சையில்!

கையிலும் காலிலும் விலங்கு மாட்டிக் கொண்ட மாதிரி, பீதி தரும் பெருஞ்சுமையாகப் பையில் கனத்தன அந்தப் பரீட்சைத் தாள்கள். ஒவ்வொன்றாய் கிழித்தெறிந்தேன் ரகசியமாய். விளையாட்டு மைதானத்தின் பின்புறம் இருந்த வயல் வெளியில் அவை சுக்கல் சுக்கலாய்த் தத்திப் பறந்தன.

ராஜி அனுதாபத்துடன் என் செய்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவளிடம் கூட கலந்து கொள்ள முடியாத அளவுக்கு என் மனதில் அச்சமும் வெறுப்பும் வளர்ந்திருந்தன.

அதற்கு மறுநாள் பிராக்ரஸ் ரிப்போர்ட்டை வழங்கி விட்டார் வி.எஸ்.. அவரவர்கள் பெற்றோரிடம் கையெழுத்துப் பெற்று வந்து தர வேண்டும். வி.எஸ். குறிப்பாக என்னிடம் தரும் போது, ''அப்பாகிட்டே உதை தின்னு!'' என்று குரூரமாக நகைத்தபடி கொடுத்தார்.

இரண்டு நாட்கள் வரை ராஜியின் வீட்டிலும், என் வீட்டின் பின்புறத்திலுமாக அடைந்து கிடந்து, என் அப்பா கண்ணிலேயே படாமல் தப்பிக் கொண்டிருந்தேன்.

அழுது கொண்டோ சிரித்துக் கொண்டோ எல்லாப் பையன்களும் ஆசிரியரிடம் கொண்டு வந்து கொடுத்து விட்டார்கள் பிராக்ரஸ் ரிப்போர்ட்டுகளை. வி.எஸ். என்னைக்

கேட்டபோது, ''அப்பா ஊரில் இல்லை சார்'' என்று மழுப்பி வைத்தேன்.

வீடு திரும்பும் போது, என் அப்பாவை வழியிலேயே பார்க்கும்படி ஆகிவிட்டது. இருவரையும் சேர்ந்து பார்த்த அப்பா, ''ஏண்டி ராஜி, இவனோடு சேர்ந்தால் நீயும் உருப்பட மாட்டாயே! உனக்கு வேறு நல்ல சினேகிதம் கிடைக்கவில் லையா?'' என்றார்.

ராஜி சிரித்துக் கொண்டு, ''பாலு நல்ல சிநேகிதன்தான் மாமா'' என்றாள்.

''ஏண்டா டேய், அரை வருஷப் பரீட்சை மார்க்கெல் லாம் வந்திருக்குமே? எங்கே உன் பிராக்ரஸ் ரிப்போர்ட்?'' என்று அதட்டினார் என்னை.

என் கையிலிருந்த பையில் பிராக்ரஸ் ரிப்போர்ட் இருந் தது. அதை எண்ணும்போதே, எரிகிற வெடிகுண்டை கையில் வைத்திருப்பவன் மாதிரி, என் கைகள் நடுங்கின. ''வந்து... வந்து... இனிமேல் பிராக்ரஸ் ரிப்போர்ட்டே கொடுக்க மாட் டாங்களாம் ஸ்கூலில். ஆன்யுவல் பரீட்சையில் என் மார்க்கைப் பார்த்துத் தூக்கிப் போடுவாங்க. இல்லாட்டி பெயிலாக்கு வாங்க. அவ்வளவுதான்'' என்றேன்.

''நிஜமாகவா?'' என்றார் அப்பா.

''நிஜம்மா அப்பா. ராஜியை வேணுமானால் கேளுங்க ளேன். இல்லையா ராஜி?'' என்றேன்.

''ஆமாம் மாமா'' என்று சாட்சி தந்தாள் ராஜி.

என்னைக் காட்டிலும் ராஜியைப் பலவகையில் உயர் வாக நினைத்திருந்த அப்பா, ''ஓகோ, சரிதான்'' என்று தலை ஆட்டி விட்டுப் போய்விட்டார்.



நான் பொம்மை மாதிரி நின்றேன்.

''என்னடா ஒரே குண்டாப் போட்டு விட்டே?'' என் றாள் ராஜி கடைசியில்.

''பின்னே அவர் கிட்டே பிராக்ரஸ் ரிப்போர்ட்டைக் காட்டச் சொல்றியா? அத்தோடு செத்தேன்'' என்றேன்.

''அப்பா கிட்டே காட்டாமே? வாத்தியார் கிட்டே கொண்டு போய்க் கொடுக்க வேண்டாமா?'' என்றாள் ராஜி.

''ஆமாம்...'' என்று கையைப் பிசைந்தேன். திடீரென்று மின்வெட்டு மாதிரி ஒரு யோசனை.

''ராஜி... ஒரு ஐடியா!'' என்று அவள் காதோடு சொன்னேன்.

ஒரு வினாடி பிரமித்தாள். மறுவினாடி உற்சாகமாய் கை சொடுக்கினாள். ''அட, ஆமாம்! எனக்குத் தோன்றவில் லையே?'' என்றவள், ஓட்டமும் நடையுமாக வீட்டை அடைந் தாள்.

அவள் அறைக்குள் நுழைந்தோம். மேஜை முன் உட் கார்ந்து, பென்சில், இங்க் முதலியவற்றை எடுத்து வைத்துக் கொண்டாள் ராஜி. ''கொடு அதை'' என்றாள்.

என் பிராக்ரஸ் ரிப்போர்ட்டை எடுத்துத் தந்தேன். கால் வருடப் பரீட்சையின்போது அப்பா போட்ட கையெழுத்தைக் கண் கொட்டாமல் ஆராய்ந்தாள்.

மறு வினாடி அவளுடைய கைவண்ணம் ஒளிவிடத் தொடங்கியது.

தன்னை மறந்து, என்னை மறந்து, சூழ்நிலையை மறந்து, பென்சில், காகிதம், கண் இந்த மூன்றும் ஒருமித்து இணைந்து

செயலாற்ற, மயிரிழை மயிரிழையாக எழுத்துக்களை வரைந்தாள் ராஜி. வளைவு, நெளிவு, கோடு, புள்ளி – எதையும் விடவில்லை. அவைகளை அங்கங்கே துளியும் பிசகாமல் இழுத்தாள். இங்கினால் எழுதி முடித்து, ரப்பரினால் லேசாகத் துடைத்து அழித்தாள். அழித்த இடத்தில் காகிதப் பிசிறுகள் தெரியா வண்ணம் ஊதித் தட்டினாள்.

என் அப்பாவே கூட மறுக்க முடியாது, அது தன் கை எழுத்து இல்லை என்று.

அந்த அறையை விட்டு வெளியே வந்தபோது, கிணற்றில் மூழ்கி எழுந்த மாதிரி எனக்கு வியர்த்திருந்தது. அந்தப் பிராக்ரஸ் ரிப்போர்ட்டை என் பையில் வாங்கி வைத்துக் கொண்டபோது என் கை நடுங்கியது. ஆனால் ராஜி துளியும் கவலைப்படவில்லை.

மறுநாள் வி.எஸ்.ஸிடம் கொடுக்கவும், அதை அவர் பார்த்து விட்டு மேஜைக்குள் வைத்துக் கொள்ளவும் வினாடியில் நூற்றிலொரு பங்கு கூட ஆகியிருக்காது. அதற்குள் உலகமே ஸ்தம்பித்து விட்டாற் போலவும், மூச்சு நின்று போய் நான் மரக்கட்டையாகி விட்டாற் போலவும் தோன்றியது எனக்கு. கால்கள் கிடுகிடுவென ஆடித் தொய்ந்தன.

''உடம்பிலே எத்தனை இடங்கள் வீங்கியது?'' என்று என்னைக் கேட்டு விட்டுப் பாடப் புத்தகத்தைப் பிரித்தார் வி.எஸ்.. என் கண் ராஜியை நன்றியுடன் நோக்கின. அவள் என்னைப் பார்த்த பார்வையில் பெருமை வழிந்தோடியது.

வி.எஸ்.ஸும் என் அப்பாவும் வழியில் எங்காவது சந்தித்து விடக் கூடாதே என்று அடுத்த மூன்று நாலு மாதங்களுக்கு நான் வேண்டாத தெய்வம் இல்லை. சுற்றாத பிள்ளையார் கோவில் இல்லை.



முக்கால் வருடப் பரீட்சையில் நான் நல்லபடியாகவே மார்க்குகள் வாங்கியிருந்தேன். ஆனால் பிராக்ரஸ் ரிப்போர்ட்டை அப்பாவிடம் காட்ட முடியாதே!

இம்முறை நான் கேட்காமலே ராஜி தன் கைத்திறனைக் காட்டி மறுபடி எனக்கு உதவினாள்.

எப்படியோ அந்த வகுப்பில் பாஸ் பண்ணி விட்டேன்.

அடுத்த வருடம், நாலாம் பாரம் படிக்க ஆரம்பித்த போது, இரண்டு மாறுதல்கள் நேர்ந்திருந்தன என் வாழ்க்கையில்.

பயங்கர கோபக்காரரும் செயலற்று ஒரு நிமிடம் கூட கழிக்க விரும்பாதவருமான என் தந்தை, ஒரு மாதம் படுத்த படுக்கையாய்க் கிடந்து, நாலு வயதுப் பேத்தியின் கையில் கஞ்சி வாங்கிக் குடிக்கும் அளவுக்குப் பலவீனராக உருமாறி, ஒடுங்கி, முடங்கிக் காலமாகி விட்டார். எங்கள் வீட்டிலேயே அதிகமாய் கதறியவன் நான்தான். கடைசி வரையில் அவரை வெற்றிகரமாக ஏமாற்றி விட்டேனே என்று நினைத்து நினைத்து அழுதேன்.

இன்னொரு மாறுதல். ராஜியின் அப்பாவுக்குச் சேலத்துக்கு மாற்றலாகி விட்டது. ஊருக்குப் போன முதல் வாரம் ஒரு கடிதம் போட்டாள்.

அத்தோடு சரி.

எவ்வளவோ வருடங்களுக்குப் பிறகு இன்றுதான் பேப்பரில் பார்க்கிறேன் ராஜியை.

அவள் புகைப்படத்தை வெளியிட்டு, கீழே நாலு வரி எழுதியிருக்கிறார்கள்.

'செக்குகளில் பொய்க் கையெழுத்திட்டு லட்சக்கணக்கில் மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைதாகியுள்ள ராஜி இவள்தான்'

பெருமூச்சுடன் ராஜியின் படத்தையே பார்த்தேன்.

இந்தப் பொய்க் கையெழுத்தும் அவள் தனக்காகப் போட்டாளோ, அல்லது வேறு யாருக்காகவோ! எப்படிச் சொல்ல முடியும்?

செய்தித் தாளைக் குமாஸ்தாவிடம் நீட்டினேன். ''இந்தக் கேஸில், குற்றவாளியின் சார்பாக நான் அப்பியராகிறேன்'' என்றேன்.

ராஜியை விடுவிக்க முடியுமா? எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் அவளுக்காக ஏதாவது செய்தாக வேண்டுமே? ஏதாவது செய்தாக வேண்டுமே? ஏதாவது செய்தாக வேண்டுமே?

★

# 9. தினமும்

அசோகா ஓட்டலின் கான்ஃபரன்ஸ் ஹாலில் கம்பெனியின் டைரக்டர்கள் மீட்டிங் அப்போதுதான் முடிந்து எல்லாரும் வெறும் ஊர் அரட்டை அடித்துக் கொண்டிருந்தபோது வீரராகவன், ''பார்த்தீங்க இல்ல அக்கிரமத்தை? கையைக்

கட்டி பஸ்ஸை நிறுத்தி, திமுதிமுவென்று உள்ளே புகுந்து, இருந்த பாஸஞ்சர்ஸையெல்லாம் விரட்டியடிச்சிட்டு ஒரே ஒரு ஆளை ஸீட்டிலேயே வைச்சுக் குத்திக் கொன்னுட்டு ஓடிட்டாங்களாம்? பட்டப் பகல்லே நடந்திருக்குது'' என்றார்.

''ரொம்ப நாளாய்க் குறி வச்சிருந்திருப்பாங்க அந்த ஆளை'' என்றார் ஹமீது.

''ஆமாமாம். இதுக்குத்தான் நான் என்ன சொல்றதுண்ணா, நாம எப்பவும் அன்பிரெடிக்டிபிளாய் இருக்கணும். அதுதான் ஸேஃப்'' என்றார் வீரராகவன்.

''அப்படின்னா?''

''நாம எல்லாருமே பிஸினஸ் பீப்பிள். நாலு நல்லது செய்தோம்னா பத்து கெடுதலும் செய்திருப்போம். நாலு சினேகிதங்கன்னா பத்து எதிரிகளும் இருப்பாங்க. அவங்க நம்ம நடவடிக்கையையும் நடமாட்டத்தையும் நோட் பண்ணிக் கிட்டே இருப்பாங்க. வாடிக்கையா நாம் என்ன பண்ணிட் டிருக்கிறோம், எங்கே போறோம், எப்படி வர்றோம்னு நமக்குத் தெரியாமல் கவனிச்சிட்டிருப்பாங்க...''

வீரராகவன் பேசப் பேச, மாதவனுக்கு என்னவோ போலிருந்தது. வயிற்றில் ஒரு புரட்டல் எழுந்தது. அவருக்குத் தான் செய்த மோசடிகள், ஏற்படுத்திக் கொண்ட பகைமைகள், கொட்டிக் கொண்ட வயிற்றெரிச்சல்கள் எல்லாம் ஞாபகத் துக்கு வந்தன.

வீரராகவனை நோக்கி, ஒரு புன்னகையுடன், ''அதுக் காக நாம் என்ன செய்யணும்கிறீங்க?'' என்றார்.

''அதான் சொன்னேனே... அன்பிரெடெக்டிபிளாக இருக் கணும்... ஒருநாள் போற காரிலே ஒருநாள் போகக்கூடாது.



ஒருநாள் போகிற ரூட்டிலே ஒருநாள் போகக் கூடாது. ஒருநாள் பண்ணிக்கிற டிரெஸ் ஒருநாள் பண்ணிக்கக் கூடாது. ஒருநாள் போட்டுக்கிற கண்ணாடியை ஒருநாள் போட்டுக்கக் கூடாது ...''

டைரக்டர்கள் பலபேர் வாய்விட்டுச் சிரித்தார்கள். ''நடக் கிற காரியமா?'' என்று சாமிக்கண்ணு கேலி செய்தார்.

ஆனால் மாதவனுக்கு அது ரொம்ப சீரியசான, அசலான அறிவுரையாக மனதில் பதிந்துவிட்டது.

பத்து நாட்களில் அவருடைய பழக்கவழக்கங்கள் மாறி விட்டன. அவருடைய நிறுவனங்களின் ஊழியர்களும் அந்தரங்க உதவியாளர்களும்... ஏன், மனைவியும் பிள்ளைகளும் கூட... அவரிடம் ஏற்பட்டுள்ள மாற்றத்தைப் புரிந்துகொள்ள முடி யாமல் தவித்தார்கள்.

அவர் தினம் ஒருவகையாக டிரெஸ் அணியலானார். அவர் கீழே ஒன்பது கம்பெனி கார்கள் இருந்தன. தினத்துக்கு ஒன்றாக அந்தக் கார்களை உபயோகப்படுத்திக்கொண்டார். அண்ணாநகரில் உள்ள பங்களாவை எந்தத் திசையிலிருந்து வேண்டுமானாலும் அடைந்தார். கண்ணாடி அணிந்தார். அணி யாமல் இருந்தார். முன் சீட்டில் அமர்ந்தார். பின்சீட்டில் அமர்ந்தார். பொடி போட்டார். சிகரெட், சுருட்டு, பீடி, பைப் என்று மாற்றிக் கொண்டிருந்தார். அவைகளிலும் கூட பிராண்டு களை மாற்றினார்.

ஒருநாள் போகிற கிளப்புக்கு மறுநாள் போகிறதில்லை. ஒருநாள் செல்லுகிற நண்பர் வீட்டுக்கு மூன்று மாசம் செல்வ தில்லை. ஆங்கிலத்தில் பேசினார். ஹிந்தியில் பேசினார். 'ரசகுல்லா என்றால் உயிர்' என்றார். 'ரசகுல்லாவைக் கட்டோடு வெறுக்கிறேன்' என்றார். மொட்டையடித்துக் கொண்டார்.

விக் வைத்துக் கொண்டார். மீசையை நீட்டினார், குறைத்தார், சிரைத்தார். இவ்வளவு மாற்றங்களுக்கிடையே ஓர் ஒற்றுமை ஏற்பட்டு விடாதபடிக்கு பர்ம்யுடேஷன் காம்பினேஷன் போட்டு வைத்துக் கொண்டார்.

அண்ணாநகருக்கும் அம்பத்தூருக்கும் நடுவேயிருந்த காக்காத்தோப்பில் அந்த ரவுடிக் கும்பல் கூடியிருந்தது. தலைவனாக இருந்தவன் சொன்னான். ''இதுதான் அந்த ஆள் டெய்லி வர்ற வழி. இந்தத் தோப்புதான் ஷார்ட் கட் அவனுக்கு. கரெக்டாய் ஆறு இருபதுக்கு வருவான். கன்னடக்காரன் மாதிரி குல்லா, கோட்டு, தார்பாய்ச்சு வேட்டி, பிளெயின் கண்ணாடி. மீசை கிடையாது. சுருட்டுப் பிடிப்பான். சரிதானா? ஏகப்பட்ட பேர் இருந்தால் கலாட்டாவாகி, காரியம் கெட்டுடும். நான் போறேன். இரண்டு பேர் போதும். ஒருத்தன் கையைக் காட்டிக் காரை நிறுத்த வேண்டியது. மற்றவன் அந்த ஆள் இறங்கி வந்ததும் ஒரே சதக். புரியுதா?''

இரண்டு பேரும் தலையாட்டினார்கள். ஒருத்தன் கேட்டான். ''ஏண்ணே, டிரைவர் இருப்பானே?''

''பார்த்தியா, அதைச் சொல்ல மறந்திட்டேன். அந்த ஆள் மகா கஞ்சன். டிரைவரே வைக்கவில்லை. தானே தான் ஓட்டிட்டு வருவான். புரியுதா?''

''சரிண்ணே.''

அம்பத்தூர் வழியாக அண்ணா நகருக்குத் திரும்பிக் கொண்டிருந்தது மாதவனின் கார்.

''ஆவடி ரோடு வழியாய்ப் போக வேண்டாம். காக்காத் தோப்பு இருக்குதில்லே, அது வழியாப் போ'' என்று டிரை



வருக்குக் கட்டளையிட்டு விட்டுப் பின்சீட்டில் சுகமாகச் சாய்ந்து கொண்டார் மாதவன். முகம் தெரியாத பகைவர்களைப் பைத்தியம் பிடிக்கச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதில் அவருக்கு மகா பெருமையாயிருந்தது.

இன்றைய காம்பினேஷன்: க்ரீம் கலர் பியட் கார்; கன்னடக் குல்லா, தார்பாய்ச்சு வேட்டி, சுருட்டு, மீசை கிடையாது...

இருந்தாலும், திட்டத்தில் என்னவோ ஓர் பிசகு இருப்பதாகத் தோன்றியது. எதிரிகளுக்கு அடையாளம் காட்டக் கூடியதாக இன்னும் ஏதோ ஒன்று... என்ன அது? யோசித்தார். ஆ! ஞாபகம் வந்துவிட்டது.

டிரைவர்!

தினம் தினம் தன்னை மாற்றிக் கொண்டு என்ன புண்ணியம்? டிரைவர் ஒருத்தன் வருகிறானே ஒரே மாதிரியாய்?

''நிறுத்தப்பா'' என்றார்.

நிறுத்தினான்.

''நீ இறங்கி பஸ்ஸிலே வீட்டுக்குப் போ. நான் டிரைவ் பண்ணி ரொம்ப நாளாச்சு...''

அவனை அனுப்பி விட்டுத் தானே காரை ஓட்டலானார் மாதவன்.

அவருடைய க்ரீம் கலர் பியட் கார் காக்காத் தோப்புக்குள் நுழைந்து கொண்டிருந்த போது, அந்த ஆட்கள் குறி வைத்திருந்த அசல் ஆள், மவுண்ட் ரோடில் ஒரு டென்டிஸ்டின் கன்சல்ட்டிங் அறையில் பல் வலியுடன் காத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

★

# 10. படுகை

**நோ**ய்ப் படுக்கையிலிருந்து எழுந்து வரும் பெண்ணைப் போல மப்பும் மந்தாரமுமான வானத்தில் சோகை நிலவு தள்ளாடிக் கொண்டிருந்தது. வறவறவென்று உலர்ந்திருந்த ஆற்று மணலை ஒரு கையிலிருந்து இன்னொரு கைக்குக் கொட்டிய



வாறு உட்கார்ந்திருந்தான் மூர்த்தி. ஓரமாக வளர்ந்திருந்த கோரையும் நாணலும் காற்றின் சிலுசிலுப்பைத் தாங்க முடியாததுபோல் சரசரத்தன. வெறும் பனியன், துண்டோடு வந்திராமல் சட்டையும் மாட்டிக்கொண்டு வந்திருக்கலாம் என்று மூர்த்தி எண்ணினானே தவிர எழுந்து போகத் தோன்றவில்லை. அவன் காலுக்கு வெகு அருகாக இரண்டு தவளைகள் தத்தித் தத்தி வந்து, தலையை உயர்த்தி முட்டைக் கண்ணால் அவனை உற்று நோக்கிவிட்டு வேறு பக்கம் சென்று விட்டன. அவை மறைந்த திசையில் ஒரு சிறு கூழாங்கல்லை எறிந்தான் மூர்த்தி.

மனம் அமைதியிழக்க ஒரு காரணமும் கிடையாது. எல்லா வகையிலும் சந்தோஷப்பட வேண்டியவன் அவன். மணி பன்னிரண்டு இருக்குமா? மேலே தாண்டியிருக்குமா? பசிக்கிறது லேசாய்.

சரக் சரக்கென்ற ஓசை கேட்டது. மூர்த்தி திடுக்கிட்டுப் பார்த்தான். யாரையும் காணோம்.

நாணலின் அசைவோ? இல்லை. மணலின் மேல் காலடி படுகிற சப்தம். எழுந்துகொள்ள எண்ணினான். மனம் வரவில்லை.

இத்தனை நேரமும் அவன் பக்கத்திலேயே அமர்ந்திருந்தவள் போல் அந்தப் பெண் இயல்பாகவும் சுவாதீனமாகவும் அவன் முன் நின்றாள். மண்ணுக்குக் கீழேயிருந்து முளைத்தாளா என்ன? அல்ல. இந்த நாணல் புதருக்குப் பின்புறமிருந்து வந்தாள் போல் இருக்கிறது.

"என்ன, இந்த நேரத்தில் இங்கே உட்கார்ந்திருக்கிறாய்? விடிந்தால் கல்யாணமாயிற்றே?" என்று கூச்சம் இல்லாமல் கேட்டாள். குரல் அவளுடைய அழகான கண்டத்திலிருந்து வந்தால் போலும் இல்லை; வெளியே எங்கிருந்தோ வந்த மாதிரியும் இல்லை.

மூர்த்திக்கு ஏனோ எவ்வித அச்சமும் சங்கடமும் தோன்றவில்லை. பசுமையான சோளக் கொண்டை போலச் செழிப்பும் கொழிப்புமான அவளுடைய அங்கங்கள் அவன் விழிகளை விழுங்கின. ''விடிந்தால்தானே கல்யாணம்? இப் போது நடுராத்திரிதான். அது இருக்கட்டும். எனக்குக் கல்யாணம் என்று உனக்கு எப்படித் தெரியும்?'' என்றான்.

''எனக்குத் தெரியாமல் இந்தக் கிராமத்தில் எதுவும் நடக் காது. ஆமாம், இங்கே உட்கார்ந்திருக்க உனக்குப் பயமாய் இல்லை?'' என்றாள் அவள்.

''ஏன்? வெறும் மணலில் முழுகியா போவோம்? மூச்சா திணறும்?''

''இந்த ஆறு பைத்தியம் பிடித்தது. ஒரு நிமிஷம் உலர்ந்து கட்டாந்தரையாக இருக்கும். அடுத்த நிமிஷம் ஒரே வெள்ளப் பிரவாகமாகி விடும்.''

''இப்போதைக்குப் பயம் இல்லை.''

''இல்லை.'' சரேலென அவள் அவன் மடியில் தலை வைத்து மல்லாந்து படுத்து விட்டாள். அவளது குழல் கற்றை யின் வழவழப்பு அவன் தொடையைக் கிசுகிசுக்கப் பண்ணிற்று. மூர்த்தி அவள் தலையைப் பிடித்துத் தள்ளிவிட்டிருக்கலாம். ஆனால் செய்யவில்லை.

''நீ எதற்காக இங்கே வந்தாய்?'' என்று கேட்டான்.

''உனக்கு ஒரு கதை சொல்ல. புது மாப்பிள்ளைகளுக் கெல்லாம் கதை சொல்லுவது என் வழக்கம்'' என்று கூறி விட்டு அவள் சிரித்தாள்.

''சொல்லு'' என்பதைத் தவிர வேறு வார்த்தை மூர்த்தி யின் நாவில் பிறக்கவில்லை.



# அவள் சொன்னது

இதோ இருக்கிறதே படித்துறை, அதிலே ஏறி, சிவன் கோவிலைத் தாண்டிப் போனால், ஒற்றைத் தெரு வருகிறது. அதன் கடைசியில் கர்ணம் சிவராமனின் வீடு. ஓடு கள் சரிந்து தலையிலே விழுகிற மாதிரி இருக்கும். துருத்திக் கொண்டிருக்கிற மூங்கில் நெற்றியில் குத்தும். திண்ணைக்குச் சாணம் போட்டு மெழுகியிருக்கும். சிவராமன் பாவம் ஏழை. கர்ணமானாலும் சாமர்த்தியமாயிருந்தால் பிழைக்கலாம். ஆனால் சிவராமன் அப்பாவி. லஞ்சம் கிஞ்சம் வாங்கிப் பிழைக்கத் தெரியாது.

கோமளம், கோமளம் என்று ஒரே பெண் அவருக்கு. சந்தனக் கட்டையில் செதுக்கின பொம்மை மாதிரி மூக்கும் முழியுமாய்க் கொள்ளை அழகு. வயதுக்கு மீறின வளர்ச்சி. வளர்ச்சி நின்றபிறகும் வயது நிற்கவில்லை. இப்படி அப்படி என்று இருபது வரை ஆகிவிட்டது. கோமளத்தைப் பெற்ற வள் எப்போதோ போய்விட்டாள். ஆகவே அவளைக் காலா காலத்தில் ஒருவனுக்குக் கட்டி வைக்க வேண்டுமே என்று புலம்ப ஆள் இல்லை. சிவராமன் தானாகவே நாலைந்து இடங்களுக்கு அலைந்து வரன் தேடினார்.

அழகிருந்தென்ன, அறிவிருந்தென்ன? பணம் என்று நயா பைசா கூடக் கிடையாது. சிவராமன் திண்டாடு திண்டாடு என்று திண்டாடினார். வந்த மாப்பிள்ளைகள் எல்லாம் பெண் நன்றாய்ப் பாடுகிறாள், பார்வைக்கு நன்றாயிருக்கிறாள், வேலை யெல்லாம் நன்றாய்ச் செய்யத் தெரிந்திருக்கலாம், ஆனால் பாருங்கள்... என்று இழுத்து விட்டுப் போய்விட்டார்கள்.

எப்படிப்பட்ட மூட்டமானாலும் ஒருநாள் விலகித் தானே ஆக வேண்டும்? எப்படிப்பட்ட இரவானாலும் கடைசியில்

விடிந்துதானே ஆகவேண்டும்? அந்த மாதிரி கோமளத்துக்கும்
ஒருநாள் விடிந்துவிட்டது. பட்டணத்திலிருந்து வந்து பார்த்து
விட்டுப் போனவர்கள், பெண்ணைப் பிடித்திருக்கிறது, எப்
போது கல்யாணம் வைத்துக் கொள்ளலாம் என்று கடிதம் எழுதி
விட்டார்கள்.

சிவராமன் இந்த மாதிரி நிலைமை வரும் என்று எதிர்
பார்க்கவேயில்லை. பெண் வேண்டாம், வேண்டாம் என்று
கேட்டுக் கேட்டு, கல்யாணத்துக்கு எப்படி, என்ன ஏற்பாடு
செய்வது என்பதே அவருக்கு மறந்து விட்டது. ஆயினும்
தாயில்லாப் பெண் என்று இரக்கப்பட்டு அக்கம்பக்கத்தில்
எல்லோரும் இழுத்துப் போட்டுக் கொண்டு ஒத்தாசை செய்
தார்கள். ஆகக்கூடி, ஓர் ஏழைப் பெண்ணின் கல்யாணமாக
இல்லாமல், கௌரவமான வைபவமாகவே அமைந்திருந்தது.

கல்யாணத்துக்கு முதல் நாள் ராத்திரி சிவன் கோவிலில்
வைத்து மாப்பிள்ளை அழைப்பு நன்றாகவே நடந்தது. எங்கா
வது ஒரு மூலையில் ஒளிந்து கொண்டாவது வரப் போகிற
வனின் முகத்தை நன்றாய்ப் பார்த்துவிட வேண்டும் என்று
கோமளத்துக்குக் கொள்ளை ஆசை. ஆனால் கல்யாணப்
பெண்ணை யார் அப்படி தனியாக விடுகிறார்கள்? அது நடை
பெறவில்லை. அவள் தோழிகள் சும்மா இருக்கக் கூடாதா?
''அடியே கோமளம், காத்திருந்தாலும் காத்திருந்தாய், ராஜா
வாட்டம் புருஷனல்லவா கிடைத்திருக்கிறான்?'' என்று பாதி
கேலியாகவும் பாதி பொறாமையாகவும் சொன்னார்கள்.

ஆயுள் பூராவும்தான் அவனைப் பார்த்துக் கொண்
டிருக்கப் போகிறோமே என்று தோன்றியதா அந்த அசட்டுப்
பெண்ணுக்கு? ராத்திரியே பார்த்துவிட வேண்டுமென்று
ஆசைப்பட்டாள். பிள்ளை வீட்டார், எதிரிலிருந்த ஹெட்
மாஸ்டரின் இல்லத்தில்தான் இறங்கியிருந்தார்கள். இரவு



பதினொரு மணி சுமாருக்கு, எல்லாச் சந்தடியும் அடங்கிய
பிறகு கோமளம் அங்கே புறப்பட்டாள் யாருக்கும் தெரியாமல்.

ஆசைப்பட்டதும் தப்பில்லை, போனதும் தவறில்லை.
கணவனாகப் போகிறவனைக் கண்டதிலும் ஏமாற்றம் இல்லை.
வாசல் பக்கமிருந்த அறையில் இரண்டு மூன்று நண்பர்கள்
உபசாரம் செய்ய, நடுவில் நின்றிருந்தவன்தான் மாப்பிள்ளை
என்பதை அவள் ஊகித்துக் கொண்டாள். ஜன்னல் வழியே
பார்த்த போது, 'காஸ்' விளக்கு வெளிச்சத்தில் அவனுடைய
சிவந்த மேனியும், வாட்ட சாட்டமான உடலமைப்பும் ஏழைக்
கோமளத்தின் உள்ளத்தில், இத்தனை ஆண்டுகளாக அனு
பவித்திராத ஆனந்தத்தை ஏற்படுத்தின.

அத்துடன் திருப்தியடைந்து அவள் திரும்பியிருந்தால்
ஒரு கோளாறும் நேர்ந்திராது. ஒரு வினாடி அதிகப்படியாகத்
தயங்கியதில் அவள் வாழ்க்கையே புரண்டுவிட்டது.

''டேய், செலக்ஷன் ரொம்ப அருமை! என்னைத் தப்பாய்
நினைத்துக் கொள்ளாதே! கிளி மாதிரி இருக்கிறாள் பெண்''
என்றான் ஒரு சிநேகிதன்.

இன்னொருவன், ''ஆமாம், நான் கூடக் கவனித்தேன்.
பிரமாதமான அழகி!'' என்றான்.

கோமளம் மாப்பிள்ளையின் முகத்தைக் கவனித்தாள்,
அதில் எத்தனை பூரிப்பு ஏற்படுகிறது என்பதை அறிய.

என்ன ஏமாற்றம்! அவன் உதட்டைப் பிதுக்கி முகத்தைச்
சுளித்து, ''மண்ணாங்கட்டி!'' என்றான்.

''அடப் பாவி! என்னடா குறைவு?'' என்றான் மூன்றாமவன்.

''அழகைக் கொண்டு போய் உடைப்பிலே போடு!
காலணாக் காசு கிடையாது! அப்பாவும் அம்மாவும் என்

உயிரை எடுத்து விட்டார்கள், குடும்பப் பாங்கு இருக்கிறது, அழகு, அது இது என்று. அவர்கள் நச்சரிப்புத் தாங்காமல் ஒப்புக் கொண்டு தொலைத்தேன்!'' என்றான் மாப்பிள்ளை!

பூமி சுழன்றது கோமளத்துக்கு. அவளுடைய பேதை இதயம் வெடித்து விடும்போல் வேதனையால் துடித்து அலறியது.

மாப்பிள்ளை பல்லைக் கடித்தான். ''இருக்கட்டும், இருக்கட்டும்! இந்த அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பாடம் கற்பிக்கிறேனா இல்லையா பார்! முகூர்த்தத்தின் போது இது சொத்தை அது சொள்ளை என்று ஐட்டம் ஐட்டமாக அந்தக் கர்ணத்தின் மானத்தை வாங்கி விடுகிறேன்!''

''ஆகாகா! கல்யாணமான பிறகு பெண்டாட்டி காலடியிலேயே விழுந்து கிடப்பாய்!''

''நானா! அதுதான் இல்லை. ஆகட்டும் கல்யாணம், என்ன செய்கிறேன் பார்! பிச்சைக்காரக் கும்பல்! எனக்குத் தலையெழுத்தா என்ன இதனிடம் ஆயுளுக்கும் அடிமைப் பட்டுக் கிடக்க!'' என்று உறுமினான்.

சுமையாகிவிட்ட கால்களை இழுத்துக் கொண்டு தெருவில் நடந்தாள் கோமளம். அவள் பெருமிதம், குதூகலம், திருப்தி, ஆசை... அத்தனையும் யானை காலடியில் அகப்பட்ட பட்டாணி முத்துக்களாக மாவாகிக் கூழாகி மடிந்தன.

தன் வீட்டுக்கு... கல்யாண வீட்டுக்கு... அவள் திரும்பவேயில்லை. நிலவோடு – இருளோடு – குளிரோடு – தனிமையோடு – அவள் அலைந்து திரிந்து இந்த ஆற்றங்கரைக்கு வந்தாள். மணலில் உட்கார்ந்து கொண்டு, முழங்காலில் தலையைப் புதைத்துக் கொண்டு, விம்மி விசும்பினாள்; அழுது அரற்றினாள்; கேவினாள்; கூவினாள்.



பெற்ற அம்மாவா இருக்கிறாள் அவளைத் தேற்ற? ஒரு ஜந்து வரவில்லை அவளுக்கு ஆறுதல் சொல்ல. எண்ண எண்ண அவளுக்குப் பயமாயிருந்தது; திகிலாயிற்று. 'கல்யாணமாகட்டும்; பார்' என்று கறுவினானே, என்ன செய்வான்? தள்ளி வைத்துவிட்டு வேறு கல்யாணம் பண்ணிக் கொள்வானோ? அல்லது மகா பணத்தாசை பிடித்தவனாயிருப்பதால், எந்த ஈனத்தனத்துக்கும் தயாராக, கோமளத்தின் அழகை வைத்தே வியாபாரம் செய்வானோ? கல்யாணத்தின்போது தன் அப்பாவி அப்பா மானம் போய், கௌரவம் போய், அவமானப்பட்டு நிற்கப் போகிறார் என்ற எண்ணம் வேறு அவளை வதைத்தெடுத்தது.

என்ன ஆனாலும் சரி, அவனிடம் தன் வாழ்க்கையை ஒப்படைக்கக் கூடாது என்ற தீர்மானம் ஏற்பட்டது. ஆனால் இனி என்ன செய்ய முடியும்? அப்பாவிடம் சொல்ல முடியாது கல்யாணத்தை நிறுத்து என்று. அப்படியே இந்தக் கல்யாணம் நின்றால், அடுத்த மாதம் அல்லது அடுத்த வருஷம் வேறு ஒருத்தன். இவன் எண்ணமாவது தெரிந்து விட்டது. அடுத்தவன் வெளிக்கு வேஷம் போடுகிறவனாயிருந்தால்? 'ஆண் வர்க்கத்தையே நம்ப முடியாது. கொலைகாரப் பாவிகள்' என்று கோமளம் நினைத்துக் கொண்டாள்.

## மேலே

இந்த இடத்தில் அவள் கதையை நிறுத்தி, ''என்ன, கேட்டுக் கொண்டிருக்கிறாயா? தூங்கிவிட்டாயா?'' என்றாள்.

''சே,சே! சுவாரசியமாய்க் கேட்டுக் கொண்டிருக்கிறேன். மேலே சொல்லு'' என்று கூறிவிட்டு அவள் முகத்தை ஆர்வத்துடன் நோக்கினான் மூர்த்தி. நேருக்கு நேராக எத்தனையோ பெண் முகங்களை அவன் கண்டதுண்டு. இந்தக் கோணத்

தில், இந்த நிலையில் பார்த்ததில்லை. மேலிருந்து கீழாக, காலிலிருந்து தலைப்புறமாகப் பார்த்தபோது அவள் வதனம் பன்மடங்கு கவர்ச்சியாய்த் தெரிந்தது. மோவாயின் கூர்மை; கீழுதட்டின் ஈரப் பளபளப்பு; நாசியின் எடுப்பு; கண் இமைகளின் ரோஜா மென்மை; நெற்றியின் அகலம்; கூந்தலின் சுருள்கள்... எல்லாம் தனித் தனியே முன்னுக்கு வந்து 'என்னைப் பார் என்னைப் பார்' என்று முந்திக்கொண்டு கூவின.

''சொல்லு'' என்றான் மீண்டும்.

இனிமேல் சொல்வதற்கும் அதிகம் இல்லை. கோமளம் ரொம்ப நேரம் இங்கே ஆற்று மணலிலேயே உட்கார்ந்திருந்தாள். அப்போது வெள்ளம் வருகிற காலம். விடிவதற்குள்ளேயே இந்த ஆற்றில் இரண்டு கரையும் மோதும்படி பிரவாகம் ஏற்பட்டுவிட்டது. கோமளம் முழுகிப் போன இடத்தில் நல்ல சுழல் இருந்தது. அவள் உடம்பு தண்ணீருக்கு மேலே வரவேயில்லை. பொழுது புலர்ந்த போது பல பேர் வந்து தேடினார்கள்.

தேடியவர்கள் நடுவில் மாப்பிள்ளைப் பையனும் இருந்தான். அவன் கோமளம் செத்துப் போயிருப்பாள் என்று நினைக்கவில்லை. ''அத்தனை அழகான பெண் குணத்தில் எப்படி இருக்குமோ என்று பயந்தேன். சந்தேகப்பட்டது சரியாகி விட்டது. எவனோடாவது ஓடிப் போயிருப்பாள்!'' என்று அபாண்டம் பேசிக்கொண்டிருந்தான்.

## இறுதியில்

''கதை முடிந்து விட்டதல்லவா? எழுந்திரு. தலையை எடு. நான் போக வேண்டும்'' என்றான் மூர்த்தி.



''இரு. புது மாப்பிள்ளை! உன் பெண்டாட்டியைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே? எப்படி அவள்? ரொம்ப அழகியா?''

''ஹூம்! அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்றான் மூர்த்தி.

''அதுதானே நினைத்தேன். பெரிய பண்ணையாரின் முதல் பெண் ஆயிற்றே? இப்போது ஏராளமாய்ச் சீரும், பிற்பாடு எக்கச்சக்கமாய்ச் சொத்தும் வரும்...''

''இருக்கலாம். என்னை விடு.''

''இருக்கலாமென்ன, இருக்கலாம்! பணம் காசு வரும் என்று ஒப்புக் கொள்ளேன். அதற்காகத்தானே ஒரு வருஷம் காத்திருந்தாய்?''

மூர்த்தி திகிலடைந்தான். ''நானா!''

''மாப்பிள்ளை! என்னையே ஏமாற்றப் பார்க்கிறாயே, நடக்குமா? இதே கிராமத்தில், ஒரே வருஷத்துக்குள், உனக்கு வேறொரு பெண்... ஆனால் பணக்காரியாக... கிடைத்து விட்டாள் பார்!''

''நீ... நீ...'' மூர்த்தி திணறினான்.

''பெண் பார்க்க வந்தபோது ஒரே ஒரு தடவை பார்த்தது தானே? கோமளத்தை உனக்கு மறந்து விட்டது இல்லை?'' அவள் சிரிப்பு இப்போது வளர்ந்து பெரிதாகி, ஆற்றின் மணலையெல்லாம் கிளப்பிவிடும் சூறாவளியாக விசுவரூபம் எடுத்தது.

''நீ நகர்! நகர்ந்துகொள்!'' என்று மூர்த்தி கத்தினான்.

''இதோ பார், நான்தான் தப்பினேன். பண்ணையார் பெண் பாவம் சாது. அதை நீ கண்ணில் விரலை விட்டு ஆட்டுவாயே?''

''மாட்டேன், மாட்டேன்!''

''ஏன், பணக்காரி என்றா? அதெல்லாம் சும்மா. அந்தப் பெண் ஒரே கறுப்பு. துளிக் கூட அழகில்லை. கொஞ்ச நாளானால் என்ன சொல்வாய்? 'பணமிருந்தென்ன, காசிருந்தென்ன? கரிப்பிசாசு! கோர சொரூபம்!' என்று அவளைப் படாதபாடு படுத்திவிட்டு, அவளுடைய பணத்தை வைத்துக் கொண்டே வேறே இடத்தில் அழகைத் தேடி ஓடுவாய்! நீ அப்படிச் செய்யும்படி நான் விடலாமா?''

''என்னை என்ன செய்யப் போகிறாய்?'' என்று மூர்த்தி அலறினான்.

''பயப்படாதே. உன் மடியில் தலை வைத்துக் கொண்டே படுத்திருப்பேன். என்ன ஆனந்தமாயிருக்கும் தெரியுமா? தண்ணீருக்கடியில் மரணம் ரொம்ப ஆனந்தம் மாப்பிள்ளை. மூச்சுத் திணறுவது அலாதியான அனுபவம். நீ ஆயிரம் ஜன்மம் எடுத்தாலும் கிடைக்காது. பாரேன், பாரேன்!''

வெறி பிடித்தவனாய் மூர்த்தி, அந்தத் தலையை அப்புறப் படுத்தப் பார்த்தான்; சக்தியெல்லாம் திரட்டி, தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றான். அது மானிடத் தலையாயில்லை; மனிதன் தாங்கக் கூடிய சுமையாயும் இல்லை. அவன் தொடைகளை மணலில் புதைத்துவிடுவது போலக் கனம் அழுத்தியது.

மூர்த்தி சோர்ந்து போனான்.

காலுக்கடியில் ஈரத்தின் ஸ்பரிசம் தெரிந்தது; கொஞ்சம் கொஞ்சமாய்த் தன் ஆடைகள் நனைவதை அவன் உணர்ந்தான்.

இடுப்பு நனைந்தது, மார்பு நனைந்தது. பின்னர் நெஞ்சு, மோவாய், நாசி...

அவள் எழுந்திருக்கவேயில்லை; அவள் தலை அகலவேயில்லை.

# 11. மோகனா எங்கே?

மோகனா எங்கே போனாள்?

பதைபதைப்புடன் மீனாட்சி தேடிக் கொண்டிருந்தாள். யாருக்கும் தெரியாமல்....

கறிகாய்கள் நறுக்கி முடிந்ததும், சமையலறைக்கு வெளியிலிருந்த தாழ்வாரத்தில் ஒற்றை மின்விளக்கும் அணைக்கப்

பட்டு விட்டது. வாசல்புறத்துப் பெட்ரோமாக்ஸ் விளக்குகள் தங்கள் சாரீரத்தையும் காந்தியையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து முடங்கிவிட்டன. அங்கங்கே பழைய புடவைகளோ ஜமுக்காளங்களோ விரிக்கப்பட்டு, குழந்தைகள் அலங்கோல மாகத் தூங்கச் செய்யப்பட்டிருந்தன.

பிள்ளை வீட்டார் தங்கியிருந்த எதிர்க் கட்டிடத்தில், மாப்பிள்ளையின் தோழர்கள் மொட்டை மாடியில் சீட்டாடிக் கொண்டு கொட்டமடித்த பின்னர் சற்று முன்னால்தான் ஓய்ந் தார்கள்.

விடிகாலை ஐந்து மணிக்கு முகூர்த்தம். இன்னும் இரண்டு மணி நேரம்தான் இருக்கிறது.

இந்தப் பெண் எங்கே படுத்துக் கொண்டாள்....? பன்னிரண்டு மணி வரையில் தூங்கப் போகாமல், தலையை வலிக்கிறது என்று கிணற்றடியில் உட்கார்ந்திருந்தாளே? ஏதா வது மாத்திரை கீத்திரையாவது வாங்கிச் சாப்பிட்டாளோ இல் லையோ?

மோகனாவின் சினேகிதிகள் மாடிக்குச் செல்லும் படி களின் அருகே, கம்பி போட்ட முற்றத்தின் பக்கமாகப் படுத் திருந்தது நினைவு வந்தது. அங்கேதான் படுத்திருப்பாள். அதோ... ஒருக்களித்துப் படுத்திருக்கிறாளே, சாட்டைப் பின்னல் இடுப்பை வளைத்திருக்க.

''ஏண்டி மோகனா, தலைவலி தேவலையா?'' என்று அவளைப் புரட்டினாள் மீனாட்சி.

''ஸ்... என்னடி மோகனா, சும்மா தொணதொணத்துக் கொண்டு...'' என்று தூக்கத்தில் சிணுங்கியவாறு அவள் மறு புறம் புரண்ட பிறகே, மோகனா அல்ல அவள் என்று தெரிந் தது. வத்சலா என்ற தோழி அவள். அவளுக்கருகே கோணலும் மாணலுமாய் மற்றப் பெண்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.



மோகனா எங்கே போனாள்?

வீடு மொத்தமும் அடித்துப் போட்ட மாதிரி நித்திரை யில் மூழ்கியிருந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கவலையைப் விட்டுவிட்டு, மறப்பு மருந்தான நித்திரையை உண்ணுகிறார் கள். மீனாட்சிதான் விழித்துக் கொண்டு அலைகிறாள், புத்தம் புதியதான, யாரிடமும் சொல்ல முடியாத கவலையுடன்.

போர்த்திருந்த ஜமுக்காளங்களைப் பிரித்தும், பாய்களைத் தடவிப் பார்த்தும், நிழலாடும் இடங்களை ஆராய்ந்தும், கல்யாண வீடெங்கும் ஓடினாள் மீனாட்சி. வாய்விட்டுக் கூப்பிட முடி யாது. தொண்டை வரையில் வந்து வந்து திரும்பியது? ''மோகனா! மோகனா!'' என்ற கூவல். ஒன்றும் இல்லாததைப் பெரிதுபடுத் தினால் அவளுக்குத்தான் அவமானம். ஆனால், தெய்வமே, இது ஒன்றுமில்லாததுதானா?

ஒரு சொடுக்கு சப்தம் அவளை அழைத்தது.

அவளுடைய மாமியாரான சானுக்கிழவிதான் அவளைக் கூப்பிட்டவள். கிராமத்தோடு கிடந்தவளை வேலைமெனக் கெட்டுக் கூப்பிட்டுக் கொண்டு வந்துவிட்டார் மீனாட்சியின் கணவர் கோதண்டம். கிழவிக்கு, ஒரு கை விளங்காது... வாதம். இடது காலும் ஒரு மாதிரி இழுத்தாற்போல்தான்.

இவ்வளவும் போக, முன்பொரு முறை வந்த காய்ச்ச லில் நாக்கும் பிசகிவிட்டது. கோணலான வாயில் சதா ஓர் அசட்டுச்சிரிப்பைத்தான் காணலாம். ஒரு சமயம் பார்த்தால் பயங் கரமாக இருக்கும்; இன்னொரு சமயம், குழந்தைத்தனமாக இருக்கும். 'அரைப் பைத்தியம்' என்றுதான் கிராமத்தில் பட்டம்.

''அவர் பாட்டுக்குக் கிராமத்திலேயே இருக்கட்டும். கல்யாணத்துக்கு வந்து என்ன செய்யப் போகிறார்?'' - என்று மீனாட்சி தடுத்தும் கேளாமல் கிழவியை அழைத்து வந்து விட்டார் கோதண்டம்.

மீனாட்சி நெருங்கி வந்ததும், ''என்ன தேடுகிறாய்?'' என்று இடது கையை ஆட்டி சாடையில் கேட்டாள் மாமியார்.

''மோகனாவைத்தான்... நீங்கள் பார்த்தீர்களா...?''

''உன் பெண்ணா?'' என்று சாடைகாட்டி, கோரமாக இளித்தது கிழம்.

தன் சொந்தப் பேத்தியை வேற்று மனிதர் மாதிரி அவள் குறிப்பிட்டது மீனாட்சிக்குப் பிடிக்கவில்லை. ''நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று போய்விட்டாள்.

வேறு எதுவும் தெரியவில்லை. சுவாமி சன்னதிக்குச் சென்று விளக்கை ஏற்றி வைத்து விழுந்து விழுந்து நமஸ்கரித்தாள். ''தாயே, கோமளவல்லி, நீதான் காப்பாற்றணும். நீ இருக்கிற இடத்திலே கல்யாணம் நடத்துகிறோம் என்று வேண்டிக் கொண்டு, முன்பின் தெரியாத இந்த ஊருக்கு வந்திருக்கிறோம். எந்த மாதிரி சோதனையும் ஏற்படுத்தாதே, தாயே'' என்று வேண்டிக் கொண்டாள்.

பிறகு மீண்டுமொரு முறை வீட்டின் பின்பக்கத்துக்குச் சென்று பார்த்தாள். அது சத்திரம் போன்ற வீடு. பின்புறம் தென்னந்தோப்பு இருந்தது. ஒரு பெரிய கிணறு. அரை நிலாவின் வெளிச்சத்தில் தண்ணீரின் பரப்பு மினுமினுவென்று தெரிந்தது. கண்ணை உறுத்துக் கொண்டு படபடக்கும் இதயத்தைக் கையால் அமுக்கிக் கொண்டு நோக்கினாள்... ஏதாவது மிதக்கிறதா என்று. ஒன்றையும் காணோம். ஒன்றையும் காணோம் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோமோ என்று மீண்டுமொரு முறை ஆராய்ந்தாள். எதுவும் தெரியவில்லை.

கிணற்றுக்குப் பக்கத்திலே இருந்த துவைக்கும் கல்லின் மீது மீண்டும் உட்கார்ந்து கொண்டாள். நெற்றியில் கையை



வைத்து அமுத்திக் கொண்டு 'பதறாதே, பதறாதே' என்று தன் மனத்துக்குத் தானே சொல்லிக் கொண்டாள். 'இப்போது என்ன ஆகிவிட்டது? ஏன் இப்படிக் குழம்புகிறாய்?' என்று தைரியப்படுத்திக் கொண்டு, அமைதியாகச் சிந்திப்பது என்று முடிவு செய்து கொண்டாள்.

மோகனா வீட்டுக்கு அடங்கிய பெண். பிளஸ் டு படித்து முடித்தாள் போன வருடம். பெண்கள் பள்ளிக்கூடம். அவள் பள்ளியிலிருந்து திரும்புகிறபோது பின்னால் எந்த ரௌடிக் கூட்டமும் தொடர்ந்து வந்து பார்த்ததில்லை. பணக்கார சினேகிதிகள் பலர் இருந்தும், அனாவசியமான நாகரிக மோகங்கள் தலைக்கேறினவள் அல்ல. அப்பா அம்மா பார்த்து அழைத்துக் கொண்டு போனாலொழிய எந்தச் சினிமாவுக்கும் தனியாகச் செல்ல ஆசைப்பட்டவளல்ல.

இந்த வரன் நிச்சயமானதும் கோதண்டம், ''மோகனாவின் மனசைத் தனிமையில் நீ தெரிந்து கொள்'' என்று சொன்னார். மீனாட்சி கேட்டாள்: ''பிள்ளையை உனக்குப் பிடித்திருக்கிறதாடி?'' என்று.

''போம்மா'' என்று முகம் சிவக்க அவள் தந்த பதிலில் பரம்பரை பரம்பரையாக வந்த பண்பாட்டின் முத்திரையைத் தவிர வேறு எதுவும் காணவில்லை தாயார்.

அப்படிப்பட்டவள் குடும்பத்துக்குத் தீராப் பழியாக, எந்த அவமானமான காரியத்தையும் செய்துவிட்டுப் போயிருக்க முடியாதே?

பின்னே?

திரும்பத் திரும்பக் கேள்வியிலேயே வந்து முடிந்தது மீனாட்சியின் ஆராய்ச்சி.

மீண்டும் எழுந்து கொண்டாள் மீனாட்சி. கிழக்கு வெளுக்கிற மாதிரி வானத்தின் ஒரு பகுதி தெரிந்த உடனே அவள்

உடம்பு நடுங்க ஆரம்பித்து விட்டது. ஐயையோ! முகூர்த்தத்துக்கு ஒரு மணி நேரம்தான் இருக்கும் போல் இருக்கிறதே!

கணவரை எழுப்பிச் சொல்லிவிட வேண்டும் என்ற ஆதங்கம் அவளைத் தூண்டியது. அவர் ஒரு பயந்த சுபாவக்காரர். போஸ்டல் ஆடிட் இலாகாவில் எழுநூறு ரூபாய் சம்பாதிக்கும் உத்தியோகஸ்தர்தான் என்றாலும், வீட்டுக் காரியங்கள் எதிலும் தலையிட்டுக் கொண்டது கிடையாது. ஏதாவது சிரமத்தை அவர் தலையில் போட்டால், ஊரைக் கூட்டி அமர்க்களப்படுத்தி விடுவார். மனம் குழம்பிக் கலவரப்படுவார். அதற்காகவேதான் இத்தனை நேரம் பொறுத்துப் பார்த்தாள். இனி முடியாது.

மாடியில் அவர் படுத்திருப்பது ஞாபகம் வந்தது. ஓசை எழுப்பாதபடி ஓடினாள் அங்கே. உறவினர்களும் தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் உறங்கிக் கொண்டிருந்த அந்த இடத்தில், மிக எச்சரிக்கையாகக் கணவரைக் கண்டு பிடித்து, "உங்களைத்தானே?'' என்று எழுப்பினாள்.

தலையணை கிடைக்காமல், அங்கவஸ்திரத்தையே சுருட்டித் தலைக்கு வைத்துக் கொண்டிருந்ததால், திறந்த வெளியின் குளிரில் அவர் உடல் மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தது. தூக்கத்தில் கூப்பிட்டால் வழக்கமாய் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருப்பவர் இப்போது முணுமுணுத்தார், "ஸ்... என்ன இது?'' என்று.

"மோகனாவைப் பார்த்தீர்களா எங்காவது?'' என்று மீனாட்சி வினவிய பிறகும் துள்ளிக் கொண்டு எழுந்திருக்கவில்லை. "ஏய், பேசாமல் போய்த் தூங்கு. விடிகாலையில் எழுந்திருக்க வேண்டும்'' என்று முனகினார்.

"மோகனாவை...''



"எங்கேயும் போயிருக்க மாட்டாள். என் அம்மாவா என்ன, கல்யாணத்துக்கு முதல் நாள் ராத்திரி காணாமற் போக?'' என்று சொல்லிவிட்டு, அங்கவஸ்திரத்தைப் பிரித்து முகத்தின் மீது மூடிக்கொண்டு விட்டார். திகிரென்றது மீனாட்சிக்கு, அவர் பேச்சைக் கேட்டதும்.

என் அம்மாவா...!

உடம்பு பூரா குப்பென்று வியர்த்துக் கொட்டியதில் ரவிக்கையும் புடவையும் நனைந்துவிட்ட மாதிரி இருந்தது.

இருபத்தைந்து வருடம் காத்திருந்து, உமி மூட்டம் போட்ட அக்னி மாதிரி உள்ளுக்குள் கனன்று கொண்டே இருந்தது, இன்றைக்குப் பழி வாங்கி விட்டாளா கிழவி? அரைப் பைத்தியம், முக்கால் பைத்தியமாக, முழுப் பைத்தியமாக முற்றி விட்டதா?

எங்கேயோ ஒரு கடியாரம் மறுபடி அடித்தது. ஒன்று, இரண்டு, மூன்று, நாலு.

நாலு!

முகூர்த்தத்துக்கு ஒரே மணி நேரம்.

கொதிக்கும் பாத்திரத்தை வெறும் கையால் பிடித்து விட்ட மாதிரி சுரீலென்று உறைக்கவே, விழுந்தடித்துக் கொண்டு மறுபடியும் ஓடினாள் மாமியார் படுத்திருந்த இடத்துக்கு.

கிழவி இன்னும் தூங்கவில்லை. மருமகளை எதிர்பார்த்தவள் மாதிரி கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு தான் இருந்தாள்.

"இப்படி வாருங்கள்'' என்று கிழவியின் கையைப் பிடித்து முரட்டுத்தனமாக எழுப்பி, ஆளில்லாத இடத்தைத் தேடி விடுவிடுவென்று நடந்தாள் மீனாட்சி.

மாமியாரோ சரியில்லாத காலை இழுத்து இழுத்து வந்த வண்ணமே, 'உன் பெண்ணை இன்னும் காணோமா?' என்று சாடை செய்தாள்.

சமையலறையில் யாரும் இல்லை. ஒரு முட்டை விளக்கு மட்டும் ஏற்றி வைக்கப்பட்டிருந்தது. நீளவாட்டமான அந்த அறையின் மறுகோடிக்கு மீனாட்சி இழுத்துச் சென்றாள் மாமியாரை.

கிழவியின் இரண்டு கையையும் அசுர பலத்துடன் முறுக்கித் தன் ஒரே கையில் பிடித்துக் கொண்டாள். சுற்று முற்றும் பார்த்தாள். அரிவாள்மணை ஒன்று கிடந்தது, அம்மிக் கல்லின் மீது. அதைக் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது.

''பழி பாவத்துக்கு அஞ்சாமல், இந்த அரிவாள்மணை யினால் ஒரே வெட்டாக வெட்டிப் போட்டு விடுவேன். ஜாக்கிரதை! என் பெண்ணை என்ன பண்ணினீர்கள்? சத்தம் போடாமல் ஒப்புக் கொண்டீர்களோ விட்டு விடுவேன். சொல்லுங்கள், என்ன செய்தீர்கள் என் பெண்ணை?'' என்று கிழவியை உலுக்கி எடுக்க வேண்டும்போல் இருந்தது.

''கையை விடடி!'' என்று சொல்கிற மாதிரி ஒரே உதறலில் தன்னை விடுவித்துக் கொண்டாள் மாமியார்க் கிழவி.

''மோகனா எங்கே? உண்மையைச் சொல்லி விடுங்கள்!'' என்று அவள் காலில் விழுந்தாள் மீனாட்சி.

''நான் என்னடி செய்தேன் அவளை? நன்றாயிருக்கிறதே உன் பேச்சு!'' என்று சாடை காட்டினாள் கிழவி மறுபடியும்.

மீனாட்சி பிரமை பிடித்தாற்போல் நின்றாள். ஆனால் அடுத்தாற்போல் கிழவி ஏதேதோ கையையும் காலையும் காட்டிச் சாடை காட்டியது அவளைச் சிந்திக்க வைத்தது. என்ன அது? 'உன் கல்யாணம்' என்கிறாள். 'அன்று... அப்போ...' என்கிறாள். குத்திக் கொள்கிறாள் தன்மீது...



ஆ! காலோடு தலை ஆடியது மீனாட்சிக்கு. 'உன் கல் யாணத்தின்போது, உன் அண்ணன் என்னைக் குத்திக் காட்ட வில்லையா?' என்கிறாள்... அப்படியானால்...

மீனாட்சி புரிந்து கொண்டு விட்டாள். கிழவியின் சாடை அவள் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தி விட்டது. அது மட்டு மல்ல. மாமியாரின் காலைப் பிடித்துக் கொண்டபோது...

அவளுடைய புடவையின் ஓரம் சொட்டச் சொட்ட நனைந்திருப்பதையும், காலில் ஈர மணல் சொரசொரவென்று உறுத்துவதையும் உணர்ந்தாள் மீனாட்சி. கொல்லைப்புறத் தில் சில கெஜ தூரத்தில் காவிரி நீர் சலசலப்பதும் அதே சமயம் காதில் விழுந்தது.

'ஐயையோ! மோகனா! என் கண்ணே!' என்று வாய் விட்டு அலற முடியாமல் நெஞ்சுக்குள் கதறிக் கொண்டே கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு காவிரியை நோக்கி ஓடினாள். வழியில் இருந்த பள்ளிக்கூடத்தின் மணிக் கூண்டு, மணி நாலே கால் ஆவதைக் காட்டியது. அந்த அரை இருட் டான தெருவில், கைகளைத் தூக்கித் தலைக்குமேல் குவித்துக் கொண்டு ''ராம் ராம் ராம்'' என்று வாய்விட்டு ஜபித்துக் கொண்டே புயலென ஓடினாள்.

காவிரியில், எதிர்க் கரையை ஒட்டிய மாதிரி, ஒரு பாதி தண்ணீர்தான் ஓடிக் கொண்டிருந்தது. மணலில் இறங்கி, தண் ணீரை நோக்கி ஓடினாள் மீனாட்சி. ஓராள் உயரத்துக்குச் சற்று அதிகமாகவே ஆழம் இருந்தது.

தண்ணீரின் ஓரத்தில் நின்றவாறு, ''மோகனா! மோகனா!'' என்று தொண்டை கிழியக் கத்தினாள் மீனாட்சி. அடக்கி வைத்

திருந்த அச்சம், துயரம், பதற்றம், ஆத்திரம், கவலை அத்தனையும் பெருங்குரலெடுத்து வெடித்தன.

''மோகனா! மோகனா! மோகனா!'' – தண்ணீர்தான் சலசலத்தது.

''மோகனா! மோகனா!''

எங்கேயோ... இல்லை, பிரமை..... இல்லை, எங்கேயோ... யாரோ பதில் கொடுக்கிற மாதிரி... முனகுகிற மாதிரி இருக்கிறது.

தண்ணீர் சலசலத்தது. ஒரு பசுமாடு தண்ணீர் குடித்து விட்டு, மீனாட்சியை தன் ஈரம் பளபளக்கும் கண்களால் பார்த்த பின்னர் அசை போட்டவாறு நடந்தது.

''மோகனா! மோகனா!''

மறுபடியும் முனகல்.

நிமிர்ந்து பார்த்தாள். எதிர்க் கரையில் மூங்கில் தோப்பு அடர்ந்து இருண்டு அச்சுறுத்தியது. அதன் ஓயாத உரசல்களுக் கிடையேயிருந்து ஒரு முனகல் குரல் பதில் தருகிறது.

ஆழத்தைப் பொருட்படுத்தாமல், தண்ணீரில் இறங்கினாள் மீனாட்சி. முழங்கால், தொடை, இடுப்பு, மார்பு, கழுத்து என்று நீர் ஏறிக்கொண்டே போயிற்று. இதோ கரை அருகில் தெரிகிறது. ஆனால் இன்னும் எத்தனை ஆழமோ?

''இதோ வருகிறேன் மோகனா! பயப்படாதே! நான்தான் உன் அம்மா! இதோ வருகிறேன்...'' என்று கத்தினாள்.

தலைக்குமேல் தண்ணீர் ஓடியது. மூச்சுத் திணறியது. மகளைக் காப்பாற்றாததோடு, தானும் அல்லவா உயிர் துறக்



கிறோம்? என்ன பரிதாபமான சாவு! ஊரை விட்டு ஊர் வந்து, மகளின் கல்யாணத்தன்று, முகூர்த்தத்துக்கு ஒரு மணி நேரம் முன்பு தாயார்க்காரி செத்துப் போய்விட்டாள். கல்யாணம் நின்றுவிட்டது. எல்லோரும் ஊருக்குத் திரும்புகிறார்கள்...

திடீரென்று காலில் எதிர்க்கரையின் படித்துறைப் படிக்கட்டு தென்பட்டது. தண்ணீர் மட்டமும் நெற்றிக்கு இறங்கி விட்டதை உணர்ந்தாள். குபீரென்று ஓர் உற்சாகமும் யானைப் பலமும் வந்த மாதிரி இருந்தது.

''ராமா ராமா ராமா...'' என்று ஜபித்துக்கொண்டே மளமளவென்று படிகளில் ஏறினாள் மீனாட்சி. விடிகாலைக் குளிரில் மேனி வெடவெடத்தது.

படித்துறைக்குப் பக்கத்தில் இருந்த மூங்கில் தோப்பில் இருந்து மோகனாவின் மெலிந்த குரல் கேட்டது. ''அம்மா... அம்மா...''

''இதோ வந்தேனடி கண்ணம்மா'' என்று அந்தப் பக்கமாக ஓடினாள் மீனாட்சி.

தாழ வளர்ந்திருந்த மூங்கில் கிளைகளின் கூர்மையும் இலைகளின் முனைகளும் அவள் முகத்தில் கீறின. குரல் கேட்ட திசையையே இலக்காகக் கொண்டு, மூங்கில் தோப்பில் கண்மண் தெரியாமல் ஓடினாள்.

நிலா இறங்கிக் கொண்டிருந்ததென்றாலும், உருவத்தைக் காணுகின்ற அளவுக்கு வெளிச்சம் இருந்தது.

வெறும் மணலில் அலங்கோலமாகக் கிடந்த மகளைத் தாவி அணைத்தாள் மீனாட்சி. மோகனாவின் உடம்பெல்லாம் ஈரம். கீழே விழுந்து புரண்டெழுந்த சகதி. ''என்னடி மோகனா, என்னடி கண்ணம்மா இதெல்லாம்?'' என்று தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டு கதறினாள்.

தாயின் தோளில் கையை அழுத்தி மெல்ல எழுந்து கொண்டு தள்ளாடினாள் மோகனா. பயத்தினாலும் குளிரினா லும் அவள் தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது.

''போகலாம் அம்மா... போய்விடலாம் அம்மா...'' என்று வாய்விட்டுப் பேசுவதற்குள் மூச்சுத் திணறியது. கண்கள் செருகின.

தோளில் சாத்திக்கொண்டு, தன்னை மீறிய பலத்துடன் நடந்தாள் மீனாட்சி. மூன்று வயது வரை இதே தோளில் சாத்தித் தூக்கிக் கொண்டிருந்த குழந்தையாகவே மோகனா இன்னும் இருந்தாளே தவிர, பதினெட்டு வயதுப் பெண்ணைப் போல் சுமையாகக் கனக்கவில்லை.

மறுபடியும் தண்ணீரின் பக்கம் செல்லாமல், லயன் கரை வழியாகவே நடந்து, புதுப் பாலத்தை அடைந்தாள் மீனாட்சி. வண்டியை அவிழ்த்துப் போட்டுவிட்டுத் தூங்கிக் கொண் டிருந்த ஒரு வண்டிக்காரனை எழுப்பி, கெஞ்சிக் கூத்தாடி, வண்டியைப் பூட்டச் சொன்னாள்.

''என்னடி நேர்ந்தது?'' என்று மகளின் புடவை ஓரங் களைப் பிழிந்தபடி விசாரித்தாள். வண்டி விரைந்தது பாலத் தின் மீது.

''தலைவலிக்கு ஒரு மாத்திரை சாப்பிடலாமென்று போனேன், அம்மா...'' என்று மெல்லப் பேசினாள் மோகனா. ''...பாட்டி தூங்காமல் இருந்தாள். 'காவேரிக்குப் போய்விட்டு வரலாம். கொஞ்சம் துணைக்கு வாடி' என்று சாடை காட்டி னாள். எனக்கு மணி தெரியவில்லை. விடிகாலை வேளை போலிருக்கிறதென்று போனேன். 'குளிக்கலாம் வா' என்று தண்ணீருக்குள் என்னைக் கிடுகிடுவென்று இழுத்துக் கொண்டு



மோகனா எங்கே?

போனாள்... 'விடு பாட்டி, விடு பாட்டி' என்று கத்தினேன். ஐயோ அம்மா! அந்த மாதிரி பலம்... எனக்கு நினைத்தாலே நடுங்குகிறது... என்னை விடவேயில்லை. ஆழத்துக்கு இழுத்துப் போய், என் தலையை அழுத்தி விட்டாள். அம்மா! அம்மா! மூச்சு... மூச்சு... எப்படியோ தப்பித்து...'' மோகனா அழ ஆரம் பித்து விட்டாள்.

''வேண்டாமடி கண்ணே, வேண்டாம்'' என்று மகளின் தலையைத் தன் மடியில் கிடத்திக் கொண்டு தேற்றினாள் மீனாட்சி.

''ஏனம்மா பாட்டி அந்த மாதிரி செய்தாள்? அப்படிப் பட்ட பைத்தியமா அவள்?'' என்றாள் மோகனா.

''பைத்தியம் பாதி, வஞ்சம் பாதி'' என்று சொன்னாள் மீனாட்சி. ''அறுபது வருஷத்துக்கு முன்பு, பாட்டிக்குக் கல் யாணம் நிச்சயம் பண்ணியிருந்தபோது, அந்தப் பையனைப் பிடிக்கவில்லை என்று கல்யாணத்துக்கு முதல் நாள் ஓடி விட்டாளாம். ஆனால் தேடிப் பிடித்து வந்து கல்யாணம் பண்ணி வைத்து விட்டார்களாம்... அப்புறம் ஒழுங்காய்த்தான் குடித் தனம் பண்ணினாள்... உன் அப்பாவும் பிறந்தார்... பாதிப் பைத்தியமும் பாதி சுவாதீனமுமாய் இருந்து வந்தாள்... ஆனால் என் கல்யாணத்தின் போது, என் அண்ணா ஒரு தப்புப் பண்ணிவிட்டான்... நானும்தான்...''

''என்ன பண்ணினீர்கள்?''

''ஒன்றுமில்லை. உன் அப்பா வீட்டுக்காரர்கள், பிள்ளை வீட்டார் என்பதற்காக ரொம்ப அட்டகாசம் பண்ணினார்கள். என் அண்ணாவுக்குக் கோபம் வந்துவிட்டது. கல்யாணத்தின் போது பாட்டி ஓடிப் போனவள் என்பதை யார் மூலமோ தெரிந்து

வைத்திருந்தான் போலிருக்கிறது. அதைக் குத்திக் காட்டி விட்டான். கல்யாணப் பந்தலில் உட்கார்ந்திருந்த நான், அண்ணா பேசினதைக் கேட்டுச் சிரித்து விட்டேன்... கிழவி இருபத்தைந்து வருடம் காத்திருக்கிறாள் இந்தச் சந்தர்ப்பத்துக்காக... நீ அவள் பேத்தி என்பதைக் கூட மறந்து, நம் குடும்பத்துக்கு அவமானம் ஏற்படுத்துவது ஒன்றுதான் நோக்கமாக, நாளை எண்ணிக் கொண்டு காத்திருந்திருக்கிறாள்! கல்யாணத்தின் போது நீ இறந்திருந்தாலும், காணாமற் போனாலும் ஒரு குடும்பத்துடன் தீராப் பழிதானே?... இந்தாப்பா, வீட்டின் பின் பக்கம் இறங்கிக் கொள்கிறோம். ஓசைப்படாமல் வண்டியை நிறுத்து...''

வண்டி நின்றது.

மோகனாவுக்குப் பெரும் அளவுக்குத் தெம்பு வந்து விட்டது. ''பயப்படாதே. எனக்கு இனி ஒன்றுமில்லை...'' என்று அம்மாவுக்குத் தைரியம் கூறினாள்.

''கெட்டி மேளம்! கெட்டி மேளம்!'' சகல வாத்தியம் முழங்கியது. அட்சதைகள் பொழிந்தன.

கன்னிகாதானம் செய்து கொடுக்க வைக்கோல் கட்டின் மீது அமர்ந்திருந்த கோதண்டம், பக்கத்தில் நின்றிருந்த மீனாட்சியைப் பார்த்து, ''என்னவோ பெண்ணைக் காணோமென்று நடுராத்திரியில் என்னை எழுப்பினாயே, பைத்தியக்காரி!'' என்று ரகசியமாகச் சொல்லிச் சிரித்தார்.

''ஆமாம், ஆமாம். நான் ஒரு பைத்தியம்தான்'' என்று ஒப்புக் கொண்டாள் மீனாட்சி.

அவள் பார்வை, பெண்கள் கூட்டத்தின் நடுவே அதே கோர இளிப்புடன் நின்று கொண்டிருக்கும் கிழவியின் மீது



விழுந்தது. ஒரே பிடியாகப் பிடித்து எல்லோரிடமும் அவள் செய்த அக்கிரமத்தைச் சொல்லிவிட வேண்டும் போல் மனம் துடித்தது.

கிழவியோ எதுவுமே நடவாத மாதிரி அட்சதையைத் தூவி ஆசீர்வாதம் செய்து கொண்டிருந்தாள் தன் பேத்தியை. அந்த மூப்பிட்ட முகத்தில் குழந்தைத்தனமும் அசுரத்தனமும் ஒரே சமயத்தில் தெரிந்தன.

★

# 12. வினை

நிச்சயமாய் ஏதோ பயங்கரம் நிகழப் போகிறது. எந்த நிமிடமோ, எந்த வினாடியோ தெரியாது.

பெரியவர் கண்ணை மூடிய மூன்றாவது நாள் என் மனதில் அந்தப் பொல்லாத சந்தேகம் முளைத்தது.



அப்படி நான் நினைப்பது துரோகம். பெரியவரின் குடும்பத்துக்குத் துரோகம். சாப்பிட்ட உப்புக்குத் துரோகம். 'செக்ரட்டரி சார்' என்று பெரியவர் அழைப்பாரே, அந்த அன் புக்குத் துரோகம். இருந்தாலும் வேறு விதமாக நினைக்கத் தோன்றவில்லை.

ஊரிலே பெரியவருக்காகக் கண்ணீர் சிந்தாதவர்கள் கிடையாது. 'இரண்டு கையால் சம்பாதித்தார். நாலு கையால் வாரி வழங்கினார்' என்று எல்லோரும் புலம்பினார்கள். பிரேத ஊர்வலத்துக்குக் கொஞ்சம் முன்னால், கவர்னருடைய ஏ.டி.ஸி. ஓடிவந்து ஒரு மாலை சாத்தினார்.

இப்படி, கண்ணீர் வடிக்காதவர்கள் பாக்கியில்லை... இரண்டே இரண்டு பேரைத் தவிர.

இரண்டு பேரும், பெரியவருடைய சாட்சாத் பிள்ளை கள்.

ஒருவன், மாசிலாமணி. இவன்தான் மூத்தவன். ரூர்க் கேலாவில் பெரிய எஞ்ஜினியர்.

மற்றவன், ஹரி. சின்னவன். திருச்சிராப்பள்ளியில் டாக்டராகத் தொழில் செய்கிறான்.

தந்தை இறந்து போன துக்கத்தைக் காட்டிலும், ஒருவர் மீது ஒருவருக்கு உள்ள குரோதம்தான், மூன்று நாட்களுக்குள் முன்னூறு தரம் வெளிப்பட்டது.

ஏதோ விபரீதம் விளையப் போகிறது என்று நான் சந்தேகப்படலானேன். என் உடம்பில் திடீரென வியர்வை கொட்டியதென்றால், அந்த நினைவு எனக்குள் கிளம்புகிறது என்று பொருள். ஒரு நாளைக்குள் பல டஜன் தடவைகள் நான் நினைத்து நினைத்து நடுங்கத் தொடங்கினேன்.

இன்றா நேற்றா? பதினைந்து இருபது வருடமாக இந்த விபரீதத்துக்கான சூழ்நிலை தயாராகி வந்திருக்கிறது.

பெரியவருடைய காரியதரிசியாக நான் வேலையேற்ற போது மூத்தவனுக்குப் பத்து வயது; அவிழ்த்து விடப்பட்ட கடாமாடு மாதிரி அட்டகாசமாய் ஓடுவான், திரிவான். தம்பி, மா மரத்தின் மீதேறி நிற்கிற வேளை பார்த்து அடிக் கிளையை உலுக்குவான். கிணற்றுக்குள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந் தால், காலை வாரிவிடுவான். அந்த அபாயங்களுக்கெல்லாம் தப்பித்தான் ஹரி இன்று டாக்டராக விளங்குகிறான்.

ஹரி? அவனும் லேசுப்பட்டவனல்ல. கொலையை ஓசைப் படாமல் செய்வான். அண்ணனுக்காகச் சமையல்காரன் ஓமப் பொடி எடுத்துச்சென்றால், மெனக்கெட்டு ஒரு கண்ணாடியை உடைத்து, தூளை அதில் கொட்டி அனுப்புவான். அதற்கெல் லாம் தப்பித்தான் பெரியவனும் எஞ்ஜினியராகி விட்டான்.

வளர வளர, இரண்டு பேருடைய குரோதமும் வளர்ந் தது. இன்று முற்றி நிற்கிறது. எந்த நிமிடத்தில் என்ன விளை யுமோ? என் தேகம் காலோடு தலை பதறுகிறது.

பெரியவர், இவர்கள் இரண்டு பேருக்கும் இடையே சமரசம் பண்ணி வைக்க ஒரு துரும்பும் எடுத்துப் போடவில்லை. நாளாவட்டத்தில் தானே சரியாகி விடும் என்று நினைத்தார். அதனால், தானே அந்தப் பகைக்கு உரம் போட்டு நீரும் பாய்ச்சி விட்டார்.

வேலையாகி, கல்யாணமாகி, மாசிலாமணியும் ஹரியும் வெளியூர் போனார்கள். அவன் இங்கே வந்திருந்தால் இவன் வரமாட்டான். இவன் வந்திருப்பது தெரிந்தால் அவன் வர மாட்டான்.

தற்செயலாக ஒரு சமயம் இரண்டு பேரும் தங்கள் பெண்டாட்டிகளுடன் சேர்ந்தாற்போல் வந்துவிட்டார்கள்.



ஒரே மாதம்தான். பங்களா திமிலோகப்பட்டு விட்டது. இரண்டு பேருடைய மனைவிகளுக்குள் கூட முறைப்புத் தான். மாமி யார் இருந்தால் இருவரும் கட்டுப்பட வேண்டியிருக்கும். அந்த மகராசி இந்தக் கூத்தெல்லாம் பார்க்காமல் எப்போதோ போய்விட்டாள்.

மாசிலாமணியும் அவன் மனைவியும் மாடியறையி லேயே அடைந்து கிடப்பார்கள். ஹரியும் அவன் சம்சாரமும் கீழே, வடவண்டைப் பக்கத்து அறையில் முடங்கியிருப்பார் கள். இவனுடைய ஸ்கூட்டர் இருந்தால் அவனுடைய கார் பக்கத்தில் நிற்காது. அண்ணனுடைய செருப்புக்கு அருகில் தன் செருப்பைக் கழற்றிப் போட மாட்டான் தம்பி.

பெரியவர் என்ன செய்வார்? பாவம், பெரிய பிள்ளை யோடு குலாவ ஆசையாயிருந்தால் மாடிக்குப் போவார். சின்னப் பிள்ளையைப் பார்க்கத் தோன்றும் போது அவன் இருப்பிடத் துக்குச் செல்வார். பகை வளர்ந்ததில் பாதிபாவம் அவருக்கு.

பெரியவர் கிணற்றடியில் கால் சறுக்கி விழுந்தபோது, இரண்டு பேருக்கும் கார்டு எழுதிப் போட்டேன். அட பாவமே என்கிறாற்போல் இருவரும் பதில் போட்டார்கள். பிறகு பெரியவர் படுத்த படுக்கையானபோது போன் செய்தேன். ஒரு தினம் முன் பின்னதாக வந்து சேர்ந்தார்கள்.

வந்த ஒரு வாரத்துக்கெல்லாம் பெரியவரின் காலம் முடிந்து விட்டது. ஆனால் அந்த ஏழே நாட்களுக்குள் இரண்டு பிள்ளைகளும் அடித்த கூத்து! அப்பப்பா!

இரண்டு பேரும் சேர்ந்தாற்போல் டாக்டரைக் கேட்க மாட்டார்கள். தகப்பனாரின் தலைமாட்டண்டை ஒருத்தன் கேட்பான். டாக்டர் காரில் ஏறுகிறபோது மற்றவன் கேட் பான். தம்பி ஆரஞ்சுப் பழத்தை உரித்துக் கொடுத்தானானால்,

அண்ணன் ஹார்லிக்ஸ் பாட்டிலையே கட்டிக் கொண்டு மாரடிப்பான்.

ஏன், பெரியவர் இறந்துவிட்டபோது –

மாசிலாமணிதான் தகப்பனார் மீது விழுந்து அழுதான். ஹரி மூலையில் வாயைப் பொத்திக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தான். இப்படியும் ஒரு இருதயமற்ற பாவி இருக்கிறானே என்று நினைத்திருந்தேன். அப்புறம்தான் விஷயம் புரிந்தது. அண்ணன்காரன் அழுது புலம்பிவிட்டு அந்தண்டை போன பிறகு, ஹரி எழுந்து வந்து பிரேதத்தின் மீது விழுந்து கதற ஆரம்பித்தான்.

கொள்ளி போடும்போது? வாய்க்கரிசி இடும்போது? அக்கினி மூட்டிச் சடங்குகள் செய்யும்போது? ஒருத்தன் கண்ணில் இன்னொருத்தன் படுவதில்லை என்று வீறாப்போடு இருந்தார்கள். பார்க்கிறவர்களுக்கு எத்தனை ரசா பாசம்! லட்சியம் இல்லை அவர்களுக்கு.

காரியங்கள் முடிந்து வீடு திரும்பிய பிறகு, இன்னும் அதிகமாகி விட்டது அந்தக் குரோதம். துக்கம் விசாரிக்க வருபவர்களை நான்தான் வரவேற்பேன். அண்ணன் எப்படி இருக்கிறான், தம்பி 'மூட்' எப்படி இருக்கிறது என்பதை அவரவர்கள் அறைக்கு ரகசியமாய்ச் சென்று கவனித்துவிட்டு வந்து சொல்வேன்.

என்னவோ ஒன்று பயங்கரமாய், மகா பாதகமாய் நடைபெறப் போகிறது என்று எனக்குள் ஏதோ ஒன்று சொல்லிக் கொண்டேயிருந்தது. ஏன் சொல்லாது?

மயானத்துக்குப் போய்விட்டுத் திரும்பிய முதல் தினத்தன்று இரவு இரண்டு மணிக்கு மேல் இருக்கும்.



மாடியில் யாரோ குறுக்கும் நெடுக்குமாய் உலவுகிற மாதிரி சப்தம் கேட்டது. கொஞ்ச நேரம் பொறுத்துப் பார்த்தேன். நிற்காமல் கேட்டது.

டார்ச் விளக்கை எடுத்துக்கொண்டு மாடிக்கு மெல்ல ஏறினேன். ஒரு காலை மேலே வைத்தால் இரண்டு காலைப் பின்னே இழுத்தது. மாடியிலிருந்து வந்த ஓசை கீழே இறங்கி என் தலைக்குள் புகுந்து இருதயத்தில் உட்கார்ந்து கொண்டு அடிக்கிற மாதிரி இருந்தது.

கும்மிருட்டு மாடியில். டார்ச் விளக்கை அழுத்தினேன். ஒரு வெளிச்சமும் வரக் காணோம். பாட்டரி தீர்ந்து போய் இருந்தது.

திடீரென இருளின் நடுவே, பளபளவென்று கோலிக்குண்டு மாதிரி இரண்டு நெருப்பு உருண்டைகள் தெரிந்தன. என் மெய் நடுங்கியது. அந்த நெருப்புத் துண்டங்கள் எதிர்பாராத விதமாக நகர்ந்தபோது, தாள முடியாமல், ''ஐயையோ!'' என்று கூவிவிட்டேன்.

''யாரது?'' என்று சின்னவன் ஹரியின் கோபமான குரல் வந்தது.

அடுத்த நிமிடம் மின் விளக்குகள் எரிந்தன.

கறுப்புப் பூனையொன்றை மடியில் வைத்துக்கொண்டு கைப்பிடிச் சுவரில் அமர்ந்திருந்தான் ஹரி. அவன் கையில் இருந்த சிறு கத்திரிக்கோல் பூனையின் கால் நகங்களை வெட்டிக் கொண்டிருந்தது.

''எதற்காக இந்த நேரத்தில் திருடன் மாதிரி வருகிறீர்?'' என்று ஹரி அதட்டினான்.

நான் என்ன பதில் சொல்லட்டும்? ''ஒன்றுமில்லை'' என்று மழுப்பிவிட்டுக் கீழே இறங்கினேன்.

கீழ்ப்படியருகே நின்றிருந்த பெரியவன் மாசிலாமணி, ''என்ன கலாட்டா மாடியில்?'' என்று கேட்டான்.

''ஒன்றுமில்லை... உங்கள் தம்பி தூக்கம் வராமல் மாடியில் உலாவிக் கொண்டிருந்தார்...'' என்று ஏதோ உளறினேன்.

மாசிலாமணி என்னை நம்பத் தயாராயில்லாமல் இரண்டு நிமிடம் மேலும் கீழுமாக ஆராய்ந்துவிட்டு மெதுவே திரும்பினான்.

''ஆ!'' என்று நான் வீரிட்டு விட்டேன்.

''என்ன ஐயா மறுபடியும்?'' என்று கோபத்துடன் திரும்பி வந்தான் மாசிலாமணி.

மேலும் மேலும் வீரிடவிருக்கும் என் தொண்டையை வலுக்கட்டாயமாக அடைத்துக் கொள்ளும் பொருட்டு, இரண்டு கையாலும் வாயை அழுந்தப் பொத்திக் கொண்டேன்.

மாசிலாமணி முறைத்துப் பார்த்துவிட்டு நடந்தான். அவன் தலை மறைந்த பிறகே கைகளை வாயிலிருந்து எடுத்தேன்.

நான் கத்தியதற்குக் காரணம், மாசிலாமணி தனது இடுப்பில் பெல்ட்டின் குறுக்காக ஒரு கூரிய பிச்சுவாவைச் செருகி வைத்திருப்பதைக் கவனித்துவிட்டதுதான்.

என் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டேன். படுக்கையில் விழுந்து புரண்டேன். போர்த்துக் கொண்டிருந்த பெட்ஷீட், வியர்வையினால் நனைந்து ஈரமாகிக் கசகசத்தது. அதைத் தூர எறிந்தேன். குளிரினாலும் பீதியினாலும் உடம்பு சில்லிட்டு விறைத்தது.

எண்ண எண்ண என் அச்சம் அதிகரித்தது.



சின்னப் பிள்ளை ஹரி, தன் சுபாவப்படி மர்மமான பயங்கரத்தில் ஈடுபட்டிருக்கிறான். பெரிய பிள்ளை மாசிலாமணி, அவனது வழக்கம் போல் பகிரங்கமாகவே பிச்சுவாவை ஏந்தி விட்டான்.

ஏதோ நடக்கப் போகிறது என்ற என் எண்ணம் உறுதிப்பட்டது. என் மார்பு படபடவென்று அடித்துக் கொள்ளவில்லை. விட்டு விட்டு, நின்று நின்று அடித்துக் கொண்டது, எந்த வினாடியும் அது ஒரேயடியாய் நின்றுவிடப் போகிறது என்று தோன்றியது.

சகோதரர்களின் குரோதம் இப்போது கூர்மையாகி இருப்பதற்கு என்ன காரணம் இருக்கும்? நான் யோசித்தேன்.

பணம்தான்.

ஆமாம். இறப்பதற்கு இரண்டு நாள் முன்பு, பெரியவர் என்னிடம்தான் சொன்னார் வக்கிலையும் ரெஜிஸ்திராரையும் அழைத்துவரும்படி. கூப்பிட்டுக் கொண்டு வந்தேன்.

கதவைத் தாளிட்டுக்கொண்டு மூன்று மணி நேரம் அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள். பிறகு வக்கீல் தன் சினேகிதர்கள் இரண்டு பேரை அழைத்து வந்தார் சாட்சிக் கையெழுத்துப் போட. உயில் தயார் செய்து வக்கீல் எடுத்துக் கொண்டு போய்விட்டார்.

எனக்கு அதில் ஒரு வரிகூடத் தெரியாது. ஆனால், இந்தச் சகோதரர்களுக்குள் நிலவுகிற பகைமையைப் பார்த்தால்...

யாருக்குக் கூட எழுதினாரோ? யாருக்குக் குறைத்து எழுதினாரோ?

இந்த நினைவு வந்ததும், என் மனத்தில் கொஞ்ச நஞ்சமிருந்த நிம்மதியும் ஓடிவிட்டது.

இனி இந்த வீட்டில் ஒரு நிமிடம் கூட இருக்கக் கூடாது. எனக்கு இளகிய மனம். ஏன், பயந்த மனம் என்றே ஒப்புக் கொள்கிறேனே? எந்தக் கண்ணராவியையும் கண்ணால் பார்க்க எனக்குத் தாங்காது. ஏதாவது நேருமுன், விபரீதம் நிகழுமுன், ஓடிவிடவேண்டும்.

அன்று பகல் நான் வீட்டிலேயே இல்லை. சென்டிரலுக்குச் சென்று பம்பாய்க்கு டிக்கெட் எடுத்துக் கொண்டேன் மறுநாள் புறப்பட. என் மாமா பையன் ரொம்ப நாளாய் அங்கே வந்துவிடும்படி கூப்பிட்டுக் கொண்டிருக்கிறான். இந்தக் கூத்தையெல்லாம் காணாமல் போய்விடுவது என்று தீர்மானித்துக் கொண்டேன். நானாகச் சேர்த்த தொகை மூவாயிரத்துச் சொச்சம் இருந்தது. அதையும் பாங்க்கிலிருந்து 'டிரா' பண்ணி வைத்துக் கொண்டேன்.

அன்று இரவு நான் படுத்துக் கொள்ளவில்லை. கட்டிலில் உட்கார்ந்தவாறே, கடியாரம் அடிக்கிற ஒவ்வோர் மணியையும் எண்ணிக் கொண்டிருந்தேன்.

திக்திக்கென்று அடித்துக்கொண்டது நெஞ்சு. கடவுளே! இந்த ஒரு ராத்திரி தாண்டிவிட உதவி செய். போதும். எந்தக் கோரமும் இந்த ஒரு இரவு நடந்து விடாதபடி தடுத்து வை. போதும். இதோ, நாளைக் காலை ஓடியே ஓடி விடுகிறேன்.

திரும்பத் திரும்ப எனக்குத் தெரிந்த கடவுளையெல்லாம் வேண்டிக் கொண்டிருந்தேன்.

திடுமென, கிறீச்சென்ற ஓசை கேட்டது. கிறி... கிறி... கிறீச். அதாவது, மெதுவாய், வெகு வெகு மெதுவாய் ஒரு கதவு திறக்கப்படுகிற ஒலி அது.

நடுங்கும் காலை இழுத்துக் கொண்டு எழுந்து ஸ்விட்சைப் போட்டால்...



விளக்கு எரியவில்லை.

மெயினை யாரோ அணைத்து வைத்திருக்கிறார்கள்!

எதற்காக?

கொலை நிகழ்ந்ததும் கூச்சல் கேட்கும். கூச்சல் கேட்டதும் ஆள் வரும். ஆள் வந்தால் அகப்படக் கூடாது.

வியர்வையில் குளித்தேன். என் பற்கள் கிட்டின.

கதவைத் திறந்துகொண்டு வெளியே எட்டிப் பார்த்தேன். யாரோ நடந்து போகிற மாதிரி ஓசை வந்தது. உருவம் தெரியவில்லை. கையால் இழுக்கலாம் போல இருட்டு தொங்கிக் கொண்டிருந்தது திரை திரையாய். அப்போதிருந்த பதற்றத்தில், ஓர் ஈர்க்குச்சியால் தட்டினால் போதும். நான் தலைகுப்புற விழுந்து விட்டிருப்பேன்.

மெல்ல நடந்தேன், முன்னால் செல்லும் காலடி ஓசையைக் கவனத்தில் கொண்டு. மாடிப்படியருகே வந்தபோது, கைப்பிடிச் சுவரின் முனை, அதிலிருந்த விளக்குக் குமிழ், சுவர், சுவரின் வழவழப்பு... எல்லாம் தட்டுப்பட்டன.

'ஆண்டவனே! என்னைத் தப்ப வைக்கவில்லையா?' என்று புலம்பினேன். இந்த ஓர் இரவு பார்த்து... ஆமாம். இதோ, இப்போதே ஒரு பயங்கரம் நடக்கப் போகிறது என்பதை எனது பஞ்சேந்திரியங்களும் புலப்படுத்தின. முடியாது, நாம் தப்பவே முடியாது... அந்த விபரீதத்தை நான் பார்த்துத் தான் ஆக வேண்டும் என்று விதித்திருக்கிறது.

மரணம் என்பது ஓர் உடும்பாயிருக்குமானால் அதன் கோரப் பிடியில் நான் சிக்கியிருந்தேன். பளிச்சென்று எனக்கு இன்னோர் எண்ணமும் தோன்றியது. தோன்றியதுமே இன்னொரு குடம் வியர்த்துக் கொட்டியது.

சாவு என்னை நோக்கித்தான் வருகிறதோ கடைசியில்? சகோதரர்களுக்குள் என்று தப்பாகக் கணக்கிட்டுவிட்டேனோ இத்தனை காலமாக?

சில்லென்று எதுவோ கையில் உராய்ந்தது.

அந்தப் பிச்சுவா... குத்துக் கத்தி.

பாம்பு கடித்த மாதிரி வீரிட்டேன் உயிர் போக.

கைப்பிடிச் சுவரருகே கிடந்த அந்தப் பிச்சுவாவை என் கைகள் இறுகப் பற்றின.

என் கண்கள் செருகின. காது பஞ்சடைத்தது. கால் தொய்ந்தது. மூளை மரத்தது.

''யார்?'' என்று உரத்த குரல் ஒன்று கேட்டதுதான் எனக்குத் தெரியும்.

ஆபத்து! ஆபத்து! காத்துக் கொள்! தப்பி ஓடு!... இப்படிப் பல குரல்கள் என் மனத்துக்குள் ஊளையிட்டன.

கூண்டில் நிற்கிறேன்.

கைதிக் கூண்டில்... கொலைக் குற்றம் சாட்டப்பட்ட வனாக, மாசிலாமணி என்ற மூத்தவனைக் கொன்றதாக.

என்னவெல்லாம் சொல்லப்படுகின்றன! எனக்கே தெரியாத எத்தனை உண்மைகள்!

இந்த செகரட்டரி இரவு வேளைகளில் சந்தேகாஸ்பத மான இடங்களில் நடமாடினான்.

உயிலில், பெரியவர் நயா பைசா எழுதி வைக்கவில்லை இவனுக்காக. இத்தனை வருடம் வேலை பார்த்தும் ஏமாற்றப் பட்டுவிட்ட ஆத்திரம்.



பம்பாய்க்கு டிக்கெட் வாங்கி வைத்திருந்தான்.

பாங்கிலிருந்து மொத்தப் பணத்தையும் எடுத்துக் கொண்டு தயாராயிருந்தான்.

இருவரில் ஒருவனைக் கொன்று விட்டால் மற்றவன்மீது பழி விழும் என்று கணக்குப் போட்டிருந்தான். கையும் களவு மாகப் பிடிபட்டதால் திட்டம் தகர்ந்து விட்டது. அண்ணன் தம்பி இரண்டு பேரும் என்னைத்தான் கண்காணித்து வந்தார் களாம்!

எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந் தேன் நான். எப்படி மறுக்க முடியும்? அவ்வளவும் உண்மை.

பீதியும் நடுக்கமும் அன்று என்னைப் பித்தனாக்கியிருந் தன. யாரோ யாரையோ கொலை செய்யப் போகிறார்கள் என்று கற்பனை செய்து கொண்டு அந்த பயத்திலே செத்துக் கொண் டிருந்த நான், கடைசியில் என் கையாலேயே ஒரு கொலையைச் செய்து விட்டேன்.

தலையணையைக் கிழிப்பதுபோல, பஞ்சுக் குவியலைக் குதறுவது போல, என் பிச்சுவா மாசிலாமணியின் உடலில் புகுந்து விளையாடிற்று. சதையின் ஸ்பரிசம், ரத்தத்தின் ருசி, சூடான திரவத்தின் பெருக்கம்... என் நடுக்கமே என்னைக் கொலைகாரனாக்கி விட்டது.

விபரீதம்... பயங்கரம்... என்னவோ ஒன்று நடக்கப் போகிறது...

எல்லாம் நிகழ்ந்துவிட்டன. என் அச்சம் பொய்க்க வில்லை.

★

# 13. ஜானகிராம் தயாரித்த சப்பாத்தி

நீண்ட அரங்கம் இரண்டு பகுதிகளாகப் பிரிந்திருக்கிறது.

முதல் பகுதி : காற்றோட்டம் உள்ள பளிச்சென்ற புதிய சமையலறை. கிழக்குப் புறமும் மேற்குப் புறமும் இரண்டு



ஜன்னல்கள் இருக்கின்றன. கிழண்டை ஜன்னலின் கீழ்க் கதவுகள் மூடப்பட்டு, மேலண்டையது திறந்து வைக்கப்பட்டுள்ளது. சூரிய வெளிச்சம் அந்தக் கம்பியின் வழியாகப் பாய்ந்து, தரையில் அமர்ந்திருக்கும் இளைஞனின் பனியன் அணிந்த முதுகில் பட்டைக் கோடுகளாக விழுகின்றது.

கிழண்டை ஜன்னலின் மேற்கதவுகள் திறந்திருப்பதால், அதன் வழியே வரும் காற்று, ஸ்டவ்வுக்குக் காற்றடித்துக் கொண்டிருக்கும் பெண்ணின் கேசத்தைச் சிலுசிலுக்க வைக்கிறது.

கிழக்கு ஜன்னலையும் மேற்கு ஜன்னலையும் இணைத்தாற்போல் சமையல் மேடை கட்டப்பட்டுள்ளது. மேடையிலும், ஜன்னல்களுக்குப் பக்கத்திலுள்ள சுவர் அலமாரிகளிலும் உள்ள எவர்சில்வர் பாத்திரங்கள் நவீனமாயும், புதிதாயும், அளவுக்குட்பட்டும் இருக்கின்றன.

அரங்கத்தின் இரண்டாவது பகுதியில் : 'வேலை பார்க்கும் பெண்களுக்கான விடுதி'யில் கீழ்த்தளத்து அறை. இளமையின் கட்டுப்பாடற்ற ஒழுங்கின்மை அங்கே கூத்தாடுகிறது. ஸ்டாண்டுகளில் புடைவைகளும் பிளவுஸ்களும் சுடிதார்களும் அலங்கோலமாகத் தொங்குகின்றன. மேஜை மீது சதுரக் கைக்கடியாரம் கழற்றி வைக்கப்பட்டுள்ளது. டிரான்ஸிஸ்டர் பாட, கவிழ்ந்து கிடக்கும் பவுடர் டப்பாவின் மணம் காற்றிலே பரவ, திறந்து வைத்துள்ள பேனாவின் அடியில் சிக்கியுள்ள காகிதம், மேலேயுள்ள மின்சார விசிறியின் தூண்டுதலால் மேஜை மீது படபடக்க, ஒரு பெண், அவையோருக்குத் தன் அழகிய முதுகையும் லாகவமாகத் தொங்கும் பின்னலையும் காட்டியவாறு குனிந்து அமர்ந்த நிலையில் ஒரு டிரங்குப் பெட்டியில் துணிமணியை அடுக்கிக் கொண்டிருக்கிறாள்.

அவள் செய்கை, அறையின் ஒழுங்கின்மையைச் சரிப்படுத்துவது போல் தோன்றினாலும், உண்மையில் அவள் வெளியூருக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறாள்.

நாடகம் தொடங்கும்போது, அரங்கத்தின் இரண்டு பகுதிகளும் ஒரே சமயத்தில் தெரிகின்றன. இரண்டிலும் வெளிச்சம் உண்டு. ஆனால் ஒன்றிலே காட்சி தொடங்கியதும், மற்றப் பகுதியில் வெளிச்சம் மங்குகிறது. ஒரு பகுதியில் நிகழ்ச்சி முடிந்ததும், அங்கே இருளை மெல்ல மெல்லப் படரவிட்டு, மறு பக்கத்திலே சிறிது சிறிதாக வெளிச்சத்தைப் பாய்ச்ச வேண்டும்.

## முதல் பகுதியில்

*(ஸ்டவ்வுக்குக் காற்றடித்துவிட்டு அவள் நிமிர்கிறாள். வேலை செய்வதற்கு இடையூறில்லாத வகையில் புடவையின் ஓரங்கள் தூக்கிச் செருகப்பட்டிருப்பதால், கணுக்காலுக்கு மேல் சிவந்த கால்கள் தெரிகின்றன. இடுப்பில் கை வைத்துக் கொண்டு, தரையில் உட்கார்ந்து சப்பாத்தி மாவைப் பிசையும் கணவனைப் புன்னகையுடன் நோக்குகிறாள். அவள் பெயர் கன்யா. அவன் பெயர் ஜானகிராம். மேலுக்கு அமைதியுடன் காட்சி தந்தாலும் உள்ளுக்குள் ஒரு பதைபதைப்பு அவனைப் பிடித்திருக்கிறது. அது ஒரு சூழ்ச்சிக்காரனின் பதைபதைப் பாகும்.)*

கன்யா : *என்ன, ஆச்சா?*

ஜானகிராம் : ரொம்பத்தான் விரட்டாதீங்க மேடம்! நான் என்ன ப்ரொஃபஷனலா! (பொதேர் பொதேரென்று சப்பாத்தி மாவை அடித்துப் பிசைகிறான்.)

கன்யா : தாராளமாய் என் மீது இருக்கிற கோபத்தை மாவின் மீது காட்டுங்கள். அவ்வளவுக்கவ்வளவு சப்பாத்தி நன்றாய் இருக்கும். சீக்கிரம் ஆகட்டும். எனக்குப் பசிக்கிறது.

ஜானகிராம் : இதோ, முதல் சப்பாத்தியை நானே உனக்கு ஊட்டி விடுகிறேன். சரிதானே?



கன்யா : உங்கள் புத்தியே கெட்டுவிட்டது.

ஜானகிராம் : (திடுக்கிட்டு) என்ன?

கன்யா : ஆமாம். உங்கள் டிபார்ட்மெண்ட் பூரா ஒரே ஒய்யாரிகள் பட்டாளமென்று எனக்குத் தெரியாதாக்கும்! அவர்களுடன் பழகிப் பழகி உங்கள்...

ஜானகிராம் : (கடகடவென்று சிரித்து) ஒரு ஜி.ஓ. வேண்டுமானால் போடச் சொல்லட்டுமா? எந்த சர்க்கார் ஆபீசரும் தன் கீழே வேலை பார்க்கும் பெண்களிடம் வாயைத் திறக்கக் கூடாது, மூச்சு விடக்கூடாதென்று?

கன்யா : (கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டு) மணி ஐந்தே கால் ஆகிறது. எப்போ சப்பாத்தி சுட்டு, எப்போ...

ஜானகிராம் : இப்போ, இப்போ. அதிருக்கட்டும். வேலை பார்க்கிற பெண்களை ஒய்யாரி, சிங்காரி என்று கிண்டல் பண்ணுறாயே, நீ மட்டும்? சமையல் செய்கிறபோது கூட ரிஸ்ட் வாட்சைப் பார்! படா ஸ்டைல்!

கன்யா : ஒரு காரியமாய் இதைக் கட்டிக் கொண்டிருக்கிறேனாக்கும்!

ஜானகிராம் : முகூர்த்தம் தவறி விடுமோ?

கன்யா : முகூர்த்தம் தவறி விடுமோ, மனிதர் தவறி விடுவார்களோ? ஆகட்டும், ஆகட்டும்!

ஜானகிராம் : அடுத்த வீட்டு வாசலில் வெண்ணெய்க் கடை இருக்கிறதே, கால் ரூபாய்க்கு வெண்ணெய் வாங்கி வாயேன் கன்யா. சப்பாத்தி மாவுடன் கலந்து பிசைந்தால் பிரமாதமாயிருக்கும் என்று சொல்வார்கள்.

கன்யா : அரை ரூபாய்க்கும் குறைவாய் வெண்ணெயைக் கண்ணிலேகூடக் காட்ட மாட்டான். சும்மா போகாத ஊருக்கு வழி தேடாதீர்கள். அப்பவே எனக்குச் சந்தேகம்தான்.

ஜானகிராம் : (மீண்டும் திடுக்கிட்டு) என்ன சந்தேகம்?

கன்யா : வேறொன்றுமில்லை. அரசாங்க விவசாய இலாகாவில், பூச்சி கொல்லும் பிரிவில், பெரிய ஆபீசராக இருப்பவர், மனைவிக்குச் சப்பாத்தி மாவு பிசைந்து கொடுப்பாரா, பிசைந்து கொடுக்கத் தெரியுமா என்று நினைத்தேன். அதே போல் செய்கிறீர்கள்.

ஜானகிராம் : மனைவி மீது பிரியமில்லாத மரக்கட்டை என்கிறாய்?

கன்யா : சே, சே! அப்படிச் சொல்வேனா? பிரியமில்லாமலா, தினசரி சாயந்தரம் டென்னிஸ் எங்கே, சினிமா எங்கே என்று உலா கிளம்புகிறவர் நேரத்துக்கு முன்னாலேயே வீட்டுக்குத் திரும்பி இப்படிப் பாடுபடுகிறீர்கள்?

ஜானகிராம் : கிண்டல் பண்ணுகிறாயா? பண்ணு, பண்ணு! நாளைக் காலை டூர் போகிறோமே, நம்மைப் பிரிந்து பத்து நாள் இருக்கப் போகிறாளே பாவம் என்று பார்த்தேன்...! உனக்கு இரக்கம் காட்டவே கூடாது.

கன்யா : சரி, சரி. கோபம் வேண்டாம்.

ஜானகிராம் : நான் போய் வாங்கித்தான் வரப் போகிறேன்.

கன்யா : என்னது?

ஜானகிராம் : வெண்ணெய். பத்து ரூபாய்க்குக் குறைவாய்க் கொடுக்க மாட்டேனென்றாலும் பரவாயில்லை. வாங்காமல் திரும்ப மாட்டேன்.

*(ஜானகிராம் வெளியேறுகிறான். கன்யா ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, ஸ்டவ் மேலேயுள்ள சப்பாத்திக் கல் சுட்டு விட்டதா என்று பரீட்சிக்க ஒரு விரலை வைக்கிறாள். 'ஸ்!' என்று கையை உதறி, விரலை நாக்கில் தொட்டுக் கொள்கிறாள்.)*



## இரண்டாவது பகுதியில்

*(டிரங்குப் பெட்டியின் மூடி மீது முழந்தாளை வைத்து அழுத்தி, பூட்டிவிட்டு நிமிர்கிறாள் நாகரிக மங்கையான சுகுமாரி. எழுந்து கொண்டு, கழுத்தின் பின்புறம் கையைக் கட்டிக் கொண்டு, உடம்பை வளைத்துச் சோம்பல் முறிக்கிறாள். டிரான்ஸிஸ்டரின் இசைக்கேற்ப அவள் மேனி நளினமாக வளைந்து ஆடுகிறது. விழிகளைச் சாய்த்து மேஜை மீது படபடக்கும் கடிதத்தைப் பார்க்கிறாள். கைக்கடியாரத்தைப் பார்க்கிறாள். தனது கை நகங்களைப் பார்க்கும்போது முகம் சுளிக்கிறாள். மேஜை டிராயரைக் குடைந்து பல காகிதங்களை வெளியே தள்ளி, ஒரு சிறு 'நெயில் கட்ட'ரைக் கண்டெடுக்கிறாள். அறையின் மறுபுறம் சென்று, நகங்களை வெட்டிக் கொள்வதும், வெட்டிக் கொண்டது போதுமா என்று பார்ப்பதுமாக இருக்கிறாள். ஆகவே, தோழியொருத்தி அறைக்குள் வருவதையும், மேஜை மீதுள்ள கடிதத்தைப் படிப்பதையும் கவனிக்கவில்லை.)*

தோழி : அடிப் பாவி! என்கிட்டே சொல்லவேயில்லையே?

சுகுமாரி : (வியப்புடன் திரும்பி) எப்போ வந்தாய், ரதி? (தோழியின் கையிலுள்ள கடிதத்தைக் கண்டதும்) பார்த்து விட்டாயா? ஸர்ப்ரைஸாக வைத்திருக்கலாம் என்று பார்த்தேன். அதற்குள் கண்டுவிட்டாயே!

ரதி : ஆமாம், வேலையை ராஜினாமா பண்ணிவிட்டு?

சுகுமாரி : (தோழியின் குரலையே போல், கேலியாக) பண்ணிவிட்டு? காதலருடன்? ஜம்மென்று? வேறோர் ஊரில்? டேரா அடித்து? காதல் இன்பத்தை? ஒட்ட ஒட்ட?

ரதி : நிறுத்து, நிறுத்து! கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய தெல்லாம் இனிமேல் பழைய கதை. சுகுமாரியின் ராஜி னாமாக் கடிதத்தைப் படிக்கப் போய், அவள் காதல் விவரத் திலே எல்லாம் புகுந்து...

சுகுமாரி : (நகக் கிள்ளல்களை உள்ளங்கையில் வைத்து, பூவென்று ஊதுகிறாள்) வெட்டு, வெட்டு! வெட்டிக் கொண்டே போகப் போக, பூதம், பெரும் பூதம், மாபெரும் பூதமெல்லாம் கிளம்புவதைப் பார்க்கலாம்!

ரதி : (சுகுமாரியின் பின்புறமாக நின்று அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு) நீயும் நானும் எத்தனை நாள் ஒரே தலை யணையில் படுத்திருக்கிறோம்? எத்தனை தரம் ஒரே பாதாம் அல்வாவை ஒரே ஸ்பூனினால் வெட்டிச் சாப்பிட்டிருக்கிறோம்!

சுகுமாரி : தூ, தூ, தூ! சுத்த மானங்கெட்டவளடி நீ! அதற்காக, ஒரே காதலரை...

ரதி : தூ! வாயைக் கழுவு! யார் அந்தக் காதலர் என்று கேட்டால், பெரிய இது பண்ணிக் கொள்கிறாயே?

சுகுமாரி : நான் புறப்பட்டுப் போகிறதுக்கு முன்னாலே யாரண்டையும் மூச்சுவிடக் கூடாது?

ரதி : சத்தியமாய் மாட்டேன்.

*(சுகுமாரியின் உள்ளங்கையில் அடித்து, ஒரு கிள்ளும் கிள்ளுகிறாள்.)*

சுகுமாரி : காதைக் கொண்டு வா. (கிசுகிசுக்கிறாள். பெருமையுடன் சினேகிதியைப் பார்த்து) என்ன?

ரதி : (நம்ப இயலாதவளாக) அவரா?

சுகுமாரி : ஏன் அப்படி முழிக்கிறாய்? அவரை நீயும்தான் பார்த்திருக்கிறாயே?



ரதி : அதனால்தான் கேட்கிறேன்.

சுகுமாரி : புரிகிறது, புரிகிறது. அதனால் என்ன? என்மீது கொள்ளைக் காதல் வைத்திருக்கிறார்! ஒரு பெண்ணுக்கு வேறு என்னடி வேண்டும்?

ரதி : ஆனால் இதற்காக ஊரை விட்டு ஏன் போக வேண் டும் என்றுதான் எனக்குப் புரியவில்லை.

சுகுமாரி : ரதி! காதலித்து மணந்து கொள்ளும் ஜோடி, முள் காட்டில் இருந்தாலும் இருக்கலாம். பழகிய ஊரில் மட்டும் இருக்கக்கூடாது. புரிந்து கொள்.

ரதி : ஆமாம், ஆமாம். (உதட்டின் ஓரங்களைக் கடித்துக் கொண்டு) நீதான் வேலையை விட்டுவிடப் போகிறேன் என்கிறாய். அவர்?

சுகுமாரி : ஊஹூம். இன்று நான். நாளை அவர்.

ரதி : எப்போது கிளம்பப் போகிறாய்?

சுகுமாரி : நீ அந்தண்டை தொலைந்ததும்.

ரதி : இதோ போய்விடுகிறேனடி தாயே! நீ உன் ஆனந்தக் கனவுகளிலேயே மூழ்கி இரு. உன்னை லேசுப்பட்டவள் என்று நினைத்திருந்தேன், பார்!

சுகுமாரி : இப்போ!

ரதி : படா துணிச்சல்காரி என்று தெரிகிறது!

சுகுமாரி : (அவள் காதைத் திருகியபடி அறைக்கு வெளியே கொண்டு போய்விட்டு) துணிச்சல்காரப் பெண்கள், துணிச்சல் கார ஆண்களை, துணிச்சலுடன் காதலித்து, துணிச்சலுடன் புது வாழ்க்கை ஆரம்பிப்பார்கள்.

ரதி : துணிச்சல் இல்லாத பெண்கள்?

சுகுமாரி : துணிச்சல் இல்லாத பெண்கள், 'போய்விட்டு? வந்துவிட்டு? காதலித்து?' என்று கேள்விகள் கேட்டுக் கொண்டே கிழவியாகி விடுவார்கள்!

(கதவைச் சாத்த முயலுகிறாள்.)

ரதி : (தலையை உள்ளுக்குள் திணித்து) இப்போ சொன்னாயே, அது எந்தப் பெரியார் பொன்மொழி?

சுகுமாரி : சுகுமாரிப் பெரியார் பொன்மொழி! போடி சரிதான்!

(கதவைத் தாளிடுகிறாள். கதவின் மீது எச்சரிக்கையாய்க் காதை வைத்து உற்றுக் கேட்கிறாள்.)

## முதல் பகுதியில்

*(மேலண்டை ஜன்னல் வழியாக விழுந்த சூரிய வெளிச்சம், மங்கியும் நீண்டும் இருக்கிறது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே மறையவும் ஆரம்பிக்கிறது. ஸ்டவ்வின் சீற்றம் அடங்கு வதாகத் தோன்றவே, கன்யா மீண்டும் காற்றடிக்கலாமா என்று பம்ப்பில் கை வைக்கிறாள்.)*

ஜானகிராம் : சட்! ஒருநாள் என்றால் ஒருநாள் கூட வீட்டில் குஷியாய் நிம்மதியாய் இருப்பதற்கு விட மாட்டார்கள்! அசல் நட்சத்திரேய ஜன்மங்கள்!

கன்யா : வாசல் கடையிலே வெண்ணெய் வாங்கி வரவா இத்தனை நேரம்? மணி ஆறு ஐந்து!

ஜானகிராம் : வெண்ணெய் எப்பவோ வாங்கி வந்தாயிற்று! இதோ!

(ஒரு சிறிய பொட்டலத்தைக் காட்டுகிறான்.)



கன்யா : பின்னே?

ஜானகிராம் : பியூன் ஆறுமுகம் வந்து பிடித்துக் கொண்டான். துரத்தி விட்டேன்... சரி, சரி. வேலையைக் கவனி. எங்கே குழவி?

கன்யா : பியூன் ஆறுமுகமா? இந்த நேரத்தில் எதற்கு வந்தான்?

ஜானகிராம் : ஏதோ ஸாம்பிள் மருந்துப் பாக்கெட்டுகள் ஆபீசுக்கு வந்திருக்கிறது. அதை உடனே பரீட்சித்துப் பார்க்கணுமாம்.

கன்யா : சரிதான்! இங்கே எங்கேயாவது பரீட்சித்து விடாதீர்கள்!

ஜானகிராம்: (அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு சிரிக்கிறான்) இங்கேயா? (மாவைச் சிறு உருண்டைகளாக உருட்டிப் போட்டுக் கொள்கிறான்.) 'ஹோம் சர்வீசிலே வேலையாயிருக்கிறேன். வேறே எதுவும் நடக்காது இப்போ' என்று அவனை விரட்டி விட்டு, சாம்பிள் பாக்கெட்டுகளை என் ரூமுக்குள் எறிந்து விட்டு வந்தேன்.

கன்யா : (சப்பாத்தி இடும் கல்லை அவனிடமிருந்து தன் பக்கம் நகர்த்திக் கொண்டு) இனிமேல் நீங்கள் எப்போ இட்டுக் கொடுத்து, எப்போ நான் சாப்பிடுகிறது? நானே பார்த்துக் கொள்கிறேன். விடுங்கள்.

ஜானகிராம் : (முரட்டுத்தனமாக அவளிடமிருந்து கல்லைப் பறித்துக் கொள்கிறான்) முடியாது, முடியாது. நான்தான் செய்வேன்.

கன்யா : (வியப்புடன் அவனைப் பார்த்து) ஏன் இப்படி ஆத்திரம் வருகிறது உங்களுக்கு?

ஜானகிராம் : ஆமாம், ஆமாம். அப்படிச் சத்தம் போட்டால்தான் நீ அடங்குவாய்! (வாசல் பக்கமாய்த் தலையைத் தாழ்த்தி) யாரங்கே? யாரது?

கன்யா : யாரைக் கூப்பிடுகிறீர்கள்?

ஜானகிராம் : நான் யாரையும் கூப்பிடவில்லை. யாரோ நம்மைக் கூப்பிடுகிற மாதிரி இருந்தது. போய்ப் பார். வாசல் கதவைக்கூடச் சாத்தாமல் வந்துவிட்டேன். சாத்திவிட்டு வா.

கன்யா : வெறும் பிரமை உங்களுக்கு?

ஜானகிராம் : என்ன நீ எதிர்த்து வாயாடிக் கொண்டே இருக்கிறாய் இன்றைக்கு?

கன்யா : இதோ போகிறேன், இதோ போகிறேன். மன்னியுங்கள்.

*(வேடிக்கையாகக் கன்னத்தில் போட்டுக் கொண்டுவிட்டு வெளியேறுகிறாள். ஜானகிராம் அவசரம் அவசரமாக, வெண்ணெய்ப் பொட்டலம் என்று சற்று முன் கொண்டு வந்த காகிதப் பாக்கெட்டின் நுனியில் கிழிக்கிறான். வெளுப்பான பொடி உதிர்கிறது. உருட்டி வைத்திருந்த உருண்டையில் அதைக் கொட்டிக் கொண்டு, குழவியினால் தட்டையாக்கிக் கொண்டபின், பாக்கிப் பொட்டலத்தை மடியில் கட்டிக் கொள்கிறான். கன்யா திரும்பி வருகிறாள்.)*

கன்யா : யாரையும் காணோம் வாசலில். கதவும் சாத்தித்தான் இருக்கிறது.

ஜானகிராம் : இந்தா, இந்தா! இதைச் சுடு முதலில். நிறைய நெய் தடவிக் கொள்.

(பரபரப்புடனும், தடுமாற்றத்துடனும் சப்பாத்தி மாவைக் குழவியினால் இடும் கணவனை நோக்குகிறாள் கன்யா.)



கன்யா : ஏன் இப்படி வியர்த்திருக்கிறது உங்களுக்கு? பாவம், பழக்கமில்லாத வேலை!

(ஒரு துண்டு கொண்டு வந்து ஜானகிராமின் முதுகையும் கழுத்தையும் துடைத்து விடுகிறாள்.)

ஜானகிராம் : இந்தா, இதைச் சுடு. பாவம், ரொம்ப நேரமாய்ப் பசிக்கிறது என்றாயே?

கன்யா : என்னவோ இப்போது பசியில்லை. மணி ஆறு இருபது.

ஜானகிராம் : எதற்காக அடிக்கடி மணியைச் சொல்லிக் கொண்டிருக்கிறாய்?

கன்யா : மணியை வைத்துத்தானே அத்தான், மனித வாழ்க்கையைக் கூட்டுகிறோம் அல்லது கழிக்கிறோம்? கடியாரம் என்பதே இல்லாவிட்டால் அற்பாயுள்காரன் தீர்க்காயுள்காரனைப் பார்த்து ஏன் பொறாமைப்படுகிறான்?

(சப்பாத்தியைத் துடுப்பில் எடுத்து ஓர் எவர்சில்வர் தட்டில் போடுகிறாள். ஊதி ஆற வைக்கிறாள். பிறகு கையில் எடுத்து விள்ளுகிறாள்.)

ஜானகிராம் : சாப்பிடேன்! தொட்டுக் கொள்ளச் சர்க்கரை போடட்டுமா?

கன்யா : அது இல்லாமலே வாழ்க்கை இனிப்பாய்த்தான் இருக்கிறது... என்னைப் பொறுத்த மட்டில்...

ஜானகிராம் : (சிரிப்புடன்) கையில் நெய் தடவிய சப்பாத்தி! வாயில் வரட்டு வேதாந்தம்! சாப்பிடு! சாப்பிடு!

(கன்யா, கையிலுள்ள விள்ளலில் ஒன்றை ஜானகிராமனின் வாயருகே நீட்டுகிறாள்.)

கன்யா : ரொம்ப நேரமாய் நீங்களும் தான் பட்டினி. இரண்டு பேரும் சாப்பிடலாமே?

ஜானகிராம் : *(பதைப்புடன்)* ஊஹூம், ஊஹூம்! எனக்கு வேண்டாம்.

*(அவள் கையை வேகமாய்த் தட்டி விடுகிறான். இரண்டு விள்ளல்களும் குழாயினடியில் உள்ள அண்டா தண்ணீரில் விழுந்து மிதக்கின்றன.)*

ஜானகிராம் : *மூஞ்சியைப் பார்!*

*(பளாரென்று கன்யாவின் கன்னத்தில் அறைந்து விடுகிறான்.)*

கன்யா : (கன்னத்தைத் தடவிக் கொண்டு, அதிர்ச்சியுடன்) என்ன... நான் பண்ணிவிட்டேன் என்று... இப்படிக் கோபம் வந்தது?... கைத்தவறுதலாக விழுந்து விட்டதற்கு...

ஜானகிராம் : (மனைவியை அணைத்துக் கொண்டு) மன்னித்து விடு கன்யா. பிரியமாய், மெனக்கெட்டு, சப்பாத்தி இட்டுத் தந்தால் அதைப் பாழடித்து விட்டாயே என்று கோபம் வந்தது. பரவாயில்லை. அடுத்ததையாவது ஒழுங்காய்ச் சாப்பிடு.

(தண்ணீரிலிருந்த சப்பாத்தியை வெளியே எறிந்து விட்டு, தண்ணீரையும் கவிழ்க்கிறான்.)

## இரண்டாவது பகுதியில்

சுகுமாரியின் அறை இப்போது சுத்தமாயிருந்தது. அலங்கோலங்கள் அடுக்கப்பட்டுவிட்டன.

கூரை விளக்கு எரியவில்லை. அறையின் கோடியிலுள்ள மேஜை விளக்கு எரிகிறது. அதனுடைய நிழல் மூடி தாழ்த்தப்



பட்டிருப்பதால், அருகே அமர்ந்துள்ள சுகுமாரியின் முகம் தெரியவில்லை. புழுக்கத்தினால் அவளுக்கு லேசாக வியர்த்திருக்கிறது. முகத்தை இடது தோளுக்குத் திருப்பி, மெல்ல ஊதிக் கொள்கிறாள்; பிறகு வலது தோளுக்கும், பிறகு சோளிக்குள்ளும் ஊதிக் கொண்டு விட்டு, தனக்குத்தானே சிரித்துக் கொண்டு, உல்லாசமாக எழுந்திருக்கிறாள். ஒருமுறை எச்சரிக்கையாக வெளிப்புறம் பார்த்துவிட்டு, ஆசையுடன் ஒரு சூட்கேஸைத் திறக்கிறாள். ஆசையுடன் அணைத்துக் கொள்கிறாள்.

சுகுமாரி : அம்மாடி! என்ன இன்பம்! ரதி ஒரு பைத்தியக்காரி! புது ஊரிலே எப்படிப் பிழைப்பீர்கள் என்று கேட்டாள்! தேடித் தேடிக் கொண்டு வந்து கொடுத்த செல்வம் இங்கே இருப்பது அவளுக்கு எப்படித் தெரியும்!

(வெளியே, ஹாரன் அடித்தவாறு ஒரு டாக்ஸி வந்து நிற்கும் சப்தமும், கதவு மூடப்படும் ஓசையும் கேட்கின்றன. சுகுமாரி சட்டெனப் பெட்டியை மூடுகிறாள். ஒரு வேலையாள் உள்ளே வருகிறான்.)

வந்தவன் : டாக்ஸி வந்துவிட்டதம்மா! இதுதான் லக்கேஜா? வாங்க.

## முதல் பகுதியில்

*(மின்சாரக் கோளாறினால், விளக்கு அணைந்து அணைந்து எரிகிறது. கணவன், மனைவி இருவர் முகத்திலும் அலுப்பு விழத் தொடங்கிவிட்டது. சப்பாத்தி மாவு அப்படியே இருக்கிறது. உருண்டைகள் உலர்ந்து கொண்டிருக்கின்றன. ஸ்டவ்வின் மீது ஒரு சப்பாத்தி தயாராகிவிட்ட மணம் அறையெங்கும் பரவுகிறது.)*

கன்யா : மணி ஏழு பத்து! இப்போதான் முதல் சப்பாத்தி ரெடியாகிறது!

ஜானகிராம் : அதனால்தான் சொல்கிறேன். முதலில் இதைச் சாப்பிட்டுவிடு என்று!

கன்யா : எனக்கென்ன? நன்றாய்ச் சாப்பிடுகிறேன். அப் புறம் எனக்குத் தராமல் சாப்பிட்டுவிட்டாயே என்று என்னைக் கேலி செய்யக் கூடாது?

ஜானகிராம் : மாட்டவே மாட்டேன்!

கன்யா : பார்த்துக் கொள்ளுங்கள்! கீழே நழுவக் கிழுவ விடப் போவதில்லை! ஆ...

ஜானகிராம் : ஆம்!

கன்யா : (வாய்க்கருகே கொண்டு சென்றதை நிறுத்திக் கொண்டு) பார்த்தீர்களா? மறந்தே போனேன். இதற்குத்தான் சமையலறையில் வந்து விளையாடாதீர்கள் என்பது!

ஜானகிராம் : ஏன், ஏன்? என்ன ஆச்சு, கன்யா, சாப்பி டேன்.

*(கன்யா சாவகாசமாய் எவர்சில்வர் தட்டில் அந்தச் சப்பாத்தியை வைக்கிறாள். அவள் முகத்தைச் சோகம் கப்பிக் கொள்கிறது.)*

கன்யா : இன்றைக்கு என் அம்மா இறந்து போன தினம்...

ஜானகிராம் : சொல்லவேயில்லையே?

கன்யா : அதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நான்தான் காலையிலிருந்து பட்டினி இருப்பது வழக்கம்.

ஜானகிராம் : (ஏமாற்றத்துடன்) நாள் முழுதுமா?

கன்யா : இல்லை, இல்லை. அம்மா இறந்து போனது, இரவு ஏழே முக்கால் மணிக்கு. அது வரையில் பட்டினி இருந்துவிட்டு, பிறகு சாப்பிடுவேன்.



ஜானகிராம் : (ஆறுதலுடன்) அதுதானே பார்த்தேன். மணி என்ன? (சிரித்துவிட்டு) நான்தான் ஒருதரம் மணி கேட்கி றேனே!

கன்யா : ஏழு நாற்பது.

ஜானகிராம் : இன்னும் ஐந்து நிமிடம்தான்.

கன்யா : ஆமாம். ஐந்து நிமிடம்தான்.

*(கண்களை மூடிக் கொண்டு, முழந்தாள்களைக் கட்டிய படி உட்கார்ந்திருக்கிறாள். மூடிய இமைகளின் வழியே ஒரு நீர்க் கோடு புறப்பட்டு, மோவாயை நோக்கி இறங்குகிறது.)*

ஜானகிராம் : என்ன கன்யா? அழுகிறாயா? இல்லை, புகையா?

கன்யா : அம்மாவை நினைத்துக் கொண்டேன்.

ஜானகிராம் : நான் பார்த்ததேயில்லை.

கன்யா : எனக்கு எட்டு வயதிருக்கும். உடம்பு சரி இல்லா மல் அவள் படுக்கையில் கிடந்த காட்சி மட்டும் நினைவு இருக்கிறது. ஒரு வேடிக்கை, தெரியுமா?

ஜானகிராம் : என்ன?

கன்யா : ரொம்ப மோசமாய்க் கிடந்தாள் அம்மா. அப்பா, பாவம், கஞ்சி கரைத்து எடுத்து வந்தார். ஒரு வாய் இறங்கி யிருக்கும். ஒரு விக்கல், அவ்வளவுதான்... போய்விட்டாள்.

ஜானகிராம் : பாவம்... ஆனால் அதிலே வேடிக்கை என்ன?

கன்யா : நீங்களும் எனக்கு ஆகாரம் எடுத்து வந்திருக் கிறீர்கள். அதே நேரம்.

ஜானகிராம் : சீ. வாயை மூடு. (அவள் மணிக்கட்டைத் திருப்பி, கடியாரத்தைப் பார்த்து) ஏழே முக்காலாகி விட்டது. இனிமேல் ஒரு சாக்கும் சொல்ல முடியாது. ஊம், ஊம்.

கன்யா : இருங்கள். (எதையோ உற்றுக் கேட்கிறாள். தூரத்தில் ரயில் ஒன்று கூவும் ஓசை கேட்கிறது. மணி பார்த்துக் கொள்கிறாள். சிரிக்கிறாள்.) சுகுமாரி ரயிலேறிவிட்டாள்.

ஜானகிராம் : (அதிர்ச்சியுடன்) என்ன? சுகுமாரியா? எந்த சுகுமாரி?

கன்யா : என்ன ஞாபகமறதி உங்களுக்கு? உங்கள் ஆபீஸிலே, உங்கள் மேஜைக்குப் பக்கத்தில் வேலை பார்க்கிற சுகுமாரியை நினைவில்லை?

ஜானகிராம் : ஓ, அவளா? ஆமாம்... இன்று கள்ளிக் கோட்டை போகிறாள். லீவு போட்டிருந்தாள். உனக்குத் தெரியுமா?

கன்யா : ஏன் தெரியாமல்? அடிக்கடி வருவாள் இங்கே. நேற்றுக்கூட வந்து என்னிடம் சொல்லிக் கொண்டுதானே போனாள்? ஆனால் நீங்கள் நினைத்திருக்கிறாற்போல் கள்ளிக் கோட்டைக்குப் போகவில்லை. கல்கத்தா போகிறாள்.

ஜானகிராம் : (கலவரத்துடன்) எதற்கு இதையெல்லாம் பேசுகிறாய்?

கன்யா : நீங்கள் அவளுக்குக் கொடுத்த பணமெல்லாம் அவளிடம் இருக்கிறதே, அதைத் தேடிக் கொண்டு வீணாய்க் கள்ளிக்கோட்டை போகப் போகிறீர்களே என்றுதான் சொல் கிறேன்..... 'புத்திக் கொள்முதல் என்று அவர் குறித்துக் கொள் வார், நீ எடுத்துக் கொண்டு போ' என்று சொல்லி விட்டேன். ஏன், தப்பில்லையே?



(ஜானகிராம் சினத்துடன் எழுந்து அவளை முறைக் கிறான்.)

ஜானகிராம் : கன்யா! எதை மனசில் வைத்துக் கொண்டு இப்படியெல்லாம் பேசுகிறாய்?

கன்யா : (அதிசயத்துடன் விழிகளைச் சுழற்றி) எனக்கா! மனசிலேயா? ஒன்றுமில்லையே? சுத்தமாய், வெள்ளையாய், களங்கம் இல்லாமல்தான் இருக்கிறது. உங்கள் திட்டம் இப் படிக் கெட்டு விட்டதே என்று கொஞ்சம் அனுதாபம் வேணு மானால் இருக்கிறது. இருக்கக் கூடாது என்கிறீர்களா?

(ஜானகிராம் கோபாவேசத்துடன் நின்று கொண்டிருக் கிறான்.)

கன்யா : (அவன் எதிரில் வந்து நின்று, பின் கையைக் கட்டிக் கொண்டு) இன்றைக்கு இரவு அவளும், நாளைக் காலையில் தாங்களும் கள்ளிக்கோட்டைக்குப் புறப்படுவதாய் இருந்தீர்க ளாக்கும்? அடடா, சுகுமாரியைக் கல்கத்தாவில் தேடிக் கண்டு பிடித்தால் கூட, மனைவியாகத்தான் பார்க்க வேண்டியிருக்கும்!

ஜானகிராம் : (இரைந்து) நிறுத்து, கன்யா!

கன்யா : ஏன்? உறுத்துகிறதா? அவள்தான் சொல்லி விட்டுப் போனாள், அத்தான் ஒருவன் அவளை ரொம்ப நாளாய்க் காதலித்து வருவதாக.

ஜானகிராம் : கன்யா!

(கன்யா அமைதியாகத் தட்டிலிருந்து சப்பாத்தியை எடுத்து வந்து, இரண்டு கையாலும் பிடித்துக் கொண்டு அவன் கண் எதிரில் காட்டுகிறாள்.)

கன்யா : போகும்போது அந்த நல்ல பெண் 'எதற்கும் எச்சரிக்கையாயிருங்கள்' என்று எனக்குச் சொல்லிவிட்டுப்

போனாள். ஆகவே, இந்தச் சப்பாத்தி தயாரிக்கப்படுகிற முறைகளை அவ்வப்போது கவனித்துக் கொண்டுதான் இருந்தேன்.

ஜானகிராம் : கன்யா!

கன்யா : இந்தச் சப்பாத்தியை இப்போது என்ன பண்ணட்டும்? சாப்பிடட்டுமா?

ஜானகிராம் : கன்யா!

கன்யா : அல்லது பிய்த்துச் சாக்கடையில் எறியட்டுமா?

ஜானகிராம் : கன்யா!

கன்யா : அல்லது, ஸ்டீல் பீரோவில் பத்திரப்படுத்தி வைக்கட்டுமா, போலீஸ் வந்ததும் காட்டுவதற்கு?

(ஜானகிராமின் வெறித்த கண் முன்னால் சப்பாத்தி ஆடிக் கொண்டேயிருக்கிறது. அவன் அசைவற்று நிற்கிறான். அவளும் அசைவற்று நிற்கிறாள்.)

அரங்கத்தின் இரண்டாவது பகுதியில், அறை சுத்தமாகக் காலி செய்யப்பட்டு வெறிச்சிட்டிருக்கிறது.

ஆரம்பத்தைப் போலவே இரண்டு பகுதிகளும் ஒரே சமயத்தில் தெரிகின்றன, முழு வெளிச்சத்துடன், பிறகு திரை விழுகிறது.

★

# 14. தாகம்தான், ஆனால்...

அது எந்த ஊர் என்று சொல்லமாட்டேன். எந்தச் சிறை என்றும் சொல்லமாட்டேன். வம்பு சமாசாரம்.

அதைப் பார்வையிடுவதற்காகப் புறப்பட்ட பத்திரிகை நிருபர்கள் குழுவில், ஒன்பது பேரில் நானும் ஒருவனாக

இருந்தேன். இத்தனைக்கும, 'இன்வெஸ்டிகேடிவ் ஜர்னலிஸம்' என்கிறார்களே, அந்தத் திசையில் நான் தலை வைத்தும் படுப்பதில்லை. மியூஸிக் அகாடமியிலும் தமிழ் இசைச் சங்கத்திலும் நடைபெறுகிற கச்சேரிகளைக் கேட்டுவிட்டு எங்கள் இங்கிலீஷ் தினசரியில் நாலு பாரா எழுதுவேன். (அது கூட ஒரு தடவை, 'ஹம்ஸானந்தி' என்று எழுதுவதற்குப் பதில் 'ஹம்ஸநாதம்' என்று எழுதி விட்டு மாட்டிக் கொண்டது உண்டு.)

ஸிட்டியில் உள்ள எல்லாப் பத்திரிகைக்காரர்களுக்கும் என்னை நன்றாகத் தெரியும். பொறாமைப்படும்படி எந்தச் சாதனையும் நான் செய்தது கிடையாது. எந்த 'பிரஸ்மீட்'டுக்காவது உயர்ந்த ரக ஷர்ட்டும் பாண்ட்டுமாகப் போனால், நண்பர்கள் சட்டையைத் தொட்டுப் பார்த்து, 'என்னய்யா நாராயணன், மாமனார் உபயமா?' என்று பெருமூச்சு விடுவார்கள். 'ஆமாம்' என்று ஒப்புக் கொள்வேன். பெண்டாட்டியை மனம் குளிரும்படி வைத்துக்கொண்டால் எந்த மாமனாரிடமிருந்தும் எத்தனை வேண்டுமானாலும் கறக்கலாம் என்ற ரகசியம் இவர்களுக்கு ஏன் தெரியவில்லை என்று மனசுக்குள் ஆச்சரியப்பட்டுக் கொள்வேன்.

அப்படிப்பட்ட நான் இன்று இந்த ஒன்பது நிருபர்களுக்கும் ஹீரோவாகத் திகழ்ந்தது எப்படியென்றால், அந்தச் சிறையில் சுரங்கம் போடப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்து, ஜெயில் அதிகாரிக்குத் தெரியப்படுத்தியதுதான் காரணம்.

அது தற்செயலாகத்தான். ஒரு வாரம் முன்பு.

பத்திரிகைகளில் வேறு எதைப் படித்தாலும் படிக்காவிட்டாலும் ராசி பலன்களை நிச்சயமாகப் படித்துவிடுவது என் வழக்கம். கொஞ்ச நாளாக அத்தனை ஜோசிய எழுத்தாளர்களும் என்னைப் பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள்.



சென்ற சில வருடங்களாக ஜென்ம ராசியில் சனி இருந்தார் என்றும், அவர் இரண்டாம் இடமான மீனத்துக்குப் போனார் என்றும், மூலத் திரிகோணத்தில் பலம் பெற்றிருக்கிறார் என்றும், வக்ரம் கொண்டிருக்கிறார் என்றும் ஏதேதோ எழுதினார்கள். நான் பல பிரச்னைகளைச் சந்திக்க நேரிடும் என்றார்கள். திக்குமுக்காடுவேன் என்றார்கள். ப்ளான் போடுவதோடு சரி, எதுவும் நடக்காது என்றார்கள்.

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது உண்மை. பிரச்னை இல்லாதபோது பிரச்னை இருக்கிற மாதிரி தோன்றி என் ராத்திரித் தூக்கம் கெட்டுக் கொண்டிருந்தது.

நான் மூணாம் பேஸ்து வைத்தவன் மாதிரி (அப்படியென்றால் என்ன?) முழித்துக் கொண்டிருப்பது என் மாமனாருக்குத் தெரிந்துவிட்டது. ''ஒரு கார் அரேஞ்ச் பண்ணித் தருகிறேன். எல்லாரும் போய் சனீசுவரனுக்கு அர்ச்சனை செய்துவிட்டு வாருங்கள்'' என்றார்.

இந்த 'எல்லோரும் போய் வருகிற' சமாசாரம் என்றாலே எனக்கு எரிச்சல். ஓசியில் கார் போகிறது என்றால் தேவை இல்லாதவர்கள் எல்லாம் வந்து ஒட்டிக் கொள்வார்கள் என்பது மட்டுமல்ல; போகிற இடத்தில், வேகிற வெயிலில் வறுபட்டு, மெட்ராஸில் மூன்று ரூபாய்க்குக் கிடைக்கிற இளநீரை அங்கே பத்து ரூபாய்க்கு வாங்கி எல்லாருக்கும் விநியோகிக்க வேண்டும். அதிலும் சில ஓசி கிராக்கிகள் 'இளநீர் எனக்கு ஒப்புக் கொள்ளாது. கூல்ட்ரிங்க் வேண்டுமானால் சாப்பிடுகிறேன்' என்பார்கள்.

இதையெல்லாம் உத்தேசித்து, 'யாரும் வேண்டாம். நான் மட்டும் போய் வருகிறேன்' என்று சொல்லிவிட்டு, வழி விசாரித்துக்கொண்டு மோட்டார் பைக்கில் புறப்பட்டேன்.

ஸிட்டியிலிருந்து எழுபத்தெட்டாவது கிலோ மீட்டரில்
இருந்தது அந்தச் சிற்றூரும் கோயிலும். நாலு மணிக்குப் புறப்
பட்டவன், கோயிலை அடைந்து, அர்ச்சனைகள் முடித்து,
இருபத்தைந்து ரூபாய் தட்சணையும் முப்பது நிமிட நேரமும்
செலவழித்த பின்னர், இனிமேல் சனீசுவரர் நம்மைக் கோப
மாகப் பார்க்க மாட்டார் என்ற நிம்மதியுடன் ஊருக்குப் புறப்
பட்ட போது இருட்டிக் கொண்டிருந்தது.

'அடிக்கடி கியர் ப்ராப்ளம் கொடுக்கும் வண்டி இன்று
மக்கர் பண்ணவேயில்லையே என்று எண்ணிய அதே நேரம்
வேறொரு ப்ராப்ளம் ஏற்பட்டது. வீட்டுக்குப் போய்ப் பார்த்துக்
கொள்ளலாம் என்று முதலில் தோன்றினாலும், 'ஆத்திரத்தை
அடக்கினாலும் அதை அடக்கக்கூடாது' என்ற பொன்மொழி
நினைவுக்கு வந்தது. அகில இந்தியாவிலும் ஆண்களுக்கு இந்த
விஷயத்தில் லைசென்ஸ் வழங்கப்பட்டிருப்பதால், மோட் டார்
பைக்கை நிறுத்திவிட்டு, வயல் ஓரமாக நின்று நிவாரணம்
செய்து கொண்டேன். எதிரே வயல்வெளியைத் தாண்டி,
பெரிய சிறைச்சாலை தெரிந்தது. அதன் காம்பௌண்ட் சுவர்
எனக்கு முதுகைக் காட்டிக் கொண்டிருந்தது. சிறைச் சாலை
யின் வாசல் பக்கம் ஊருக்குள் இருந்தது. இது சிறையின் பின்புறம்.

கடைசியாக அங்கே எதற்கு வந்தோம் என்று ஞாபகப்
படுத்திக் கொள்ள முயன்றவாறு ஜிப்பை மேலே இழுத்து
விட்டுக் கொண்டு திரும்பும் சமயம் அதைக் கவனித்தேன்.

எனக்கு ஏற்பட்ட சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள வெளிச்
சம் போதவில்லை. ஒரு யோசனை தோன்றியது. நிறுத்தி
இருந்த இன்ஜினை ஸ்டார்ட் பண்ணி வண்டியை அந்தத்
திசையில் திருப்பி ஹெட்லைட்டைப் போட்டேன்.

துளியும் சந்தேகம் இல்லாமல் தெரிந்தது அது. சிறைச்
சாலையின் சுவரில் இருந்த பெரிய பொந்து – தரை மட்டத்



திலிருந்து மூன்றடி உயரத்தில் ஒரு ஆள் வெளியே வருவ
தற்குப் போதுமான அளவுக்கு இருந்தது. கொஞ்சம் குனிந்து
கொண்டே வர வேண்டும், அவ்வளவுதான்.

எனக்குப் படபடப்பு ஏற்பட்டது.

சிறையிலிருந்து தப்புவதற்கு வழி பண்ணியிருக்கிறார்
கள்! ஏற்கெனவே தப்பியாயிற்றா? அல்லது இனிமேல்தானா?
அல்லது சில பேர் தப்பி, சில பேர் பாக்கி இருக்கிறார்களா?

அந்தச் சிறையில் தீவிரவாதிகள் என்ற பெயரில் சில
பேர் வைக்கப்பட்டிருப்பது எனக்குத் தெரியும். இது போன்ற
வேறு சிறைகளிலிருந்து சிலர் தப்பியோடி விட்டதும், பத்திரிகை
களும் எதிர்க் கட்சிகளும் ஆரவாரம் எழுப்பியதும் எனக்கு
ஞாபகம் வந்தது.

மோட்டார் பைக்கைத் திருப்பி ஊருக்குள் நுழைந்து,
சிறை வாசலை அடைந்தேன். எனது பத்திரிகை தந்திருந்த அடை
யாள அட்டை எப்போதும் என் கைவசம் இருக்குமாகையால்,
வாசலில் அதைக் காட்டி, சுலபமாக அனுமதி பெற்றேன்.

ஐந்தாவது நிமிடம் ஜெயில் சூபரின்டெண்டெண்ட்
கோபண்ணாவின் முன்னே நின்றேன். சிகரெட்டைப் பற்ற
வைத்துக் கொண்டிருந்தவர், 'அடடே! என்ன சர்ப்ரைஸ்!'
என்று என்னை வரவேற்றார். வடசென்னையில் அவர் எஸ்.பி.
யாக இருந்த காலம் தொட்டு அவரை எனக்குத் தெரியும்.

நான் சாடை காட்டவே, அருகில் இருந்த போலீஸ்
காரரை வெளியே அனுப்பிவிட்டு 'என்ன விஷயம்?' என்றார்
கோபண்ணா கவலையுடன். என் முகத்தில் தென்பட்ட
பரபரப்பு அவருடைய சாவகாசத்தனத்தை விரட்டிவிட்டது.

ரொம்பச் சுருக்கமாக நான் சொன்னதுமே பரபரப்
படைந்தார். "எந்தப் பக்கம் பார்த்தீங்க? மெட்ராஸ் ரோடு

பக்கமா? அப்படியானால் வாங்க பார்த்துடலாம். நான் டெபுடி செக்ரெட்டரியிடம் முட்டிக்கிட்டேன். 'இந்த ரௌடிங்களை வேறெந்த ஜெயிலுக்காவது டிரான்ஸ்ஃபர் பண்ணுங்க'ன்னு யார் கேட்கிறாங்க?'' என்று புலம்பியபடி வேகமாய் நடந்தார். அவருடைய பதட்டத்தைக் கவனித்து இன்னும் சில ஜெயில் அதிகாரிகளும் அவரைப் பின்தொடர்ந்தார்கள். நானும்தான்.

ஒரு பெரிய, பழைய ஹாலை அடைந்தோம்.

பத்து இருபது 'கைதி'கள்தான் இருந்தார்கள். அவர்களைக் 'கைதி' என்று சொல்வது சட்டப்படி தப்பு. 'முகாமில் வைக்கப்பட்டுள்ள தீவிரவாதிகள்' என்பது அவர்களுடைய சிறப்புப் பெயர்.

இருபத்தைந்து வயதுக்கு மேல் முப்பது வயதுக்குள் இருக்கும். கட்டுமஸ்தாக இருந்தார்கள். பெரும்பாலும் குட்டையான அறிவுஜீவித் தாடி வைத்திருந்தார்கள். யாரும் கோபண்ணாவையோ மற்ற அதிகாரிகளையோ கண்டு எழுந்து நிற்கவில்லை. அவர்கள் பாட்டுக்கு ரொம்ப அலட்சியமாக இருந்தார்கள்.

சிலர் ஒற்றைக் காலை நீட்டித் தரையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். நிறைய 'ஸைட் டிஷ்'களுடன் பலமான சாப்பாடு. சிலர் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிலர் படுத்தபடி டிரான்ஸிஸ்டரில் நேயர் விருப்பம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சிலர் தினசரிகளும் வாராந்தரிகளும் படித்துக் கொண்டிருந்தார்கள். ஒருவர் ஃப்ரிஜ்ஜை திறந்து ஆப்பிள் பழத்தை எடுத்துக் கடித்தார்.

கோபண்ணா கிடுகிடுவென்று தலைகளை எண்ணினார். ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது அவரிடமிருந்து... நிம்மதிப் பெருமூச்சு. ''அப்பாடா! பதினேழு பேரும் இருக்கிறார்கள்!'' என்றார்.



ஹாலை அடுத்து ஒரு சிறிய அறை இருந்தது. அங்கே போனபோதுதான் தெரிந்தது - சுரங்கம் வெட்டியிருப்பது. அதன் பக்கமாக ஒரு பெரிய அண்டாவை - பாத்திரங்களை வைத்து, பள்ளம் தோண்டியிருப்பது தெரியாமல் மறைத்திருந்தார்கள். மூலையில் ஒரு பாயும் தலையணையும் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.

ஒரு போலீஸ்காரரைக் காவல் போட்டுவிட்டு வெளியே வந்த கோபண்ணா, ''என்னய்யா அக்கிரமம் பண்றீங்க? எஸ்கேப்புக்குச் சுரங்கம் தோண்டியிருக்கீங்க'' என்று அவர்களைப் பார்த்துக் கத்தினார்.

யாரும் எதுவும் பேசவில்லை. ஒரு பெரிய தாடி மட்டும் ''யாராச்சும் விளையாட்டுக்காச்சும் எதுனாச்சும் செஞ்சிருப்பாங்க'' என்றது. அவருடைய தமிழ் உச்சரிப்பில் அந்நிய வாடை வீசியது.

''விளையாட்டா? இதெல்லாம் விளையாட்டாய்யா உங்களுக்கு?'' என்று உறுமிய கோபண்ணா, ஒரு போலீஸ்காரரைத் திரும்ப அந்த அறைக்குள் அழைத்துச் சென்றார். ''உள்ளே இறங்கிப் பார்'' என்று கட்டளை இட்டார்.

அவர் ஒரு நிமிடம் தயங்கியபின் பள்ளத்துக்குள் இறங்கினார். சிறிது நேரம் காணோம். எனக்குக் கவலை ஏற்பட்டது. பிறகு திரும்பி வந்தவர், ''ஆமாம் சார். சுரங்கப் பாதை வெட்டியிருக்காங்க. அதன் வழியே வெளியே போனால் மெட்ராஸ் ரோடு வருது'' என்றார். அவர் உடம்பு பூரா மண்ணும் புழுதியும் ஒட்டியிருந்தது. வியர்வையை ஒற்றிக் கொண்டார்.

''எவ்வளவு நீளம் இருக்கிறது, சுரங்கப்பாதை?'' என்று கேட்டார் கோபண்ணா.

''எழுபத்தஞ்சுலேருந்து எண்பது அடிக்குள்ளாற இருக்கும் சார். போறப்பவும் திரும்பி வர்றப்பவும் உத்தேசமா கணக்கெடுத்தேன்'' என்றார் போலீஸ்காரர். மேலதிகாரி சொல்லாமலே தான் புத்திசாலித்தனமாக ஒரு காரியம் செய்தது குறித்து அவர் குரலில் பெருமை தெரிந்தது.

மறுபடியும் ஒருமுறை 'கைதி'களை முறைத்துப் பார்த்தார். ''சொல்ல மாட்டீங்க?'' என்றார், கொஞ்சமே கொஞ்சம் ஓங்கிய குரலில்.

''சொல்றதுக்கு ஒரு மண்ணும் இல்லை'' என்று ஒருவர் அலுப்புடன் சொன்னதும், கோபண்ணாவுக்கு ஏதோ ஞாபகம் வந்தது போலும். ஹாலுக்கு இன்னொருபுறம் ஒரு குட்டிச் சுவர் இருந்தது. அதை எட்டிப் பார்த்தார். நானும் பார்த்தேன்.

தோண்டிய மண். குப்பல் குப்பலாகப் போடாமல் பரப்பினாற்போல் சமன் செய்திருந்தார்கள்.

சுரங்க அறையில் பாயும் தலையணையும் இருந்தது நினைவுக்கு வந்ததால், ''அந்த ரூமில் படுத்துக் கொள்கிறவர் யார்?'' என்று கேட்டார் கோபண்ணா.

''என்னய்யா அர்த்தம் இல்லாம கேள்வி கேட்டுக்கிட்டு'' என்று எரிந்து விழுந்தார் ஒருவர். ''அந்த ஒரு ரூமிலே தான் ஃபேன் இருக்கு. இங்கே ஹாலுக்கு ஒண்ணு போடுங்கன்னு கரடியா கத்தறோம்; போட மாட்டேங்கறீங்க. கொலைக் கொசு இங்கே. எல்லோரும் அந்த ரூமிலே படுக்க முடியாது. அதனாலே தினம் ஒருத்தர்னு முறை போட்டு அங்கே படுத்துக்கிறோம். மத்தவங்க இங்கே வெளியே படுத்துக்கிறோம். நாங்க ரொம்ப டிஸிப்ளிண்டு க்ரூப் சார்!''

''அதான் நீங்க எண்பதடி தூரத்துக்குக் கமுக்கமா சுரங்கம் வெட்டியதிலேயே தெரியுதே!'' என்று சொல்லிவிட்டு கோபண்ணா



தன் அறைக்குத் திரும்பினார், கீழ் அதிகாரிகளுக்குச் சில கடுமையான கட்டளைகள் பிறப்பித்துவிட்டு.

போகிற வழியில் என் கையைப் பிடித்துக் கொண்டு, ''இதை அப்படியே அமுக்கிடலாம் நாராயணன். நான் ஜாக்கிரதையா இருக்கேன். நீங்களும் என் நெடுநாளைய நண்பர் என்கிற முறையிலே நியூஸ் வராம பார்த்துக்குங்க'' என்றார்.

''தர்மசங்கடமான ரிக்வெஸ்ட். என் எடிட்டர்கிட்டே கன்சல்ட் பண்றேன். சம்பளம் வாங்கற இடத்திலே துரோகம் பண்ணக் கூடாது பாருங்க'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு விட்டேன். கோபண்ணாவின் முகம் சுருங்கியது. சம்பளம் வாங்கும் இடத்துக்குத் துரோகம் செய்யக் கூடாது என்று நான் சொன்னது தனக்கும் சேர்த்துத்தான் என்பதை உணர்ந்து அவமானப்பட்டாரோ என்னவோ.

நான் வீடு திரும்பியபோது மணி நள்ளிரவு பன்னிரண்டைத் தாண்டி விட்டது. மறுநாள் காலைதான் என் எடிட்டரைச் சந்திக்க முடியும் என்ற எண்ணத்துடன் தூங்கியவன்...

காலையில் பேப்பர்களைப் பிரித்தால், எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது பரபரப்பாக. எப்படித் தெரிந்தது, யார் சொன்னார்கள் என்று தெரியவில்லை. ஜெயிலில் இருந்த சின்ன அதிகாரி யாரோ உள்ளூர் நிருபருக்குத் தெரிவித்திருக்க வேண்டும்.

ஜெயில் அதிகாரிகளே அந்தச் சுரங்கத்தைக் கண்டுபிடித்தார்கள் என்றும் கடைசி நிமிடத்தில் யாரும் தப்ப முடியாதபடி தடுத்து விட்டார்கள் என்றும் நியூஸ் போட்டிருந்தார்கள். (என் பெயர் வெளியிடவில்லையே என்று ஒரு பக்கம் வருத்தமாயும் ஒரு பக்கம் நிம்மதியாயும் இருந்தது.)

அடுத்த இரண்டு நாள் நாடெங்கிலும் ஒரே பரபரப்பு! எதிர்க்கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சிப் பத்திரிகைக்

காரர்கள் எல்லாருமே இரண்டு சந்தேகம் எழுப்பினார்கள். 1. சுரங்கம் தோண்டினார்கள்... ஆனால் யாரும் தப்பிச் செல்ல வில்லை என்பது நம்புகிற மாதிரி இல்லையே? 2. ஏன் அந்தச் சுரங்கப் பாதையைப் பத்திரிகைக்காரர்களுக்குக் காட்டவில்லை?

ஆகவே இன்று, ஒன்பது பத்திரிகைக்காரர்களைப் போலீஸ் வேனில் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

அந்த ஒன்பது பேரில் நானும் ஒருவன்.

சுரங்கப் பாதையைக் கண்டுபிடித்து ஜெயில் சூபரின் டெண்டெண்டுக்குத் தகவல் கொடுத்தவன் நான்தான் என்பது எப்படியோ எல்லோருக்கும் தெரிந்திருந்ததால் குடைந்து குடைந்து கேட்டபோது நானும் கெக்கே பிக்கே என்று ஒப்புக் கொள்ளும்படி நேரிட்டு விட்டது. 'பி.எம்.முக்கு எழுதி மெடல் வாங்கித் தருகிறோம்' என்று கேலியுடன் பாராட்டிக் கொண்டிருந்தார்கள் நண்பர்கள்.

டி.ஜி.பி. என்ன, கூடுதல் டி.ஜி.பி. என்ன, கலெக்டர் என்ன, எஸ்.பி.க்கள் என்ன, என்று ஒரு பெரிய பட்டாளம் சிறையில் எங்களுக்கு முன்னே கூடியிருந்தது. ஜெயில் சூபரின் டெண்டெண்ட் கோபண்ணா, என்னிடம் அன்று என்ன சொன்னாரோ அதையே இந்தப் போலீஸ் அதிகாரிகளும் சொன்னார். அன்று போலவே இன்றும் பாதைக்குள் ஒரு போலீஸ்காரர் புகுந்து வெளிவந்தார்.

பதினேழு பேர்தான் அந்த முகாமில் இருந்தார்கள் என் பதை அதிகாரிகளும் சொன்னார்கள். சிறப்பு 'விருந்தாளி'களும் ஒப்புக்கொண்டார்கள். அவர்களையே நாங்கள் நேரடியாகக் கேட்டோம். ''ஏன் உயிரை எடுக்கறீங்க? பதினேழு பேர்தான் ரெண்டு வருஷமா இருக்கிறோம். இப்பவும் இருக்கிறோம். ஒண்ணு ரெண்டு தெரிஞ்சா எண்ணிப் பாருங்க'' என்றார் ஒருவர்.



ஒரு எஸ்.பி. ஜெயிலில் வைத்திருந்த பைலை எடுத்து வந்து, ''உங்கள் பெயரை வாசிக்கிறேன். ஆஜர் சொல்லுங் கள். அப்போதுதான் இவர்களுக்குத் திருப்தி ஏற்படும். ப்ளீஸ் ... கோவாபரேட்'' என்று அவர்களைக் கெஞ்சாத குறையாகக் கேட்டுவிட்டு, 'விமல்ராஜ்!' என்று ஒரு பெயரைக் கூப் பிட்டார். 'இதோ' என்று கையை உயர்த்தினார் ஓர் இளம் தாடி. சுந்தர்குமார் என்றதும் இன்னொருவர் 'யெஸ்!' என்றார். இப்படியே பதினேழு பேரும் ஆஜர் கொடுத்தார்கள்.

எங்கள் குழுவில் இருந்த நிருபர் பரசுராம் மகா சந்தேகப் பேர்வழி. 'ஃபோட்டோக்களைக் காட்டுங்கள்' என்று கேட்டு, ஃபைலில் இருந்த ஒவ்வொரு போட்டோவையும் அவரவர் முகத்தருகே வைத்து வைத்துச் சரிபார்த்தார். இறுதியில் சரி தான் என்று நற்சான்றிதழ் வழங்கினார்.

சிங்காரம் என்கிற நிருபர் அந்த ஹாலின் வசதிகளை மறுபடி ஒருமுறை நோட்டம் விட்டார். மோவாயைச் சொறிந்து கொண்டு, ''இவ்வளவு வசதிகள் இங்கே கிடைக்கிறபோது எதற்காக இவர்கள் தப்பிச் செல்ல வேண்டும்? தேவையே இல்லை'' என்றார்.

ஜியாவுதீன் - கம்யூனிஸ்ட் அனுதாபமுள்ள நிருபர். ''வசதி இருந்துவிட்டால் போதுமா, சிங்காரம்! சுதந்திர தாகம் ஐயா, சுதந்திர தாகம்! ஆல்ஜியர்ஸுலே கலீமா என்று ஒரு பெண் கைதி இப்படித்தான்...''

அவரைப் பேசவிட்டால் நிறுத்துவது கடினம் என்று எங்களுக்குத் தெரியும். நல்லவேளையாக, ஆந்திர மாநில போலீஸைச் சேர்ந்த எஸ்.பி. அனந்து வந்து சேர்ந்து ஒரு சின்ன பரபரப்பு ஏற்படுத்தினார். அவரும் மற்ற அதிகாரி களும் ஐந்து நிமிடம் பேசிக் கொண்டிருந்தபோது, என்னைப்

பார்த்தார் அனந்து. ''ஹலோ நாராயணன், எப்படி இருக்கிங்க?'' என்று என் கையைக் குலுக்கினார்.

''நீர் வந்ததிலேயிருந்து நானும் கவனிச்சுட்டுத்தான் இருக்கிறேன்! இப்பவாவது அடையாளம் தெரிஞ்சுதே!'' என்று சிரித்தேன்.

அனந்து, பத்து வருடங்களுக்கு முன் ஒரு வாரப் பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருந்தார். நானும் அவரும் பக்கத்துப் பக்கத்து நாற்காலிகளில் சில காலம் வேலைபார்த்தோம். அவருடைய அத்லடிக் உடம்பைப் பார்த்து, ''நீர் போலீஸ் வேலைக்குப் போக வேண்டியவர். பத்திரிகைக்கு ஏன் வந்தீர்?'' என்று நான் கேட்பது வழக்கம். அதேபோல் கொஞ்ச நாளில் போலீஸ் வேலையில் சேர்ந்து விட்டார். எப்போதாவது நாங்கள் சந்திப்பது உண்டு.

''என்ன, எல்லாரும் கன்வின்ஸ் ஆகிவிட்டீர்களா?'' என்று அனந்து கேட்டார் எங்களைப் பார்த்து.

''ஓரளவு'' என்றோம்.

''நீங்கள் யாராவது சுரங்கப்பாதையில் இறங்கிப் பார்த்தீங்களா?' என்றார்.

இல்லையென்று தலையாட்டினோம். நிருபர் சிங்காரம், ''நாராயணன்தான் இங்கே ஹீரோ. அவர்தான் இறங்கிப் பார்க்கணும்'' என்றார்.

''ஐயோ, நான் புள்ளகுட்டிக்காரன். ரெண்டும் பொண்ணு. ஒண்ணு கல்யாணத்துக்கு நிக்குது! என்னால் முடியாது'' என்று முதலில் மறுத்தேன். ஆனால், அனந்துவைப் பார்த்தது முதல் என் மனசில் ஒரு பழைய நினைவு ஞாபகம் வந்ததால், ''சரி, பார்க்கிறேன்'' என்று சொல்லி, ஷர்ட்டைக் கழற்றி ஒரு



நண்பரிடம் கொடுத்துவிட்டு, பாண்ட் கால்களைச் சுருட்டிவிட்டுக் கொண்டு சுரங்கத்தில் இறங்கினேன். ஐந்து நிமிடம் கழித்து வெளியே வந்ததும் எல்லாரும் கைதட்டிச் சிரித்துப் பாராட்டினார்கள். ஐ.ஜி. கவலையுடன் என் முகத்தைப் பார்த்தார்.

''பாதை கொஞ்சம் வளைந்து வளைந்து போகிறது. ஆனால், அதிக சிரமம் இல்லாமல் போய் வரலாம். சில அடி தூரம் போனதுமே ஜில்லென்று காற்று வருகிறது'' என்று தெரிவித்தேன்.

பிஸ்கட், கூல்ட்ரிங்க், காபி முதலியவை வந்தன. அருந்திவிட்டு ஒவ்வொருவரும் விடைபெற்றார்கள். ''கரெக்டா ரிப்போர்ட் கொடுங்கள்'' என்று ஒவ்வொருவரிடமும் ஐ.ஜி. கேட்டுக் கொண்டார்.

பெரிய போலீஸ் அதிகாரிகள் புறப்பட்டார்கள். நிருபர்களை அழைத்து வந்த வேனும் கிளம்பத் தயாராயிற்று. ''வாங்க நாராயணன்'' என்று கூப்பிட்டார்கள்.

''மிஸ்டர் அனந்துவைப் பார்த்து ரொம்ப நாளாகிறது. கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அவருடன் வருகிறேன்'' என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்தேன்.

சூபரின்டெண்டெண்ட் கோபண்ணாவின் அறையை அடைந்தோம். மறுபடியும் டீ வந்தது.

''சுரங்கப்பாதையில் இறங்கறதுக்கு முதல்லே தயங்கியவன் பின்னே ஏன் இறங்கினேன்னு நீர் கேட்கவேயில்லையே?'' என்று அனந்துவைக் கேட்டேன்.

''இப்ப கேட்கிறேன். ஏன்?''

''நீர்தான் காரணம்'' என்றேன்.

''நானா? எப்படி?''

''நீரும் நானும் பக்கத்துப் பக்கத்து நாற்காலிகளில் உட்கார்ந்து வேலை பார்த்தோமே, நினைவிருக்கா?'' என்றேன்.

''சே! என்ன அருமையான நாட்கள்... மறக்க முடியுமா?'' என்றார்.

''எப்பவும் நீர் தமாஷாயும் பளிச்சுனும் பேசறவர்'' என்று நான் சொன்னதும் கூச்சத்துடன், ''அப்படியா?'' என்றார். போலீஸ்காரர் கூச்சத்துடன், முகம் சிவந்து யாரேனும் பார்த்திருக்கிறீர்களா...?

''அப்ப ஒருநாள், நான் ஏதோ கட்டுரை எழுதற யோசனையில், கையிலிருந்த ட்வைன் நூலை எடுத்து ஒரு முனையில் என் நாற்காலியின் கைக்கும் இன்னொரு முனையை உம்ம நாற்காலியின் கைக்கும் கட்டிக் கொண்டிருந்தேன். ஞாபகம் இருக்கா?''

''சரி?'' என்றார் அனந்து. அவருக்கு முழுசாய் ஞாபகம் வந்த மாதிரி தெரியவில்லை. கோபண்ணா எங்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''நீர் லஞ்ச்சுக்குப் போயிருந்தவர் திரும்பி வந்ததும் அந்த நூலைப் பார்த்துவிட்டு 'என்ன இது?'ன்னு கேட்டீர். 'உம்மோட புத்திசாலித்தனம் இந்த நூல் வழியா எனக்கும் கொஞ்சம் வரட்டுமேன்னு கட்டி வெச்சிருக்கேன்'னு நான் சொன்னேன். 'நாட்டி'யாய்ப் பதில் சொல்லிட்டோம்னு மனசுக்குள் பெருமைப் பட்டுக்கிட்டேன். ஆனால், நீர் உடனே, 'அது சரி... ஆனால், இது டூ வே சமாசாரம். உம்மோட மடத்தனம் அதே நூல் வழியா எனக்கு வந்திட்டதுன்னா என் கதி என்ன ஆகிறது?' ன்னீர். ரெண்டு பேரும் சிரிச்சோம். ஞாபகம் வர்றதா?''



''ஆமாமாம்... இத்தனை வருஷம் கழிச்சும் ஞாபகம் வெச்சிருக்கீரே?'' என்று அனந்து சிரித்தார்.

கோபண்ணா சிரிக்கவில்லை. ''அதனாலே?'' என்றார்.

நான் சொன்னேன்... ''அனந்து அன்னிக்குச் சொன்னது நினைவுக்கு வந்தது. இங்கிருக்கிறவங்க தப்பி வெளியே ஓட முயற்சி பண்ணினாங்கன்னுதான் எல்லாரும் பேசறோம். ஆனால் வெளியிலேருந்து உள்ளே வர்றதுக்காகவும் அந்தச் சுரங்கப்பாதை இருக்கலாம் இல்லையா?''

''வெளியே இருந்து உள்ளே எதுவும் வரத் தேவையில்லையே? எல்லாம்தான் கொடுக்கிறோமே?'' என்றார் கோபண்ணா.

''எல்லாமே சப்ளை பண்றதா சொல்றீங்க?''

''ஆமாம்... எல்லாமே.''

''அதை செக் பண்ணத்தான் சுரங்கப் பாதையிலே புகுந்து துழாவிப் பார்த்தேன்'' – பாண்ட் பாக்கெட்டில் கைவிட்டு அதை வெளியே எடுத்தேன். ''அவங்களோட இந்தத் தாகத்துக்கு நீங்க சப்ளை பண்ணலியே? ஆகவே தினம் தினம் அது வெளியே இருந்து வந்திட்டிருக்கு'' என்று சொல்லி, கையைப் பிரித்துக் காட்டினேன்.

இரண்டு கண்ணாடி வளையல் துண்டுகளும் கொஞ்சம் வாடிய பூச்சரமும் என் உள்ளங்கையில் இருந்தன.

அந்த அறைக்குள் ஒவ்வொரு ராத்திரி ஒவ்வொருவர் தங்குவது என்று முறை போட்டுக் கொண்டதன் அர்த்தம் எல்லாருக்கும் விளங்கிற்று.

★

# 15. நடு ஸ்டேஷனில்

ஒரு பெரிய நகரத்தின் ரயில்வே ஸ்டேஷன். ரயில் கிளம்பு கிற சமயம்.

இரவு மணி எட்டேகால்.

இரண்டாம் வகுப்புப் பெட்டியொன்றில், ஜன்னல் பக்க மாக, எதிர் எதிர் சீட்டுகளில் உட்கார்ந்திருக்கிறார்கள் ஒரு தாயும்



மகளும். தாய்க்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். நெற்றியும் கழுத்தும் வெறுமையாயிருக்கின்றன.

மகளுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். கண்கள் கலங்கிச் சிவந்து இருக்கின்றன. உதடுகள் இறுகியுள்ள விதம் அவளுடைய பிடிவாதத்தைக் காட்டுகிறது. நல்ல சந்தன நிறம்.

அம்மா : வசந்தி, எழுந்து போய் முகத்தைத் துடைச்சுக்கிட்டு வா. அழுதழுது கண் என்னமாய்ச் சிவந்திருக்கு!

வசந்தி : கவலைப்படாதே அம்மா, இனிமே அழ மாட்டேன்.

அம்மா : அதான் அறிவுள்ள பெண்ணுக்கு அழகு.

வசந்தி : இனிமேல் அழறதுக்குக் கண்ணீர் கிடையாது என்றேன்.

அம்மா : பார்த்தியா, பார்த்தியா! மறுபடி ஆரம்பிச்சிட்டியே!

வசந்தி : நேத்திக்கு என் சினேகிதி ஜானகி வந்திருந்தாள் திருச்சியிலேருந்து. அவளுக்கு விஷயம் தெரிஞ்சிருக்கு. அவளும் அதேதான் சொன்னாள்.

அம்மா : என்னன்னு?

வசந்தி : எனக்குப் பார்த்திருக்கிற பிள்ளை, பெருங்குடிகாரன், பெண் பித்துப் பிடிச்சு ஊர் சுற்றுகிறவன்னு...

அம்மா : பொறாமை பிடிச்சவங்க ஏதாவது சொல்லிட்டுத்தான் இருப்பாங்க. அவன் தங்கமான பிள்ளை. இல்லேன்னா, தானே எல்லாச் செலவும் பண்ணிக்கிறேன்னு சொல்வானா? நாம் இருக்கிற நிலையிலே இது எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் தெரியுமா?

வசந்தி : அடடா! என்ன அதிர்ஷ்டம், என்ன அதிர்ஷ்டம்! இதைக் காட்டிலும் எவனாவது ஒரு கொலைகாரன் கிட்டே கழுத்தை நீட்டலாம்.

அம்மா : ஒரு பேச்சுக்குக்கூட அப்படியெல்லாம் சொல்லக் கூடாதம்மா!

*(வசந்தி எழுந்து சென்று பாத்ரூம் கதவை இழுக்கிறாள். கதவு உள்ளே தாளிடப்பட்டிருக்கிறது.)*

வசந்தி : பிளாட்பாரத்துக்குப் போய் முகம் கழுவிட்டு வர்றேன்.

அம்மா : சீக்கிரம் வந்துடு.

(வசந்தி பிளாட்பாரத்தில் இறங்கி, பாத்ரூமுக்குப் போகிறாள். ரயிலுக்கு நேரமாகிவிடப் போகிறதே என்கிற அவசரத்துடன் உள்ளே நுழைகிறாள் - இல்லை, நுழையப் போகிறாள்.)

பின்னாலிருந்து ஒரு குரல்: மேடம், அது ஜென்ட்ஸ் பாத்ரூம்!

*(பல சிரிப்பொலிகள் கேட்கின்றன.)*

வசந்தி : சட்!

*(திரும்பிவிட நினைக்கிறாள். பாதி திறந்துவிட்ட கதவு வழியே உள்ளே ஒரு காட்சி தெரிகிறது. இமைக்கும் நேரம் தான். திகிலினால் அவள் இதயம் நின்றுவிட்ட மாதிரி இருக் கிறது. திரும்ப ரயிலை நோக்கி விரைகிறாள். தன் கம்பார்ட் மெண்ட்டைக் கண்டுபிடிப்பது கூட அவளுக்குப் பெரும் பிரயத்தனமாக இருக்கிறது. தடுமாறுகிறாள். 'வசந்தி! இங்கே இருக்கிறேன்!' என்று அம்மா குரல் கொடுத்த பிறகுதான் அடையாளம் கண்டுகொள்கிறாள். ஏறி, மூச்சு இரைக்க உட் காருகிறாள்.)*

அம்மா : என்ன வசந்தி; என்ன உனக்கு? போன இடத் திலே ஏதாவது அடி கிடி பட்டுதா?



வசந்தி : ஒண்ணும் இல்லேம்மா. *(கிசுகிசுக்கும் குரலில்)* தெரியாத்தனமாய் ஆண் பிள்ளைகள் பாத்ரூமில் நுழையப் போயிட்டேன்!

அம்மா *(சிரித்து)* : பாவம், அதனாலேதான் தடுமாறிப் போயிட்டியா?

வசந்தி : (கைக்கடியாரத்தைப் பார்த்து) புறப்பட வேண் டிய நேரத்துக்கு மேலேயே அஞ்சு நிமிஷம் ஆயிட்டுதே? சீக்கிரம் கிளம்பிட்டால் தேவலை.

*(வண்டி நகருகிறது. ஓடும் ரயிலில் ஓர் ஆள் தொற்றிக் கொண்டு உள்ளே ஏறுகிறான். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு வசந்திக்கு எதிரிலிருந்து இடத்தில் அமர்கிறான். அம்மா சற்று நகர்ந்து கொள்கிறாள்.)*

அவன் : விடமாட்டேங்கறாங்க! பிய்ச்சுக்கிட்டு வர்றதுக் குள்ளே போதும் போதும்னு ஆயிட்டுது.

ஒரு பிரயாணி : யாருங்க?

அவன் : என் மதருங்க - என் அம்மா. 'வெளியூரிலே போய்ச் சம்பாதிக்க வேண்டாம், உள்ளூரிலே என்னோடேயே இரு'ங்கிறாங்க. என்னைக் கட்டிக் பிடிச்சுக்கிட்டு அம்மா அழ றதைப் பார்த்துப் பிளாட்பாரத்திலே எல்லாரும் சிரிக்கிறாங்க.

வசந்தியின் அம்மா : வயது என்ன ஆனால் என்ன? ஒரு தாய்க்கு எப்பவும் பிள்ளை பிள்ளைதான்.

அவன் (கனிவாக) : புரியுது அம்மா. ஆனால் நான் இருக் கிறது தண்ணியில்லாக் காடு. வயசான காலத்திலே அவங் களை அழைச்சுக்கிட்டுப் போய்த் திண்டாட வைக்கலாமா? நினைக்கவே கஷ்டமாயிருக்குங்களே?

(அனைவரும் அவனையும் அவனுடைய தாய்ப் பாசத்தையும் எண்ணி மனம் நெகிழ்கிறார்கள்.)

அவன் : என்ன புழுக்கம்! துளிகூடக் காத்து இல்லையே! (சட்டையைக் கழற்றி, ஒரு பந்தாகச் சுருட்டி, கையில்இருந்த துணிப் பைக்குள் அடைத்துக் கொள்கிறான். 'டிக்கெட் ப்ளீஸ்' என்று கேட்டுக் கொண்டே வருகிறார் டிக்கெட் பரிசோதகர்.)

அவன் : (டிக்கெட்டை எடுத்து டிக்கெட் பரிசோதகரிடம் நீட்டியபடி) என்ன சார், கையிலே காயம்? விரலிலே கட்டுப் போட்டிருக்கீங்களே?

டி. பரிசோதகர் : இதுவா? கதவை ஓங்கிச் சாத்தினேன், பாருங்க. கட்டை விரலில் சரியான அடி. கருரத்தம் கட்டிப் போச்சு. சட்டுனு கர்சிப்பை நனைச்சு ஒரு சுத்துச் சுத்தி வைச்சேன்.

அவன் : நல்ல காரியம் செஞ்சீங்க. எதுக்கும் அடுத்த ஜங்ஷனிலே ஃபஸ்ட் எய்டா ஏதாவது போட்டுக்குங்க. செப்டிக் ஆயிடப் போவுது.

(பரிசோதகர் அவன் அனுதாபத்துக்கு நன்றி தெரிவித்தவராக டிக்கெட்டைத் திருப்பித் தந்துவிட்டு நகருகிறார். வசந்தி எழுந்திருக்கிறாள்.)

அம்மா : ஏம்மா வசந்தி? என்ன வேணும்?

வசந்தி : ஒண்ணுமில்லேம்மா...

அம்மா : என்ன?

வசந்தி : அதில்லேம்மா... தூக்கம் தூக்கமாய் வருகிறது. போய் முகம் கழுவிக்கிட்டு வர்றேன்.

அவன் : தூக்கம் வந்தால் தூங்கிடுங்க அம்மா. இப்படி சீட்டுக்கு நடுவிலே பெட்ஷீட் போட்டுப் படுக்கலாமே. நான் வேணா காலை நகர்த்திக்கிறேன்.



வசந்தி : வேண்டாம்.. உங்களுக்கேன் சிரமம்?

(பாத்ரூமுக்குப் போய் முகத்தைக் கழுவிக்கொண்டு திரும்புகிறாள் வசந்தி. அவன் தனது பையிலிருந்து எதையோ எடுப்பது தெரிகிறது.)

அவன் : (ஓர் ஆரஞ்சுப் பழத்தையெடுத்து உரித்து, சற்றுத் தள்ளி இருக்கும் ஒரு குழந்தையிடம் ஒரு சுளை நீட்டி) இந்தா பாப்பா! உனக்கு ஒரு சுளை! (குழந்தை கூச்சத்துடன் நெளிகிறது. குழந்தையின் தந்தை அதை அவனை நோக்கி நகர்த்துகிறார்.)

தந்தை : வாங்கிக்க சுசீ! மாமாதானே தர்றார்? நல்ல மாமா! (குழந்தை சுளையை வாங்கிக் கொள்கிறது.)

தந்தை : தாங்க்ஸ் சொல்லணும்மா.

குழந்தை : தாங்க்ஸ் மாமா.

அவன் : (இன்னொரு கையில் இன்னொரு சுளை தந்தபடி) இரண்டு தாங்கஸ் சொல்லணுமாக்கும்!

(எல்லாரும் சிரிக்கிறார்கள். வசந்தி தனது பழைய இடத்தில் வந்து உட்கார்ந்து கொள்கிறாள். அவள் முகம் வெளிறியிருக்கிறது. வண்டி தடக்தடக்கென்று ஓடிக் கொண்டிருக்கிறது. காரிருள் தேய்ந்து வானம் சாம்பல் நிறத்தை அடைகிறது. பிரயாணிகள் ஒவ்வொரு போஸில் நித்திரை வசப்பட்டிருக்கிறார்கள்.)

அம்மா : (முடங்கிக் கிடந்தவள் எழுந்து உட்கார்ந்து) கொஞ்ச நேரத்தில் திருச்சி வந்துவிடும். இல்லியா? (பக்கத்தில் விழித்தபடியே இருக்கும் அவனைப் பார்த்து) பாவம், நீங்க கொஞ்சம்கூடக் கண்ணைக் கொட்டலியே?

அவன் : ரயிலில் எனக்குத் தூக்கமே வராது, அம்மா. அத்தோட கூட, ஒருத்தராவது முழிச்சுக்கிட்டு இருக்கிறது நல்லதுதானே? எவனும் எதுவும் கிளப்பிட்டுப் போயிடாத படி பார்த்துக்கலாம், பாருங்க.

அம்மா : உங்களைப் போலப் பிறத்தியாரைப் பத்தி நினைக்கிறவங்க உலகத்திலே ரொம்பக் கம்மி. வசந்தி! கொஞ்சம் தண்ணி எடுத்துக் கொடேன். (அவன் பக்கம் திரும்பி) உங்களுக்கு வேணுமா?

அவன் : கொடுங்களேன், தாகமாய்த்தான் இருக்கு.

*(வசந்தி வேண்டா வெறுப்பாய் சீட்டுக்கடியில் கூஜாவைத் தேடுகிறாள்.)*

அம்மா : என்ன வசந்தி, கூஜா கிடைக்கல்லே?

வசந்தி : இதோம்மா. (எழுந்திருக்கும் சமயம், சீட்டுக்கு அடியில் அவனது துணிப் பையில் துருத்தியுள்ள சட்டை நுனி ரத்தக் கறையோடு தெரிகிறது. அவள் உடம்பு நடுங்குகிறது. எழுந்துகொண்டு டம்ளரை நீட்டுகிறாள் அவனிடம்.)

அம்மா : என்னம்மா வசந்தி, என்ன உனக்கு?

வசந்தி : ஏன்... என்ன... ஒண்ணுமில்லியே?

அம்மா : கையெல்லாம் இப்படி நடுங்குகிறதே?

அவன் : அடடே! நரம்புத் தளர்ச்சியாயிருக்கும்.

அம்மா : அதெல்லாம் ஒண்ணுமில்லை. ராத்திரி வண்டி கிளம்பற சமயம் இவ இறங்கிப் போனாள். பிறகு திரும்பி வர்றப்போ...

வசந்தி (ரகசியமாய்) : அம்மா! நீ சும்மா இருக்க மாட்டே? எனக்கு ஒண்ணுமில்லே! ஒண்ணுமில்லே!



அம்மா : ஏன்தான் இப்படி மிரண்டு போனவள் மாதிரி கத்தறாளோ! அங்கே ஆண்பிள்ளைகளின் பாத்ரூமில் நுழையப் போயிட்டாளாம். அங்கே என்னத்தைப் பார்த்தாளோ...

வசந்தி : (சரேலென அம்மாவின் வாயைப் பொத்தி) இவன்... இந்த ஆள்... இவன்... இல்லை... எதையுமே பார்க் கல்லே நான்...

*(ஒரு வினாடிக்குள் அவன் எல்லாவற்றையும் ஊகித்து விடுகிறான். சரேலென்று கத்தியை இடுப்பிலிருந்து உருவி, வசந்தியைத் தன் பக்கம் இழுத்து, அருகில் உட்கார்த்திக் கொள்கிறான். அவனுடைய கத்தியின் முனை வசந்தியின் முதுகைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. எல்லாப் பிரயாணி களும் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள்.)*

அவன் : (தாழ்ந்த குரலில்) ஏய் கிழவி! அங்குலம் கூட நகராதே! நகர்ந்தியோ... உன் பெண்ணோட ஆயுசு அவ்வளவு தான்.

அம்மா : ஐயய்யோ! என்னப்பா இது... வசந்தி... எனக்கு ஒண்ணும் புரியலியே...

அவன் : இன்னும் வேறே விளக்கிச் சொல்லணுமா? ஸ்டேஷன் பாத்ரூமிலே நான் ஒருத்தனை... (கழுத்தைச் சீவுகிற மாதிரி சாடைகாட்டி) அதை உன் மகள், பார்த்திருக் கிறாள்! யாரும் பார்க்கலேன்னு நினைச்சிட்டிருந்தேன்.

அம்மா : அப்பா! உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேன். இவளை விட்டுடு. வாழப் போற பொண்ணு.

அவன் : அடாடாடா! நான் மட்டும் இவள் வாழ வேண் டாம்னா சொல்றேன்? முதல்லே நான் வாழ வழி பார்த்துக் கிட்டு, பிறகு இவளை விட்டுடறேன்.

வசந்தி : அப்போ பிடிச்சு நான் இவனைப் பார்த்து நடுங்கிக்கிட்டிருக்கேன், அம்மா... கத்தாதே! யாராவது எழுந்தாங்கன்னா, இவன் என்ன பண்ணி விடுவானோ!

அம்மா : ராத்திரி பூரா நீ எல்லார்கிட்டேயும் ரொம்ப நல்லதனமா பேசிட்டிருந்தியே? உன்னை ரொம்ப நல்லவன்னு நினைச்சேனே...

அவன் : நீ நினைச்சதிலே ஒண்ணும் தப்பில்லேம்மா... நான் நல்லவன்தான். அவுங்கவுங்க வாழ்க்கையில் குறுக்கிடறவங்களைச் சமாளிக்கச் சில பேர் புத்தியை உபயோகிப்பாங்க. சில பேர் கத்தியை உபயோகிப்பாங்க. எனக்குப் புத்தி அவ்வளவாகக் கிடையாது. அதனால் இப்படி நேர்ந்து போச்சு. மத்தப்படி நான் நல்லவன்தான். நம்புங்க, பெரியம்மா!

அம்மா : நம்பறேம்பா, நம்பறேன். என் குழந்தையை விட்டுடு. பதிலுக்கு என்னை வேண்டுமானாலும் தூக்கிட்டுப் போ.

அவன் : (சிரித்து) ஸாரி, பெரியம்மா. வயசுப் பெண்ணை இப்படிக் கவசம் போல் வச்சுக்கிட்டாதான், இவளுக்கு ஏதாவது நேர்ந்துடப் போகுதேன்னு என்னை விட்டுடுவாங்க. உன்னைப் போய்ப் பிடிச்சுக்கிட்டால் என்ன ஆகும்? கிழவி தானே, செத்தால் சாகட்டும்னு என் மேலே பாய்ஞ்சிடுவாங்க!

அம்மா : இப்போ என்ன பண்ணப் போறே?

(வண்டியின் வேகம் குறைகிறது.)

அவன் : நல்லவேளை, அவுட்டரிலேயே வண்டியை நிறுத்துவான் போலிருக்கு... இங்கேயே குதிச்சிடலாம். எழுந்திரும்மா.

(வசந்தியின் முதுகில் கத்தியை நெருடுகிறான். அவள் எழுந்து கொள்கிறாள்.)



அம்மா : வசந்தி!

வசந்தி : ஐயோ அம்மா! எனக்குப் பயமா இருக்கம்மா?

அம்மா : ஏம்பா, கொஞ்ச தூரம் நீ தப்பிச்சுப் போறதுக்குத் தானே இவளைப் பிடிச்சுக்கிறே? அப்புறம் விட்டுடுவியோ இல்லையோ!

(அவன் வசந்தியை ஏற இறங்கப் பார்க்கிறான். குரூரமான புன்னகையொன்று அவன் உதட்டில் படருகிறது.)

அம்மா : சொல்லுப்பா! சொல்லு! விட்டுடுவாய் இல்லையா?

(வண்டி நிற்கிறது. அவன் பதிலொன்றும் பேசாமல் வசந்தியுடன் வெளியே இருட்டில் குதிக்கிறான். அம்மாக்காரி அலறுகிறாள். அவள் அலறலைக் கேட்டுப் பல பிரயாணிகள் தூக்கம் கலைந்து எழுகிறார்கள். ஜன்னலுக்கு வெளியே ஹோ வென்ற இருள்தான் தெரிகிறது.)

★

# 16. சாக்லெட் டப்பா

"ரொம்ப சந்தோஷம் சாகேப்! இது போல் பிறந்த நாட்கள் இன்னும் நூறு வரவேண்டும்" என்று வாழ்த்தி மாலை யிட்டார் ஒருவர்.

"நன்றி, நன்றி. சாக்லெட் எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார் கிஷன்சந்த் மூல்தானி. அவருடைய பார்வையும் எண்ணமும்



விருந்தாளிகள் வரிசையின் கடைசியில் நிற்கும் பல்தேவ் சிந்தியாவிடமே சென்று கொண்டிருந்தது.

ஏறத்தாழ நூற்றைம்பது வருட காலமாக இருவருடைய குடும்பமும் எதிரியாக இருந்து வருகின்றன. எதிரியென்றால் சும்மா பேச்சு வார்த்தை இல்லாத, கண்டால் முகத்தைத் தூக்கிக் கொண்டு போகிற, சாதாரண எதிரி அல்ல. வெட்டுப் பழி... குத்துப் பழி.

இந்தக் குடும்பத்திலிருந்து ஒருத்தர் அந்தக் குடும்பத்தி லுள்ள ஒருத்தரை... பிறகு அங்கிருந்து ஒருவர் இங்குள்ள ஒரு வரை...

நேரடியாகவோ, ஆள் வைத்தோ கொலை செய்து வந்திருக்கிறார்கள். பழிக்குப் பழி... ரத்தத்துக்கு ரத்தம்! அது தான் மூல்தானிகளுக்கும் சிந்தியாக்களுக்கும் தெரிந்த ஒரே மந்திரம்.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில், கிஷன்சந்த் மூல் தானியின் முன்னோர் ஒருவர் ஒட்டக வியாபாரியாக இருந் தார். தர்பங்கா சமஸ்தானத்தில் திவானாக இருந்த ஒரு வெள்ளைக் காரருக்கு அவர் ஏழு ஒட்டகங்கள் விற்றாராம். அதில் ஒன்று நோய் பிடித்த கிழட்டு ஒட்டகமாக இருந்து, ஒரு வாரத்துக்குள் இறந்துவிட்டது. அப்போது, போட்டி வியாபாரியாக இருந்த பல்தேவ் சிந்தியாவின் மூதாதை ஒருவர் வெள்ளைக்காரனை நன்றாக முடுக்கி விட்டுவிட்டாராம்... மூல்தானி வேண்டு மென்றே ஏமாற்றி விட்டார் என்று. திவான் கோபத்தில் கொதித்தெழுந்தார். மூல்தானியை இழுத்து வரச் சொல்லி, தர்பங்கா நகர மார்க்கெட் நடுவில் கட்டி வைத்து, சவுக்கால் விளாசு விளாசென்று விளாசி விட்டார்.

அடியை வாங்கிக் கொண்ட மூல்தானி ஒரு மாதகாலம் பொறுமையாக இருந்தார். பிறகு ஒருநாள் அந்த சிந்தியா தன்

பெண்ணின் கல்யாணத்துக்காகப் பண்டங்கள் வாங்குவதற்குப் பரோடா சென்று கொண்டிருந்த போது, வழிமறித்து, ஸாரட்டோடு ஸாரட்டாகக் குத்திக் கொலை செய்துவிட்டார்.

அந்தப் பெண்ணின் கல்யாணம் நின்றுபோனது, குடும்பத்துக்கே அவமானமாகி, பல வருஷங்கள் கழித்து ஒரு சிந்தியாக்காரன் ஒரு மூல்தானி பெண்ணை அதன் திருமண நாளன்று மாலையும் கழுத்துமாக வைத்தே கொலை செய்தான். அதன் பிறகு இரண்டு குடும்பமும் இரண்டு வெவ்வேறு தொழில்களில் பிரவேசித்து, கொடி கட்டிப் பறந்த போதிலும் பரம்பரைப் பழிவாங்கல்கள் மட்டும் நிற்கவேயில்லை.

அதற்குக் கிஷன்சந்த் மூல்தானி மட்டும் விதிவிலக்காக இருக்க முடியுமா என்ன? தொழிலிலும் வயதிலும் இவருக்குச் சரியான போட்டியாக பல்தேவ் சிந்தியா முளைத்து வளர்ந்திருந்தார். இரண்டு வருஷம் முன்பு கிஷன்சந்த் மூல்தானியின் வயதான தாய் தல யாத்திரை சென்றிருந்த போது சிந்தியாவின் ஆள் ஒருவன் பின்னாடியே வந்து இடையூறுகள் செய்து கொண்டிருந்தான் என்று வேறே கேள்விப்பட்டிருந்தார். பல்தேவைப் பார்க்க வேண்டியதுதான்... தீர்க்க வேண்டியதுதான் என்று கறுவிக் கொண்டிருந்த சமயம்...

மகாவீர் மடத்து சுவாமிஜி அவர்கள் ஊருக்கு வந்தார். கிஷன்சந்த் மூல்தானி ஒரு கார் நிறையப் பழங்களும் பூக்களும் பூஜைக்கான சாமக்கிரியைகளும் எடுத்துப் போய்ச் சமர்ப்பித்து, சுவாமிஜியின் முன்னே விழுந்து வணங்கினார்.

''உன்னைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்ற சுவாமிஜி, சுற்றிலும் இருந்தவர்களுக்குக் கண் சாடை காட்டினார். எல்லாரும் அகன்றுவிட்டார்கள்.

''எனக்கு இத்தனை மரியாதைகள் செய்வதைக் காட்டிலும், நீ நல்லவனாக - இரக்கமுள்ளவனாக - வாழ்ந்தால் அதுதான் எனக்குச் சந்தோஷம்'' என்றார் சுவாமிஜி.



கிஷன்சந்த் மூல்தானி திகைத்தார். ''நான்... நான்... கூடுமானவரையில் நல்லவனாகத்தானே வாழ்கிறேன் சுவாமிஜி?''

''அது போதாது'' என்று திடமான குரலில் கூறினார் சுவாமிஜி. ''உன் குடும்பத்துக்கும் சிந்தியா குடும்பத்துக்கும் பரம்பரை பரம்பரையாக இருந்துவரும் பகைமை எனக்குத் தெரியும். பல்தேவ் சிந்தியாவைப் பழிவாங்க நீ காத்துக் கொண்டிருக்கிறாய்? உண்டா இல்லையா?''

கிஷன்சந்த் மூல்தானி தலை குனிந்தார்.

சுவாமிஜி சொன்னார் - ''இந்தக் கொலைகளும் பழி தீர்த்தல்களும் சங்கிலித் தொடர் மாதிரி வந்து கொண்டிருக்கின்றன. அந்தச் சங்கிலியை ஒரே ஓர் இடத்தில் வெட்டி விட்டால் போதும். வம்சப் பகைமை அத்தோடு நின்று விடும். அது உன் கையில்தான் இருக்கிறது.''

''நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள், சுவாமிஜி?''

''எதுவும் செய்யாமல் இரு என்கிறேன். பழி வாங்கும் எண்ணத்தை நீ விட்டுவிடு. உன்னைப் பொறுத்தமட்டில் உன் கைகளைக் கட்டிக் கொண்டு விடு. பரம்பரைச் சண்டையை நிறுத்திய பெருமை உன்னுடையதாக இருக்கட்டும். அதன் பிறகு சிந்தியா குடும்பத்திலிருந்து எவரும் சண்டைக்கு வர மாட்டார்கள்.''

கிஷன்சந்த் மூல்தானிக்கு அந்த உபதேசம் நெருப்பை விழுங்குகிற மாதிரி இருந்தது. ''உலகம் என்னைக் கோழை என்று சொல்லுமே சுவாமிஜி!''

''இல்லை. தற்காலிகமாக அப்படித் தோன்றினாலும் எதிர்காலத்தில் இரண்டு சந்ததியாரும் உன்னைப் புகழ்வார்கள். சொல்லு. பல்தேவ் சிந்தியாவைப் பழி வாங்கச் செல்வதில்லை என்று சொல்லு.''

மிகுந்த தயக்கத்துடன், ''ஆகட்டும் சுவாமிஜி'' என்றார் கிஷன்சந்த் மூல்தானி.

''நான் பல்தேவ் சிந்தியாவிடமும் சொல்லி வைக்கிறேன்... அவன் பழைய பகைமையெல்லாம் மறந்துவிட வேண்டுமென்று'' என்றார் சுவாமிஜி.

இன்று அத்தனையும் ஞாபகம் வந்தது கிஷன்சந்த் மூல்தானிக்கு. அவருடைய பிறந்த நாளுக்கு வாழ்த்துச் சொல்ல பலர் வந்திருந்தார்கள். ஒவ்வொருவரிடமும் சென்று சாக்லெட் வழங்கினார் அவர்.

''வாழ்த்துக்கள், சேட்ஜி.''

''நன்றி. சாக்லெட் எடுத்துக் கொள்ளுங்கள்.''

''வாழ்த்துக்கள் மிஸ்டர் கிஷன்சந்த்.''

''நன்றி. சாக்லெட் எடுத்துக் கொள்ளுங்கள்.''

இதோ பல்தேவ் சிந்தியாவையும் அடைந்தாகி விட்டது. கடைசிப் பிரயத்தனமாகத் தன் பகைமையுணர்ச்சியை அடக்கிக் கொண்டார் கிஷன்சந்த் மூல்தானி. சுவாமிஜி சொன்னதெல்லாம் ஞாபகப்படுத்திக் கொண்டார். ஒன்றரை நூற்றாண்டாக வந்து கொண்டிருக்கும் பகைமை இன்றோடு தொலையட்டும் என்று கடவுளை வேண்டிக் கொண்டார். பல்தேவ் சிந்தியாவின் முகத்தையே பார்த்துக் கொண்டு அவர் எதிரில் போய் நின்றார்.

''வாழ்த்துக்கள் கிஷன்'' என்றார் பல்தேவ் சிந்தியா.

''நன்றி. சாக்லெட் எடுத்துக் கொள்ளுங்கள்'' – டப்பாவை நீட்டினார் கிஷன்சந்த்.

கண்ணிமைக்கும் நேரம் மயான அமைதி.



திடீரென்று யாரோ களுக்கென்று சிரிக்கும் சத்தம்.

''கிஷன்! என்னையா அவமானப்படுத்துகிறாய்?'' என்று பல்தேவ் சிந்தியாவின் உறுமல்.

மறுவினாடி, அவர் தன் இடுப்பிலிருந்து கைத்துப்பாக்கியை உருவி வெளியெடுத்தார். ''இந்தா கிஷன்! இவ்வளவு பேர் நடுவில் என்னை அவமானப்படுத்தியதற்கு உனக்குப் பிறந்த நாள் பரிசு!''

...டுமிலென்று உறுமியது துப்பாக்கி.

சுருண்டு விழுந்தார் ரத்த வெள்ளத்தில் கிஷன்சந்த் மூல்தானி.

''உன்னை... அவமானப்... படுத்தினேனா!''

''ஆமாம்! எல்லாருக்கும் சாக்லெட் வழங்கி விட்டு எனக்கு மட்டும் காலி டப்பாவைக் கொண்டு வந்து நீட்டினாயே! அத்தனை பேரும் ஏன் சிரித்தார்கள் பின்னே?''

''நான்... நான்...'' கிஷன்சந்த் மூல்தானிக்குக் கண் இருண்டு கொண்டு வந்தது. 'நான் உன்னையே பார்த்தபடி – உன்னைப் பற்றியே நினைத்தபடி – வந்தேன். டப்பாவில் சாக்லெட் தீர்ந்து போனதைக் கவனிக்கவில்லை...' என்று சொல்ல நினைத்தார். அதற்குள் அவருக்கு மூச்சு நின்று விட்டது.

★

# 17. வௌவால்

முதலில் ஒரு வௌவால் தான் வந்து உட்கார்ந்தது. பிறகு இரண்டாவது வந்தது. இருட்டு அதிகமாக ஆக மூன்று நான்கு வந்தன.

அவன் அந்தப் பாழ்மண்டபத்தின் ஒரு கருங்கல் தூணில் சாய்ந்து கொண்டு இன்னொரு தூணை உதைத்தாற் போல் உட்



கார்ந்திருந்தான். சாய்ந்திருந்த தூணிலிருந்த சிற்ப அழகி கையில் ஒரு யாழ் பிடித்திருந்தாள். அந்த யாழின் குடம் அவன் முதுகை உறுத்தியது.

தன் எதிரே தொற்றிக் கொண்டிருக்கும் வௌவாலை அவன் கோபமாகப் பார்த்தான். அது தனது சுருங்கிய இறக் கைகளை மேலும் சுருக்கிக் கொண்டு தலைகீழாகத் தொங்கிய படி அவன் கோபத்தை லட்சியம் செய்யாமல் சிரித்தது.

''சீ போ சனியன்களா!'' என்று அவன் கையை வீசி விரட்டினான். அந்த இரண்டு மூன்றும் விருட்டென்று பறந்து, விர்ரென்று ஒரு நிமிடம் சுற்றிய பின்பு பழையபடி அதே இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டன. ஏதோ தியேட்டரில் கைக்குட்டையைப் போட்டு விட்டுப் போய் சிகரெட் பிடித்து விட்டுத் திரும்பி வந்து இருக்கையில் உட்காருவார்களே அதே போல, கச்சிதமாய் அதே புள்ளியில் திரும்பி அமர்ந்தன.

அவன் ரொம்பக் கோபமாக இருந்தான். கோபத்தினால் தான் வீடும் வேண்டாம்; குடும்பமும் வேண்டாம் என்று புறப்பட்டு வந்துவிட்டான்.

இருட்டு அதிகரித்துக் கொண்டிருந்தது. இப்போது கருந் தூண்களின் வெளி விளிம்புதான் தெரிந்தனவே தவிர, நடுவி லிருந்த கின்னர கிம்புருடர்களும் குறும்புக்காரப் பிள்ளைகள் தொட்டுத் தொட்டு மழுமழப்பாக்கியிருந்த அப்சரஸ்களும் இருளில் கலந்து மசமசவென்று ஆகிவிட்டார்கள்.

''சீ போ!'' என்று மறுபடியும் அவன் எதிரிலிருந்த வௌவாலைத் துரத்தினான்.

இந்தத் தடவை அதுவும் சரி, அதன் தோழர்களும் சரி, பறக்கவில்லை. மாறாக, அப்படியே உட்கார்ந்திருந்தன. ஒரு வௌவால் கரகரப்பான தொண்டையில் சிரித்து, ''நாங்க ஏன்

போகணும்? நீதான் எங்க இடத்துக்கு வந்து உட்கார்ந்திருக் கிறே! நீதான் எழுந்து போகணும்'' என்றது.

வௌவால் பேசுமென்று அவனுக்கு இதுவரை தெரியாது. ஆகவே முதலில் மிக ஆச்சரியமாயிருந்தது. பிறகு வேடிக்கை ஏற்பட்டது. காலையிலிருந்து யாரோடும் பேசாமலே நாளை ஓட்டியிருந்ததால் இப்போது ஒரு பேச்சுத் துணை கிடைத்தது பற்றி ஆறுதலாகக் கூட இருந்தது.

''நான் வீட்டையும் குடும்பத்தையும் வெறுத்து வந்திருக்கிறேன்'' என்றான்.

''த்சு த்சு...'' என்றது ஒரு வௌவால். அது ரொம்பத் திமிர் பிடித்த கிழ வௌவாலாக இருக்க வேண்டும். குரலில் கேலி தெரிந்தது. அதன் பெண்டாட்டி போல் இருந்த இன்னொரு கிழம், ''நீ கம்முனு இரு. அவன் சொல்றதைக் கேட்போம்'' என்று அவனை அடக்கிவிட்டு, இவனிடம், ''என்ன வெறுப்பு உனக்கு? ஏன் வீட்டை விட்டு வந்துட்டே?'' என்று பரிவோடு விசாரித்தது.

''குடும்பமா அது!'' என்று காறித் துப்பினான் அவன். ''எனக்கு அங்கே துளி மரியாதை கிடையாது. மதிப்புக் கிடையாது. பாசம் கிடையாது. பரிதாபம் கிடையாது. சீசீ!''

வௌவால்கள் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டு 'பாவம்' என்று அனுதாபம் தெரிவித்தன. இவர்களெல்லாம் சுவாரசியமாக வம்பளந்து கொண்டிருப்பதைப் பார்த்து இன்னும் இன்னும் நிறைய வௌவால்கள் அவனைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டன. இருட்டு ரொம்ப அதிகமாகிவிட்டதால் எவ்வளவு வௌவால்கள் அங்கே இருக்கின்றன என்று அவனால் எண்ண முடியவில்லை. அவைகளின் கும்பலான நாற்றம் மட்டும் அவன் நாசியைத் துளைத்தது.



''ஊம்? அப்புறம்?'' என்றது கிழட்டு வௌவால். ''சும்மா மொத்தமாய்ச் சொன்னால் எப்படி? விவரம் சொல்லு.''

''சொல்லவே அவமானமாயிருக்கிறது'' – அவன் சொன்னான்.

''பரவாயில்லை... சொல்லு.''

''முதலில் என் பெண்டாட்டி. அவளுக்கு என்னிடம் கடுகத்தனை பிரியம் கூடக் கிடையாது. எங்கெங்கோ அலைந்து திரிந்து நாலு காசு சம்பாதித்துக் கொண்டு வருகிறானே என்று ஒரு நாளாவது நினைத்துப் பார்த்திருப்பாளா? கிடையாது. ராத்திரி பூரா உடம்பு வலி தாங்காமல் அம்மா அப்பா என்று முனகிக் கொண்டிருப்பேன். ஐயோ பாவம் என்று கையைக் காலைப் பிடித்து விடுவாள் என்கிறீர்களா? ஊகூம். அவள் பாட்டுக்குக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருப்பாள். எப்படி இருக்கும் எனக்கு!

''நேற்று பார். ராத்திரி பதினோரு மணிக்கு நான் வருகிறேன் வீட்டுக்கு. நல்ல பசி. இவள் எழுந்திருந்து சாப்பாடு போட வரவேயில்லை. நானே சமையல்கட்டுக்குப் போய் ஒவ்வொரு பாத்திரமாய்த் திறந்து பார்த்தேன். எல்லாம் ஆறிப் போய்ச் சில்லிட்டுக் கிடக்கிறது. 'ஏய், இங்கே வந்து இதையெல்லாம் சுட வச்சுப் போடேன்!' என்று கூப்பிடுகிறேன். பதிலே காணோம். புரட்டிப் புரட்டி எழுப்பினால், 'இனிமேல் என்னால் அடுப்பு மூட்ட முடியாது. இருக்கிறதை எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடுங்க' என்று சொல்லி விட்டுக் குப்புறப் படுத்துவிட்டாள். எனக்கு மனசு வெறுத்துப் போச்சு.

''அவள்தான் அப்படிப் போகட்டும். என் தம்பி ஒருத்தன் இருக்கிறான். சின்ன வயசில் என் அம்மா அப்பா இறந்து

போனது முதல் என்னோடேயே இருக்கிறவன். வேலைக்குத்
திண்டாடிக் கொண்டிருந்தவன், என்னவோ சர்வீஸ் கமிஷன்
பரீட்சை எழுதினான், ஒரு வேலை கிடைச்சுப் போச்சு. ரயில்வே
யில் வேலை. ஐந்நூறோ அறுநூறோ சம்பாதிக்கிறான் ஏழெட்டு
மாசமாய். ஆனால் முன்னூறு நானூறு ரூபாய் தன் சொந்தச்
செலவுக்கு வைத்துக் கொண்டு மிஞ்சியதைத்தான் என்னிடம்
தருகிறான். எப்படி இருக்கு, பாரேன்.

''ஒரு வாரம் முந்தி எனக்கு ஒரு கடுமையான முடை.
நூறு ரூபாய் ஒரு இடத்தில் கைமாற்று வாங்கியிருந்தேன்.
அவன் என்னைக் கழுத்தில் துண்டைப் போட்டு முறுக்கினான்,
இந்தக் கணமே கொடுத்தால்தான் ஆச்சு என்று. 'டேய் தம்பி,
சம்பளப் பணம் வச்சிருப்பியே? கொடுடா'ன்னு கேட்கிறேன்.
'என்கிட்டே ஏதண்ணா பணம்?' என்று சொல்லி விட்டுத் தன்
பாட்டுக்குப் போய் விட்டான். தம்பியா இவன்!

''அப்புறம், என் சொந்தப் பெண். வயது பத்தொன்பது
ஆகிறது. குறளகத்திலே வேலை பார்க்கிறாள். சொன்ன பேச்சைக்
கேட்க மாட்டாள். அம்மாவுக்கு மேலே விதண்டா வாதம்.
எதிர்ப் பேச்சு. முந்தா நாள் என்ன பண்ணினாள் தெரியுமா?
பேப்பர் படித்துக் கொண்டேயிருக்கிறேன்... திடீரென்று
எவனோ ஒரு பையனை அழைத்துக் கொண்டு வந்து என்
காலில் விழுகிறாள். 'இவர் என்னோடு வேலை செய்கிறவர்.
இன்று காலை கோவிலில் கல்யாணம் பண்ணிக் கொண்
டோம்' என்கிறாள்! வந்ததே பாருங்கள் கோபம் எனக்கு.
வெளியே பிடித்துத் தள்ளிக் கதவைச் சாத்திவிட்டேன்.

''நினைத்துப் பார்க்கப் பார்க்க, இந்தக் குடும்பத்தில்
நான் ஒரு தலைவன் என்று சொல்லிக் கொள்ளவே எனக்கு
வெட்கமாயிருந்தது. உறவும் வேண்டாம்; மண்ணும் வேண்
டாம் என்று வெளியேறி வந்து விட்டேன்...''



அவன் சொல்லி முடித்ததும் இங்கொன்று அங்கொன்
றாய்ச் சில குட்டி வௌவால்கள் புறப்பட்டுச் சென்றன. பெரும்
பாலான கிழங்கள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தன.
ஒரு வௌவால் சொல்லிற்று, ''நீதான் எங்க இடத்துக்கு வந்து
உட்கார்ந்திருக்கிறே, நீதான் வெளியே போகணும் என்று
சொன்னேன் இல்லையா, அதை வாபஸ் வாங்கிக்கிறேன். நீ
எங்களில் ஒருத்தன். சரியான இடத்துக்குத்தான் வந்திருக்
கிறே!''

''உங்களில் ஒருத்தனா!'' அவன் திடுக்கிட்டான்.

''ஆமாம். உன் உடம்பைப் பார்த்தால் உனக்கே தெரி
யுமே?'' என்றது ஒரு கிழம்.

அப்போது இருட்டு கொஞ்சம் விலகி, நாலாம் பிறைச்
சந்திரனின் மெல்லிய ஒளிக் கீற்று புறப்பட்டிருந்ததால் அவ
னால் தன் தேகத்தைப் பார்த்துக் கொள்ள முடிந்தது. பார்த்துக்
கொண்டதும் அதிர்ச்சியும் அச்சமும் அவன் உள்ளத்தில் புகுந்
தன. உடம்பு சுருங்கினாற் போலிருந்தது. தோல் அருவருப்
பாக மெல்லியதாக ஆனமாதிரி இருந்தது. தோள்பட்டை இரண்
டிலும் ஏதோ இறக்கை போன்ற முண்டு முளைத்தாற் போல்
இருந்தது.

ஒரு வௌவால் சிரித்துக் கொண்டே சொல்லியது, ''நீ
உன் கதையின் ஒரு பக்கத்தைத்தான் சொன்னாய். மறு பக்கம்
எங்களுக்குத் தெரியாதென்று நினைக்கிறாயா?''

''மறு பக்கமா? என்ன அது? நான் சொன்னதெல்லாம்
சத்தியம்!''

''நீ சொன்னதெல்லாம் சத்தியம்தான். ஆனால் சொல்லா
ததும் சத்தியம். பெண்டாட்டியைப் பற்றி அத்தனை சொன்

னாயே, கல்யாணம் பண்ணிக் கொண்டு இத்தனை வருடங்களில் ஒரு நாளாவது அவளைப் பெண்டாட்டி என்று மதித்து அரைக் காசு சம்பளத்தை அவள் கையில் கொடுத்திருக்கிறாயா? ஒரு முழம் பூ வாங்கித் தந்ததுண்டா?

''சரி, உன் தம்பியின் கதை என்ன? அம்மா அப்பா போனதிலிருந்து உன்னோடு இருந்தவன்தான். ஆனால் அவனைப் படிக்க வைத்து வேலை வாங்கிக் கொடுத்து ஆளாக்க வேண்டும் என்று என்றைக்காவது நீ முயற்சி செய்ததுண்டா? அவன் பாட்டுக்குப் பிச்சைக்காரன் போல அலைந்து திரிந்தானே தவிர, அண்ணன் என்பதற்காக நீ ஒரு துரும்பை எடுத்துப் போட்டதுண்டா? அவன் எதற்காக உன்னிடம் தன் சம்பளப் பணத்தைத் தர வேண்டும்?

''போகட்டும், உன் பெண்ணின் கதை என்ன? ஐந்து வருடமாய்ச் சம்பாதிக்கிறாள். உன்னிடம் கொண்டு வந்து தருகிறாள். அதை வெட்கம் இல்லாமல் வாங்கிக் கொண்டு உன் உல்லாசத்துக்கும் குதிரைப் பந்தயத்துக்கும் வேட்டு விட்டாயே தவிர, மாசாமாசம் அதிலே கொஞ்சம் மிச்சப் படுத்தி வைத்து அவளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலாம் என்று என்றைக்காவது நினைத்துப் பார்த்ததுண்டா?''

அவனுக்கு இப்போது அந்த வௌவாலின் பேச்சைக் கேட்கவே புத்தி செல்லவில்லை. தன் உடம்பைத் தானே தடவிப் பார்த்துப் பார்த்து மிரண்டு போயிருந்தான். ஏன் இப்படி உடம்பு சுருங்கிக் கொண்டே வருகிறது? ஏன் தோள் பட்டையில் முண்டு நீண்டு கொண்டே போகிறது?

கிழ வௌவால் சொல்லிற்று : ''கணவன் என்கிற முறையில், அண்ணன் என்கிற முறையில், தகப்பன் என்கிற முறையில் நீ எந்தக் கடமையையும் செய்யாமல், மற்றவர்கள் உனக்கு



எதுவும் செய்யவில்லை என்கிறாய்? உலகத்தை இப்படித் தலைகீழாகப் பார்க்கிற நீ, எங்களில் ஒருவன்!''

சுற்றியிருந்த நூற்றுக்கணக்கான வௌவால்கள், ''நீ எங்களில் ஒருவன்! எங்களில் ஒருவன்!'' என்று கூவுவது அவன் செவிக்குள் புகுந்தது.

அவன் கண் பார்வை குறைந்து கொண்டேயிருந்தது. உடம்பு சுருங்கிக் கொண்டேயிருந்தது. இறக்கைகள் விரிந்து கொண்டேயிருந்தன.

★

# 18. கழுத்தை நெறித்து...

**"எ**ன்ன யோசனை? இட்டிலி சாப்பிடுங்கள்'' என்றாள் தனலட்சுமி.

''த்சு'' என்றார் போலீஸ் துணைக் கமிஷனர் நம்பிராஜ்.

''த்சுதான் – கொத்சு'' என்று தட்டை இன்னும் அருகில் நகர்த்தினாள்.



''கும்பகோணத்திற்குப் போய்விட்டு வந்து அங்கே ஏதோ ஓர் ஓட்டலில் பிரமாதமாய்க் கொத்சு பண்ணினார்கள் என்று சொன்னீர்கள் இல்லையா? பக்கத்து வீட்டுக்காரர்கள் கும்ப கோணத்துக்காரர்கள்தான். அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டு செய்திருக்கிறேன்.''

''ஒன்றும் பிடிக்கவில்லை, தனம். அந்தப் பாலசுந்தரம் கொலை வழக்கு ரொம்ப உறுத்துகிறது மனசை. விவரமாய்ச் சொன்னால்தான் உனக்குப் புரியும்.''

சொல்ல ஆரம்பித்தான்.

**வே**ல்நகரில் கோடீசுவரர் பாலசுந்தரம் மர்மமான முறையில் இறந்து கிடக்கிறார் என்று செய்தி வந்தபோது கொள்ளை அடிப்பதற்குச் செய்யப்பட்ட கொலை என்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால் ஒரு பைசாகூடத் திருட்டுப் போகவில்லை.

அவருடைய விதவை மருமகள் புஷ்பா குமுறிக் குமுறி அழுது கொண்டிருந்தாள். அவளுடைய நாலு வயதுப் பையன் சீனி, அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு விஷயம் விளங்காமல் விழித்துக் கொண்டிருந்தான்.

காலையில் பாலசுந்தரத்தின் படுக்கையை வழக்கம்போல் சரி செய்ய வந்த வேலைக்காரன்தான் அவர் அலங்கோலமாக மரித்துக் கிடப்பதை முதன் முதல் கண்டவன். அவன் குய்யோ முறையோ என்று போட்ட கூக்குரலைக் கேட்டு மற்றவர்கள் ஓடி வந்தார்கள். காற்றுக்காகப் பால்கனி பக்கத்துக் கதவைத் திறந்து வைத்திருப்பது பாலசுந்தரத்தின் வழக்கம். அந்த வழி யாக எவனோ உள்ளே நுழைந்து அவரைக் கொலை செய் திருக்க வேண்டும் என்று எல்லோரும் ஊகித்தார்கள்.

நைலான் கயிற்றினால் கழுத்து நெறிக்கப்பட்டிருந்தது.
அத்துடன் பிரேத பரிசோதனையின்போது இன்னொரு விஷய
மும் தெரிந்தது. வழக்கமாகச் சாப்பிடும் தூக்க மாத்திரையைப்
பாலசுந்தரம் அன்றிரவு கூடுதலாகவே இரண்டு சாப்பிட்டிருந்
தார். ஆனால் உயிரைப் போக்கக் கூடிய அளவுக்கு அல்ல.
முக்கியமாகக் கழுத்து நெறிக்கப்பட்டதால்தான் மரணம் நேர்ந்
திருக்கிறது என்று சவ பரிசோதனை அறிக்கை சொல்லியது.

பல்வேறு வகையான வியாபாரங்களும் கமிஷன் ஏஜென்ஸி
களும் செய்து வந்த பெரும் பணக்காரர் அவர். ஆகவே எவ்
வளவோ வகைகளில் அவருக்கு விரோதிகள் இருக்கக் கூடும்.
குடும்ப நிலவரம் விசாரித்தேன்.

மூன்று வருடங்களுக்கு முன்பு அவருடைய ஒரே மகன்
பழனிகுமார் இந்தப் புஷ்பாவைக் காதலித்துக் கல்யாணம்
செய்து கொண்டான். இவள் வீடு வீடாகச் சென்று விற்பனை
செய்யும் ஒரு சாதாரண சேல்ஸ் கேர்ள். எனவே அந்தத் திரு
மணம் பாலசுந்தரத்துக்குப் பிடிக்கவில்லை. பழனிகுமார்
வீட்டை விட்டு வெளியேறி, புஷ்பாவுடன் குடித்தனம் செய்
தான். ஒரு குழந்தையும் பிறந்தது. ஆனால் ஒரு கொடுமை
யான நோயில் இறந்து விட்டான்.

பாலசுந்தரம் பச்சாதாபப்பட்டு, தன் பேரன் சீனியையும்,
விதவை மருமகள் புஷ்பாவையும் தன் வீட்டுக்கே அழைத்து
வந்து விட்டார். இரண்டு வருடமாக அவர்கள் பாலசுந்தரத்
துடன்தான் வசித்து வருகிறார்கள். தாத்தாவுக்குப் பேரனிடம்
மிகவும் வாஞ்சை. எப்போது பார்த்தாலும் அவனுடன் விளை
யாடிக் கொண்டிருப்பார்.

இவ்வளவுதான் புஷ்பா சொன்னாள். ஆனால் வேலைக்
காரனைத் தனியே விசாரித்தபோது இன்னும் அதிக விவரங்கள்
தெரிந்தன.



மகன் பழனிகுமார் காதல் கல்யாணம் செய்து கொண்ட
தில் கடும்கோபம் கொண்டிருந்தார் பாலசுந்தரம். தன் சொத்தில்
ஒரு காலணா கூட அவனுக்குக் கிடையாது என்று சொன்ன
தோடு மட்டுமல்லாமல் தனிக் குடித்தனம் செய்ய முடியாமல்
பல தடைகள் செய்தார். அவனுக்குக் குடியிருக்க வீடு கொடுக்கக்
கூடாது என்றும், வேலை கொடுக்கக் கூடாது என்றும் பல
பேரை நிர்ப்பந்தப்படுத்தினார். கொடிய நோய்க்கு ஆளாகிப்
பழனிகுமார் படுத்த படுக்கையாகக் கிடந்தபோதுகூட, தன்
னிடம் பணம் கறக்க நாடகமாடுகிறான் என்றுதான் நினைத்
தார். ஆஸ்பத்திரியில் போய்ப் பார்க்கவில்லை. அவன் இறந்து
போன பிறகுதான் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தன் துவேஷத்தை
அளவுக்கு மீறி வெளிப்படுத்தி விட்டோம் என்று ஞானோ
தயம் பெற்றிருக்கிறார். அதற்குப் பின்னரே மருமகளையும்
பேரனையும் வீட்டுக்கு அழைத்து வந்திருக்கிறார்.

இந்தத் தகவல்களுடன் நான் புலன் விசாரணை செய்து
கொண்டிருந்தபோது –

ஒருநாள் என் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது – கை
யெழுத்து இல்லாத மொட்டைக் கடிதம்.

''புஷ்பா நல்ல பெண் என்று நினைத்திருக்கிறாய். அவள்
தான் கொலையைச் செய்தவள். அவளுடைய அறையில் பால
சுந்தரத்தின் டயரிகளை ஒளித்து வைத்திருக்கிறாள். ஏன்?''

இதுவும் ஆராயப்பட வேண்டிய சமாசாரம்தான் என்று
முடிவு செய்து பாலசுந்தரத்தின் வீட்டுக்குச் சென்றேன். புஷ்பாவை
அவளுடைய அறைக்கே அழைத்துச் சென்று, தனியே
அவளை விசாரிக்க வேண்டி இருக்கிறது என்று சொன்னேன்.

உடனே விசித்து விசித்து அழ ஆரம்பித்து விட்டாள்.
பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டு, குழந்தை சீனியை

வேலைக்காரனுடன் வெளியே அனுப்பி விட்டு, ''ஒருநாள் இப்படி வரும் என்று நான் முன்பே பயந்ததுதான். ஏனென்றால் என் மாமனார் மீது நான் வைத்திருந்த மதிப்பு மற்றவர்களுக்குத் தெரியாது. நான்தான் அவரைக் கொலை செய்து விட்டேன் என்று கூட வம்பு பேசுவார்கள் என நினைத்தேன். எல்லாம் என் விதி'' என்றாள்.

''உங்கள் மனசைக் கஷ்டப்படுத்துவதில் எனக்கும் வருத்தம்தான். ஆனால் போலீஸ்காரர் என்ற முறையில் என் கடமையைச் செய்யத்தான் வேண்டி இருக்கிறது'' என்று சொல்லி விட்டு, ''உங்கள் மாமனாரின் டைரிகளைக் கொஞ்சம் எடுத்துத் தருகிறீர்களா?'' என்று கேட்டேன்.

அவள் திடுக்கிட்டுப் போனாள். ''மாமனாரின் டைரியா? ... என்னிடம் ஏது?'' என்றாள்.

''இதோ பாருங்கள். இப்போதுள்ள நிலைமையில் நீங்கள் எதை மறைத்தாலும், உங்களுக்குத்தான் ஆபத்து. நாங்களாகச் சோதனை போட்டு அவைகளை எடுத்தால் நன்றாயிராது'' என்றேன் கண்டிப்பான குரலில்.

''தயவு பண்ணி என்னை மன்னியுங்கள். அந்த டைரிகளைக் கேட்காதீர்கள். விட்டுவிடுங்கள்'' என்று கெஞ்சினாள்.

அவள் மறுக்க மறுக்க என் சந்தேகம் அதிகரித்தது. ''நான் சோதனை போட வேண்டியதுதான்'' என்று கூறிவிட்டு, டைரிகளைத் தேட ஆரம்பித்தேன். அங்கே கட்டிலின் கீழே தேடிய போது, ஒரு பெட்டியில் பத்துப் பதினைந்து வருடத்து டைரிகள் இருந்தன. வெளியில் எடுத்தேன்.

கடைசி மூன்று நாலு வருட டைரிகளை மட்டும் புரட்டினேன்.

முக்கியமாக மகன் இறந்த பிறகு, புஷ்பா இந்த வீட்டுக்கு வந்த பிறகு, எழுதியுள்ள விஷயங்களைப் படித்தேன்.



புஷ்பாவைப் பற்றி ஒரு வார்த்தை தப்பாக எழுதவில்லை. அவளும் பேரக் குழந்தையும் தன் மீது பொழியும் பாசத்தைப் பற்றியே எழுதியிருந்தார். புஷ்பா எவ்வளவு பணிவாயும், அவர் மீது மதிப்பு மரியாதையாயும் இருக்கிறாள் என்பதைக் குறிக்கும்படி பல சம்பவங்களை விவரித்திருந்தார்.

என் முகத்தில் வழிந்த அசட்டுத்தனத்தைக் கைக்குட்டையினால் துடைத்துக் கொண்டு டைரிகளை அவளிடம் திருப்பித் தந்தேன்.

''என் மாமனாரின் ஞாபகார்த்தமாக இவைகளை ரொம்பப் பிரியமாய்ப் பாதுகாத்து வருகிறேன். போலீஸ் கைக்குப் போனால் பிறகு திரும்பக் கிடைப்பது ரொம்பச் சிரமம் என்று சொல்வார்கள். அதனால்தான் உங்களிடம் இவைகளைத் தர நான் இஷ்டப்படவில்லை'' என்று புஷ்பா சொன்னாள்.

''தட்ஸ் ஆல் ரைட்'' என்று சொல்லி விட்டு விடை பெற்றேன்.

இருந்தாலும் என்னவோ உறுத்திக் கொண்டே இருந்தது.

நம்பிராஜ் சற்று நிறுத்தினார்.

''அப்புறம் என்ன சந்தேகம்? அந்தப் பெண் தங்கமானவள் என்று செத்துப் போன மாமனாரே எழுதி வைத்திருக்கிறாரே!'' என்று தனலட்சுமி கேட்டாள்.

''உன்னைப் போலச் சாதாரண மனிதர்கள் அப்படித்தான் நினைப்பார்கள். நாங்கள் போலீஸ்காரர்கள். வேறு கண்ணோட்டத்தில் பார்ப்போம்'' என்றார் நம்பிராஜ். ''தன் மீது சந்தேகம் வராதபடிக்குப் போலீஸின் கவனத்தை வேறு திசையில் திருப்பி விடுவது குற்றவாளிகளுக்கு வழக்கம்தான். புஷ்பா ஒரு வேளை அவர்களைக் காட்டிலும் கெட்டிக்காரியாக இருந்திருக்கலாம் அல்லவா?''

''எப்படி?'' என்று தனலட்சுமி கேட்டாள்.

''அந்த மொட்டைக் கடிதத்தை வேண்டுமென்றே கோணல் மாணலாய் எழுதியிருந்த போதிலும் அது ஒரு பெண்ணின் கையெழுத்து என்று எனக்குத் தோன்றியது. வேண்டுமென்றே தன்மீது போலீசுக்குச் சந்தேகம் வருகிற மாதிரி பண்ணி விட்டு, பிறகு அந்தச் சந்தேகம் தப்பானது, உண்மையில் அவள் ரொம்ப நல்லவள் என்று தெரியும்படி திட்டமிட்டுப் பண்ணி இருக்கலாம் இல்லையா? அதற்குப் பிறகு அவள் மீது நாங்கள் கண் வைக்காமல் இருப்போம் இல்லையா?''

''அப்பப்பா! உங்கள் போலீஸ் புத்தியே மகா குயுக்தி'' என்றாள் தனலட்சுமி.

''கேள். இந்த எண்ணம் தோன்றியதும் அடிக்கடி புஷ்பா வின் வீட்டுப் பக்கம் போய்க் கொண்டிருந்தேன். என் சந்தேகப் பார்வையைக் கூர்மையாக்கிக் கொண்டேன். நான் பட்ட பாடு வீணாகவில்லை. குற்றவாளியைக் கண்டுபிடித்தாயிற்று.''

''அப்பாடா! குற்றவாளியைப் பிடித்தாயிற்றா? இதை முதலிலேயே சொல்வதற்கு என்ன?'' என்று இட்டிலியை விண்டு, கொத்சுவில் தோய்த்து அவரிடம் நீட்டினாள். ''பல காரத்தைச் சாப்பிடுங்கள். விஷயம் முடிந்த பிறகு ஏன் மனசு சரியில்லை, டிபன் பிடிக்கவில்லை என்றெல்லாம் பேசுகிறீர் கள்? சாப்பிடுங்கள்...''

''நீ அசடு மட்டுமில்லை, தனம். அவசரக்காரியும் கூட'' என்று நம்பிராஜ் அவளைக் கடிந்து கொண்டார். ''குற்ற வாளியைப் பிடித்தேன் என்று சொன்னேனே தவிர, யார் குற்ற வாளி, எப்படிப் பிடித்தேன் என்று சொன்னேனா? நீதானாகட் டும், ஒரு ஏ.ஸி.யின் மனைவியாய் லட்சணமாய் என்னென்ன நடந்தது என்று கேட்க வேண்டாமோ?''



''மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்கு உங்கள் போலீஸ் கதையைக் காட்டிலும் என் கணவன் டிபன் சாப்பிடாமல் இருக் கிறாரே என்கிற கவலைதான் பெரிது. சரி, சொல்லுங்கள்'' என்றாள் தனலட்சுமி.

நம்பிராஜ் மறுபடி சொல்ல ஆரம்பித்தார்.

ஒரு மாதத்துக்கு மேல் ஓடி விட்டது.

சரி, எத்தனையோ கண்டுபிடிக்க முடியாத கொலைக் கேஸ்களில் இதுவும் ஒன்று என்று தீர்மானித்து, கைகழுவி விட நினைத்திருந்தேன்.

நேற்றுக் காலை தற்செயலாகப் பாலசுந்தரம் வீட்டின் பக்கம் போய்க் கொண்டிருந்தபோது, வாசலில் ஒரு லாரி நின்றிருப்பது தெரிந்தது. புஷ்பா அங்கே நின்று கொண்டு சாமான்களை லாரியில் ஏற்றிக் கொண்டிருந்தாள்.

மோட்டார் பைக்கை நிறுத்தி, ''ஜாகை மாற்றுகிறீர்களா, என்ன?'' என்று விசாரித்தேன்.

''ஆமாம், சார். நானே உங்களை வந்து பார்த்து புது விலாசத்தைச் சொல்ல வேண்டுமென்று நினைத்திருந்தேன். ஏதாவது தகவல் கிடைத்தால் வந்து சொல்லுங்கள்'' என்று கூறி, புதிய விலாசத்தைத் தந்தாள். ''இங்கே தனியாக இவ் வளவு பெரிய வீட்டில் இருப்பது என்னவோ போலிருக்கிறது. மாமனாரைத் தினம் தினம் சொப்பனத்தில் பார்த்தேன். பயமாக இருக்கிறது'' என்றாள்.

''உண்மைதான்'' என்று கூறிவிட்டு திரும்ப நினைத்தேன்.

தற்செயலாய் ஒரு பிளாஸ்டிக் கூடை லாரியில் ஏற்றப் படுவது என் கண்ணில் பட்டது. அந்தக் கூடையில் இருந்தது

எல்லாம் குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருள்கள் தான். ரயில், ஏரோப்ளேன், பந்து, மட்டை, கார்...

இவைகளுக்கு நடுவே ஒரு குழந்தைப் பொம்மையும் இருந்தது. செக்கச் செவேலென்ற துணிப் பொம்மை. ஓரடி நீளம் இருக்கும். அதன் கழுத்தில் ஒரு கயிறு மாட்டப்பட்டிருந்தது. சுருக்குப் போட்ட மாதிரி.

குபீரென்று ஒரு சந்தேகம் ஏற்பட்டது.

புஷ்பாவின் கூடவே உள்ளேயும் வெளியேயும் ஓடித் திரிந்து கொண்டிருந்த குழந்தையை – புஷ்பாவின் மகனை உற்றுக் கவனித்தேன்.

எனக்கு உடம்பெங்கும் வியர்த்துக் கொட்டியது. அப்படியும் இருக்குமா, இருக்குமா?

சாதாரணமாகக் குழந்தையைக் கொஞ்சுகிற மாதிரி, ''என்னடா தம்பி? வேறே வீட்டுக்குப் போகிறாயா?'' என்று அவன் தலையைக் கோதி விட்டபடி கேட்டேன்.

''உக்கும்'' என்றான்.

புஷ்பா உள்ளே போயிருந்தாள். ''உன் பொம்மை எல்லாம் எடுத்துக் கொண்டு விட்டாயா?'' என்றேன்.

''ஓ!'' என்றான்.

''மாடியில் இன்னும் ஏதாவது விட்டுப் போயிருக்கும். வருகிறாயா, பார்த்து விடலாம்'' என்றேன்.

''வா'' என்று என் கையைப் பிடித்துக் கொண்டது குழந்தை.

பாலசுந்தரத்தின் கட்டில் வெறுமையாக இருந்தது. மெத்தைகள் அகற்றப்பட்டிருந்தன. புஷ்பா வந்துவிடப் போகிறாளே



என்ற பதட்டத்துடன் அவசரமாக அந்தக் கட்டிலில் படுத்துக் கொண்டேன். மல்லாந்து படுத்து என் மார்பின் மீது குழந்தையை உட்கார்த்தி வைத்துக் கொண்டேன்.

மாடி ஏறும்போதே படியில் கிடந்த ஒரு சணல் கயிற்றை எடுத்து வைத்திருந்தேன். அதைக் குழந்தையிடம் கொடுத்து, ''என் கழுத்தை இறுக்கு பார்க்கலாம்'' என்றேன்.

தினம் தினம் பழகியவன் போல வெகு எளிதாக அந்தக் கயிற்றை என் கழுத்தைச் சுற்றிக் கட்டி இரண்டு நுனியையும் பிடித்து இழுத்தான்.

மூச்சுத் திணறும் முன்னாலே கயிற்றை விலக்கி விட்டு, ''பலே, பலே! இப்படித்தான் தாத்தாவையும் செஞ்சியா?'' என்று கேட்டேன்.

''பொம்மைக்கு.... அதே மாதிரி தாத்தாவுக்கு'' என்று மழலையில் சொன்னான்.

திக்கென்று எனக்கு மார்பை அடைத்தது. ஒரே நிமிடத்தில் எல்லா உண்மையும் புரிந்தது.

புஷ்பா தன் மாமனாரை மன்னித்த மாதிரி வெளியில் காட்டிக் கொண்டாளே தவிர, உண்மையில் மன்னிக்கவில்லை. தன் காதலனை, கணவனை, நொந்து நொந்து சாகும்படி செய்த அந்தத் திமிர் பிடித்த பணக்காரரைப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று திட்டமிட்டுக் காத்திருக்கிறாள்.

குழந்தைக்கு ஒரு பொம்மையை வாங்கித் தந்து, ஒரு நைலான் கயிற்றையும் கொடுத்து, பொம்மையின் கழுத்தை இறுக்குவதற்குக் கற்றுத் தந்திருக்கிறாள். அதே சமயம் தாத்தாவின் மார்பின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு, விளையாட்டாகச் சுருக்குப் போடுவதற்கும் பழக்கி இருக்கிறாள்.

அவன் அப்படிச் செய்யும் போதெல்லாம், 'இதென்னடா பைத்தியக்கார விளையாட்டு' என்று பாலசுந்தரம் அவனை விலக்கி இருக்கிறாரேயொழிய, இது ஒரு கொலைச் செயலுக் கான பயிற்சி என்று நினைக்கவில்லை.

நம்பிராஜ் கதையை முடித்ததும் தனலட்சுமி அவநம்பிக் கையோடு சிரித்தாள். ''எங்காவது ஒரு நாலு வயதுக் குழந்தை ஒரு பெரிய ஆளைக் கழுத்தை இறுக்கிக் கொல்ல முடியுமா?'' என்று கேட்டாள்.

''எல்லோரும் உன்னைப் போல்தான் நினைப்பார்கள் என்பதுதான் புஷ்பாவின் திட்டமும்'' என்றார் நம்பிராஜ். ''நீ மூன்று விஷயங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவது, அந்தக் குழந்தை ரொம்பப் புஷ்டியாய், திடகாத்திரமாய் வளர்ந் திருக்கிறான். இரண்டாவது, ஒரு வருட காலம் தினம் தினம் பயிற்சி செய்து மென்னியைச் சுற்றிக் கயிற்றை இறுக்குவதில் வெகு தேர்ச்சி அடைந்திருக்கிறான். மூன்றாவது, பாலசுந்தரம் திமிறிக் கொண்டு எழுந்திருக்க முடியாதபடி, பாலில் நிறைய தூக்க மாத்திரை கலந்திருக்கிறாள்.''

''சரி, இப்ப என்ன ஆயிற்று?''

''குழந்தையைச் சாட்சியாக வைத்து, சில பிரத்யேகமான போலீஸ் முறைகளைப் பிரயோகித்தோம். குற்றத்தைப் புஷ்பா ஒப்புக் கொண்டு விட்டாள். உலகம் இப்படி எல்லாம் இருக்கிறதே என்பதை நினைக்கும் போதுதான் எதுவுமே பிடிக்கவில்லை.''

''உலகத்தைப் பற்றி அப்புறம் பேசலாம். சாப்பிடுங்கள். கொத்சு – கும்பகோணம் கொத்சு'' என்றாள் தனலட்சுமி.

நிறைந்தது